பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஏப்ரல் 2022



நேர்காணல்
பக்கம் 46

## வாய்ப்புகளே
## ஒரு படைப்பாளியை உருவாக்குகிறது

– க(வி)தைச்சிகரம் அ.முத்துவிஜயன்

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்®

உதயம் 1972 – ஏப்ரல் 2022

ஆசிரியர் / வெளியிடுபவர் :

**அமின் மொஹமெட்**

இணையாசிரியர் :

**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**

நிர்வாக ஆசிரியர் :

**சஃபி மொஹமெட்**

ஆசிரியர் குழு :

**ஹிப்ஸ்ர் ரஹ்மான்**

**கவிஞர் பாலமுனை பாறூக்**

**கவிஞர் நெல்லை உலகம்மாள்**

**பாவலர்மணி இராம வேல்முருகன்**

**கவிஞர் தென்றல் கவி**

**வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்**

**கவிஞர் பொன்மணிதாசன்**

**கவிஞர் அ. முத்துசாமி**

**கவிஞர் ஈழபாரதி**

ஆலோசகர்கள் :

**பாட்டரசர் கி. பாரதிதாசன்**

**கவிதாயினி சக்தி ஜோதி**

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,

நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats,
95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்பின் கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.


நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

இயற்கை அன்னையின் எழில் கூடும் வசந்தகாலத்தின் ஆரம்பப் பொழுதுடன் வாச மலர்களோடு, வண்ணப்படைப்புகளையும் வழமை போலவே கரமேந்தி வந்திருக்கிறது உங்கள் இனிய தமிழ்நெஞ்சம். சித்திரை வருடப் பிறப்பு மட்டுமல்லாமல் இன்னும் பல கொண்டாட்டங்களுடன் களை கட்டும் மாதமிது. இருகரம் நீட்டி வசந்தத்தை வரவேற்று உபசரிப்பதோடு, கவனமாக பண்டிகைகளைக் கொண்டாடி மகிழ்வோம் வாருங்கள்!

பிறக்கும் சித்திரைப் பெண்ணானவள் பல சிறப்புகளைக் கொண்டு வந்து நம்மிடம் சேர்க்கட்டும். இன்பம் பொங்கும் இனிய நினைவுகளை அள்ளியிறைக்கட்டும். பல பேறுகளையும், பெருமையையும் கொடையாக எமக்குத் தரட்டும்.




பண்டிகைகளை நாம் கொண்டாடுவதோடு, வசதியற்ற சிலரையும் இணைத்து அவர்களும் கொண்டாடி மகிழ எம்மாலான உதவிகளைச் செய்வது சிறப்பாகும். இதுபோன்ற நற்செயல்கள் மூலம், வருடமெல்லாம் வசந்தம் பூக்கச் செய்வோம். அனைவருக்கும் இனிய சித்திரைப் பிறப்பு மற்றும் மாண்புமிகு நோன்புகால நல்வாழ்த்துகள்!

நன்றி!

தமிழ்நெஞ்சம் அமின்

(ஆசிரியர்)



# திருவள்ளுவர் ஆண்டு 2053

உள்ளுவமே வள்ளுவமே! கொள்ளுவமே நாமதனை!
சொல்லுவோமே தீவடவம், எள்ளுவமே; - தள்ளுவமே!
செல்லுவமே செல்லிடத்து விள்ளுவமே; பல்லுயிர்க்கும்
வள்ளுவமே வாழ்க்கை நெறி.

சொன்னால் புரியாது; சொல்பவர் சொல்கேளாது!
எந்நாளும் தன்னிலையை ஏற்காது; - முன்நிலையை
முப்பாட்டன் வாழ்ந்த முறைமைகளை என் இனமே!
தப்பாமல் ஏற்பாய் தலை.

இன்றேபுத்  தாண்டை இனிதேநாம் கொண்டாட
ஒன்றாவோம்- நாம்தமிழர் ஒன்றானோம் என்றாவோம்!
சென்றாண்டின் துன்பங்கள் சென்றுவிட வள்ளுவரை
நன்றெங்கும் தாள்வணங்கி நாடு.

வாழ்த்துவதோர் பண்பாடு... வன்னத் தமிழ்மக்கள்
சூழ்பகையை நன்குணர்ந்து தொல்தமிழால் - வீழ்த்திடுவோம்!
வள்ளுவமே நன்மறையாம்; வள்ளுவரே நம்இறையாம்!
விள்ளுவ மேஉலகில் வென்று.

கூற்று வரும்வரையில் கூறு தமிழ்மறையை...
போற்றமறக் காதே பொதுமறையை - ஏற்றமுற
ஏற்றிடுவாய் வள்ளுவத்தை! ஏந்தி திருக்குறளை
நோற்றிடுவாய் வாழ்விலுயர் நோன்பு.

நாளை திருக்குறளை நம்பாட்டன் வள்ளுவரின்
தாளை வணங்க தயங்காதே! - ஊளை
நரிகளிடும்! நீஅதனை நாடாதே! நீயோர்
அரிமாவாம்! வாழ்வாய் அறிந்து.



**நீலகண்ட தமிழன்**

ஒருங்கிணைப்பாளர்
சங்கத்தமிழ் இலக்கியப் பூங்கா

## காலமெல்லாம் காத்திருப்பு

பள்ளியில் சேர்க்கைக்கு
பகல் இரவு பாராமல்
பல மணி நேரம் காத்திருப்பு… …

பள்ளியில் சேர்ந்தபின்பு
சாதிச் சான்றிதழுக்கு
பல நாட்கள் காத்திருப்பு… …

பள்ளிப் படிப்பு முடிந்ததும்
கல்லூரி சேர்க்கைக்கு
கால் கடுக்க காத்திருப்பு… …

பட்டம் வாங்கியபின்
வேலை வாய்ப்பு அலுவலகத்தில்
வெகு வருடம் காத்திருப்பு… …

அரசு வேலை கிடைத்தபின்
அகவிலைப் படிக்காக
அன்றாடம் காத்திருப்பு… …

வாங்கிய பணத்திற்கு வாக்களிக்க
வாக்குச் சாவடிகளில்
வரிசையில் காத்திருப்பு… …

கொரோனா தொற்று வந்தோர்
ஆயுளைக் காத்துக் கொள்ள
ஆக்சிஜனுக்கு காத்திருப்பு… …

கொரோனா நிவாரணம் பெற
குடும்ப அட்டைக்கு
கூட்டம் கூட்டமாய் காத்திருப்பு… …

நிவாரணம் பெறும் முன்னர்
நிர்க்கதியாய் இறந்தவர்கள்
தகன மேடை கிடைக்க
மயானத்தில் காத்திருப்பு… …

கொள்ளியில் நெருப்பேற்ற
பிள்ளைகள் வராத நிலையில்
அனாதைப் பிணங்களெல்லாம்
அடுக்கடுக்காய்க் காத்திருப்பு… …

**ப. சரவணன்**
**கல்பாக்கம்**



## யாதுமாகினாய் நீ!

வாசிப்பதற்கு புத்தகத்தை
புரட்டினால் முதற் பக்கத்தில்
புன்னகைத்து கொண்டிருக்கிறாய்!

எழுதுவற்கு பேனையை
கையில் எடுத்தால்
வெற்றுத் தாளில்
மௌனித்திருக்கிறாய்!

தொலைபேசி ஒலிக்க
செவியில் வைத்தால்
ஹலோ வார்த்தையை
உனக்குரியதாக்கியுள்ளாய்

தொலைகாட்சி ஒளிபரப்பாக
ஆசையோடு பார்த்தால்
கதாநாயகன் ரூபத்தில்
நடமாடிக் கொண்டிருக்கிறாய்

இயற்கையை ரசிப்பதற்காய்
ஜன்னலை திறந்தால்
பூக்கள் சாயலில்
அசைந்தாடி அழைக்கிறாய்

உறங்கிட விழிமூடினால்
இருளுக்குள் இன்பமாய்
கதிரை போட்டு
கர்வமாய் அமர்ந்திருக்கிறாய்

**முனீரா அப்துல் வாஹித்.**
சில்மியா புர.

# புன்னகையே உனக்குப் பொன்னகை

Dr ஜலீலா முஸம்மில்
அவசர சிகிச்சைப் பிரிவு, போதனா வைத்தியசாலை மட்டக்களப்பு.

*சிரிக்கும் மனதில் கொழிக்கும் இன்பம்...*
*பிறரை ஈர்க்கும் இதழ்களின் சொர்க்கம்...*
*நேர்மறை எண்ணங்கள் விரிக்கும் சந்தோசம்...*
*கவலை விரட்டும் இயற்கைப் போதை...*

அகத்தினழகு முகத்தில் தெரியும் எனும் பழமொழிக்கேற்ப ஒருவரின் முகமே அவரது மனத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக அமைகிறது. அந்தக் கண்ணாடி பொலிவுற வேண்டுமானால் அங்கே புன்னகை எனும் அணிகலனை நீங்கள் பூண வேண்டும்.நகை, புன்னகை, சிரிப்பு, புன்முறுவல் எனப் பல பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகிறது வதனத்தின் இவ்வணிகலன். வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும், சிரித்து வாழ வேண்டும். மனிதன் சிரிக்கும் நிலையில் ஏழையாக மாட்டான் என்று ஏகப்பட்ட பொன்மொழிகள் உலகில் உலா வரு வதைக் காணலாம். குறுநகை , உவகை, பரவசம், ஆனந்தம், புன்சிரிப்பு, முறுவல், மந்தகாசம் இவை எல்லாமே சிரிப்பின் வடிவங்களே. ஆனால் ஒரே உணர்ச்சி அல்ல என்பது தெளிவு. அவற்றுக்குத் தனித்தனி துல்யங்கள் உண்டு.

ஆறறிவு படைத்த மனிதர்கள் மட்டுமே செய்யக் கூடிய காரியங்களில் ஒன்று புன்னகை ஆகும். உலகின் வேறு எந்த உயிரினங்களுக்கும் கிடைத்திராத மிகப் பெரும் வரப்பிரசாதமே இது. மனிதர்களால் மிகவும் எளிதாகச் செய்யக் கூடிய ஒரு காரியம் என்றால் அது புன்னகை தான். இஸ்லாம் மார்க்கத்தில் மற்றவரைப் பார்த்து ஒருவர் புன்னகைப்பது கூட ஒரு தர்மம், அது நன்மை தருவிக்கும் காரியம் என்று கூறப்படுகிறது. இதன் மூலம் சிரிப்பின் மகத்துவத்தை நாம் அறிந்து கொள்ளலாம். ''இந்தப் புன்னகை என்ன விலை...'' என்ற பாடல் சிரிப்பின் சிறப்பை உணர்த்திச் செல்கிறது.

புன்னகைப்பதன் மூலம் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழி கிடைக்கிறது. மன அமைதியும் தெளிவான சிந்தனை ஓட்டமும் கிடைக்கிறது. ஏன் அன்றைய நாள் உங்களுக்கு நிறைவானதாக அமைகிறது.சுற்றி இருக்கும் அனைத்தையும் மறந்து கவலை இன்றிச் சிரிக்கும்போது வேறு எந்தவித எண்ண ஓட்டங்களும் மனக்கோட்டைக்குள் சஞ்சரிப்பது இல்லை. ஆகையால் மனது ஆழ்கடல் போன்ற அமைதியை அடைகிறது. வேறு எந்த மருந்துகளும் தந்து விடாத நன்மைகளை இந்த அற்புத புன்னகை தந்துவிடுகிறது.

சிரிப்பு மனிதனோடு ஒன்றி விட்ட ஒரு உணர்வின் நிகழ்வாகும். இது ஒரு சாதாரண மனிதனிடமிருந்து பல சந்தர்ப்பங்களில் இயல்பாக வெளிப்படக் கூடிய ஒன்று. சிரிப்பு உடலையும் உள்ளத்தையும் வலிமைப்படுத்தி புத்து ணர்ச்சி தந்து குதூகலத்தைத் ஏற்படுத்தும் மருந்தாகும் என்பது அனைவரும் தெரிந்த ஒன்று. சிரிக்கும் போது உடலில் முந்நூறு தசைகள் செயற்படுகின்றன. உடலிலும், மனதி லும் உள்ள அழுத்தங் களும், கவலைகளும் நீங்கித் தெளிவான நிலையை அது தருகிறது.

''இதயக்குமுறலை மூழ்கடிக்கும் கலை இதமான சிரிப்பு" - என்று அறிஞர் ஹார்ட்லி குறிப்பிட்டுள்ளமை உண்மையே.

முகத்திலுள்ள தசைகளும், நெஞ்சுத் தசைகளும் சிரிக்கையில் உறுதியடைவதால் ஆரோக்கியத்துக்கு சிரிப்பானது வழி சமைக்கிறது. சிரிக்கும் போது ஆழமாக மூச்சை இழுக்கும்போது உடல் கூடியளவு பிராணவாயுவை உள்வாங்கிக் கொள்கிறது. நோயெதிர்ப்புச் சக்தி உடலில் அதிகரிக்கிறது. மூளை அதிகமான சந்தோச ஓர்மோன்களை உடலுக்குள் இறைக்கிறது. அதனால் உவகையில் மனித உள்ளம் திளைக்கிறது. கவலைகள் மறந்து மகிழ்ச்சி பிரவேசம் செய்கின்றது. இறைவனின் அதிசயங்களில் இதுவும் ஒன்றே.

''மனிதனுடைய இதயத்தைத் திறப்பது எது?

அவனை அறியாமல் எழும் சிரிப்புத் தான்'' என்று அறிஞர் கார்லைல் மிகச் சிறப்பாக அர்த்தப்படுத்திக் கூறியிருக்கிறார்.

வாழ்க்கையின் மீதுள்ள உந்துதல் காரணமாக ஒரு நாளில் குழந்தைகள் சராசரியாக நானூறு தடவைகள் சிரிக்கின்றனர். ஆனால் அதேவேளைப் பெற்றோர்கள் பதினைந்து தடவைகள் மட்டுமே சிரிக்கிறார்கள் என்பது கணிப்பிடப்பட்டுள்ளது.

சிரிப்பு என்பதே மனிதரோடு மனிதரை இழுத்துச் சேர்க்கும் ஒரு காந்தமாக செயற்படுகிறது. ஒரே ஒரு சிரிப்பு ஆயிரம் வருத்தங்களை, பாரங்களை நீக்கக்கூடியது. இதற்கீடான பொருள் உலகத்தின் எந்த இடத்திலும் இல்லை எனலாம். சிரிப்பும், அழுகையும் எதிரெதிர்த் துருவங்கள். ஒன்று நெருங்குகையில் மற்றையது விலகி ஓடும்.

வாய் விட்டுச் சிரிப்பது மட்டும் நகைச்சுவையல்ல. "உள்ளம் மகிழ்விக்கும் புன்முறுவல் ஒரு கோடி தடவை சிரிப்பதைவிட உயர்ந்ததாகும்" என்று அறிவாளி ஸ்டர்னே கூறியிருப்பதும் உள்ளத்தால் உணர்ந்து மகிழ்ந்து சிரிக்க வேண்டும் என்பதை மெத்தனமாக எடுத்தியம்புகிறது.

நகைச்சுவை உணர்வு எனக்கு இல்லாதிருந்தால், நான்நீண்டநாட்களுக்கு முன்பே தற்கொலை செய்துகொண்டிருப்பேன்»என்றுரைத்திருக்கிறார் அண்ணல் மகாத்மா காந்தி. எப்போதெல்லாம் முடியுமோ அப்போதெல்லாம் நீங்கள் சிரித்துக் கொள்ளுங்கள், புன்னகைத்துக் கொள்ளுங்கள். அதுவே உலகின் மிகவும் விலை குறைந்த மருத்துவமாகும் என்று லோட் பைரோன் என்ற அறிவாளி கூறியிருக்கிறார்.

''துன்பம் வரும் வேளையிலே சிரியுங்கள்'' என்று திருவள்ளுவரும் ''சிரிப்பு பாதி அழுகை பாதி சேர்ந்ததல்லவா மனித ஜாதி'' என்று பொதுவுடைமைக் கவிஞரும்''சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே'' என்று கவியரசு கண்ணதாசன் அவர்களும் சிரிப்பு பற்றி அழகுற கூறியிருக்கிறார்கள்.

வாய்விட்டுச் சிரித்தால் இரத்த ஓட்டம் சீராகி உடல் நலத்திற்கு நன்மை பயக்கின்றது. வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்று நம் முன்னோர்கள் சும்மாவா சொல்லி வைத்தார்கள்?

பல்வேறு பெருநகரங்களில் தற்போது பலர் ஒன்றுகூடிச் சிரிப்பதை ஒரு வகையான பயிற்சியாக மேற்கொண்டு வருவதை சம காலத்தில் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. உலகின் 65 நாடுகளில் சுமார் 6000 சிரிப்பு மன்றங்கள் இயங்கி வருகின்றதாம் என்பது ஒரு சுவாரஸ்யமான தகவல்.

''சிரிப்பு'' என்பது பல வித ஒலிகளுடன் மகிழ்ச்சியை தெரிவிக்கும் பிரதி பலிப்பாக அமைகிறது. நகைச்சுவையை நாம் கூறும் போதோ அல்லது கேட்கும் போதோ வாய்விட்டுச் சிரிப்பது

சந்தோஷத்தையும் களிப்பையும் வெளிப் படையாகக் காட்டுவதாக இருக்கிறது.

சிரிப்பும் மகிழ்ச்சியும் சேர்ந்து உணர்வை தூண்டும், தட்டியெழுப்பும் கலைவடிவங்களை நகைச்சுவை என அழைக்கிறோம். நகைச்சுவைமனஇறுக்கம் மன உளைச்சல் போன்றவற்றிலிருந்து மீண்டு ஆரோக்கியமான உடல் மன நிலையைப் பேண உதவுகின்றது. நவரசங்களில் ஒன்றான நகைச்சுவை, ஒருவராலோ அல்லது குழுவினராலோ மேற்கொள்ளப்படும் சொல், செயல், காட்சி, நினைவூட்டல் மூலம் நகைச்சுவை உணர்வைத் தூண்டி மகிழ்ச்சியைப் பெருக்குகிறது. நகைச்சுவை ஆற்றலை குழந்தைகள் பெற்றொரிடமிருந்து பிறந்த மாதங்களிலேயே கற்றுக் கொள்கின்றனர்.

***சிரிப்பில் பல வகைகள் உள்ளன.***

1. கோபச்சிரிப்பு
2. சந்தோசச் சிரிப்பு
3. ஆணவச் சிரிப்பு
4. அகங்காரச் சிரிப்பு
5. ஆனந்தச் சிரிப்பு
6. வக்கிரச் சிரிப்பு
7. வஞ்சகச் சிரிப்பு
8. அசட்டுச்சிரிப்பு
9. ஏளனச்சிரிப்பு
10. சாகசச்சிரிப்பு
11. நையாண்டிச் சிரிப்பு
12. புன்சிரிப்பு (புன்னகை)

சுமாராக இருப்பவர்களைக் கூட அழகானவராக மாற்றும் அழகுக்கலை மருத்துவம் சிரிப்புதான் என்பதில் ஐயமே யில்லை. சிரிப்பு ஒரு யோகா மாதிரி. இதயத்திற்கு பயிற்சி அளித்து அதிக அளவு ஆக்ஸிஜனை உடலிற்கும் மூளைக்கும் கொண்டு செல்கிறது.

தினமும் கொஞ்ச நேரம் குழந்தைகள் மனம் விட்டுச் சிரித்தால் அவர்கள் ஆரோக்கியமாக வளர்வார்கள். சிரிப்பு மனதை வலிமைப்படுத்தி புத்துணர்வுடன் வைத்திருக்கும். தினமும் அரை மணி நேரம் மனம் விட்டுச் சிரித்தால் மாரடைப்பை வருவிக்கும் மன அழுத்த வளரூக்கிகளும், அதன் மூலக்கூறுகளும் பெருமளவு குறைந்து உடல் ஆரோக்கியமடையும். அரைமணி நேரம் சிரிப்பது எப்படி என யோசிப்பவர்களுக்கு, அரைமணி நேரம் சிரிப்பது ஒன்றும் கடினமான காரியம் அல்ல என்பது புரிய வேண்டும். ஏதேனும் ஒரு நகைச்சுவைப் படத்தை அரைமணி நேரம் பார்த்தாலே போதும் என வழிமுறையும் சொல்லியுள்ளார்கள்.

***சிரிப்பின் நன்மைகள்***

- வாழ்க்கையினை இனிமையாக்கும்
- பயம், படபடப்பு இருக்காது.
- மனநலம், மனநிலை உற்சாகமாய் இருக்கும்.
- உறவுகள் பலப்படும்.
- கூட்டு முயற்சிகள், வெற்றியாய் முடியும்.
- வேற்றுமைகள் நீங்கும்.
- ஆக்கப்பூர்வ சிந்தனைகளும், செயல் களும் ஏற்படும்.
- சிரிப்பு முக அழகைத் தோற்றுவிக்கும்..

***சிரிக்கும்போது***

"'என்டோர்பின்ஸ்' என்னும் திரவப் பொருள் நம் மூளையில் உருவாகி ஒருவகை யான இயற்கைப் போதையை ஊட்டுகிறது. இதனால் நம் உடலுக்குப் புத்துணர்ச்சி ஏற்படுகிறது."இடுக்கண் வருங்கால் நகுக» (குறள் 621) எனும் குறள் துன்பங்களின் மருந்தாக நகைச்சுவை உணர்வு மேலோங்கி யிருத்தலை உணர்த்தும். மற்றெம் மொழிகட்கு மில்லாத சொல்லாடல் நகைச்சுவை தமிழுக்கே உரிய சிறப்பாகும்.

ஒவ்வொரு நாள் நிறைவடையும் போதும் நமது வாழ்வு குறைந்துகொண்டே போகின்றது என்பதைத் தெளிவு படுத்திக் கொண்டால் கவலைப்படுவதை விடுத்து மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி நிறைவான வாழ்க்கையை வாழ்வதற்கான சந்தோசம் பிறக்கும்.

***எங்கும் புன்னகைக்கக் கற்றுக்கொள்...***

- இடம் பார்த்து சிரிக்கக் கற்றுக் கொள்
- மழலையின் சிரிப்பு மன்மதன் மொழி
- மங்கையின் சிரிப்பும் காதலின் மொழி
- தாயின் சிரிப்பு அன்பின் மொழி
- தகப்பனின் சிரிப்பு அக்கறையின் மொழி
- நண்பன் சிரிப்பு நட்பின் மொழி
- மனைவியின் சிரிப்பு அர்ப்பணிப்பின் மொழி
- கணவன் சிரிப்போ கடமையின் மொழி
- ஏழையின் சிரிப்பு வறுமையின் மொழி
- கோபக்காரனின் சிரிப்பு எகத்தாள மொழி
- சகோதரனின் சிரிப்பு ஆதரவின் மொழி

சிரிப்போம், வாழ்வில்சிறப்போம்...



# நூல் வெளியீடு

வைத்தியர் ஜலீலா முஸம்மில் எழுதிய 'சிறகு முளைத்த மீன்' கவிதை நூல் இந்தியாவில் வெளியீடு செய்யப்பபட்டது.




எழுத்தாளரும் கவிதாயினியுமான ஏறாவூரைச் சேர்ந்த வைத்தியர் ஜலீலா முஸம்மில் எழுதிய 'சிறகு முளைத்த மீன்' எனும் கவிதைத் தொகுதி கடந்த 27/02/2022 ஞாயிறுக்கிழமை மாலை 5.00 மணிக்கு
சென்னைப் புத்தகக்காட்சியில் (YMCA, NANDANAM) எழிலினிப் பதிப்பகத்தால் சென்னைப் புத்தக கண்காட்சியில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கவிஞரின் கன்னி முயற்ச்சியான இந்நூலினை தமிழ் நாடு அரசு மாநில திட்டக் குழு உறுப்பினர, தமிழிசை நடனக் கலைஞர், முனைவர் பத்மசிறீ கலைமாமணி நர்த்தகி நடராஜ் வெளியிட்டு வைத்ததுடன் நூலின் முதல் பிரதியை முனைவர் கவிஞர் கூடல் தாரிக் பெற்றுக்கொண்டார் அத்துடன் பேராசிரியரும் பிரபல பேச்சாளருமான முனைவர் பர்வீன் சுல்தானா அவர்களும் விழாவினை அலங்கரித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# தன்முனைக்கவிதைகள்



எனது தோல்விகள்
எனது வெற்றிகள்
இரண்டிற்கும் இடையில்
இரும்பாயென் நம்பிக்கை

மேடைகள் பல
கொண்டாடும் என்கவிதைகள்
சொந்தங்களின் முணுமுணுப்பில்
சோர்ந்திடும் சுரப்பிகள்

நேற்றில் விட்டதை
இன்றிலெடுக்க முயல்கிறேன்
நாளையைத் தொடவிடாது
எனைக்கவ்விப் பிடிக்கிறது

துணிந்து நில்
அடங்க மறு
எல்லாம் சரி
அடுத்தவர்க்கு மட்டும்

வேண்டுமென்றே நான்
பிடியைத் தளர்த்தினேன்
வீழ்ந்ததாய் எண்ணி
பறக்கட்டும் பாவமவர்கள்

**- ராஜூ ஆரோக்கியசாமி**
திருச்சி, தமிழ்நாடு, இந்தியா



## மண் மீட்போம்

ஒன்று பட்டால் வாழ்வுண்டாம்
உணர்ந்து வாழ்க தமிழினமே!
இன்று நம்மின் நிலையறிந்தே
எழுந்து நடப்போம்! மண்மீட்போம்!
அன்று சிறந்த தமிழாட்சி
அருமை அறிந்து போற்றிடுவோம்!
நன்றே மீண்டும் வாழ்ந்திடவே
நாடிக் காப்போம் தாய்மொழியே!

## இனிக்கும் திருநாள்!

குலவும் மணநாள் கைகோர்த்தே
கோலத் தமிழைப் பாடிடுவீர்!
உலவும் தென்றல் நலமாக
ஓங்கும் வாழ்வைப் படைத்திடுவீர்!
மலரின் மணமாய் எந்நாளும்
மனத்துள் வாசம் வீசிடுவீர்
நிலவே உம்மின் எழில்கண்டு
நெஞ்சம் மகிழ்ந்து வாழ்த்திடுமே!

## அன்னைத்தமிழைப் போற்று!

அன்னைத் தமிழால் உயிர்த்தெழுவோம்!
அருமைக் கதிராய் அறிவடைவோம்!
பொன்னும் பொருளும் புகழனைத்தும்
பொலியும் வண்ணம் நிலையடைவோம்!
முன்னைத் தமிழர் பண்பாட்டை
முழங்கி மேன்மை படைத்திடுவோம்!
விண்ணைப் பிளக்கும் நடைபோட்டு
வெற்றிக் கனியைப் பறித்திடுவோம்!

**ரஞ்சினி சந்திரமோகன்**
(நிலவழகன்)



# பேசாதவர்கள்

பேசாதவர்கள் யார்
பேசாதவர்கள்

பேசக்கூடிவற்றையும்
பேசக்கூடாதவற்றையும்

வேண்டிய வரையில்
பேசிமுடித்துவிட்டு
சற்றே இளைப்பாறும்
அவர்களா பேசாதவர்கள்..?

வருவார்கள் இன்னும்
பேசவேண்டியவற்றை
சேகரித்துக் கொண்டு
வருவார்கள்
அவர்களா பேசாதவர்கள்...?

விடுபட்டவற்றையும்
மறந்தவற்றையும்
பேசித்தீர்க்க மீண்டும்
வருவார்கள்
அவர்களா பேசாதவர்கள்...?

முகச்சுழிப்பாலும் கன்னச்சிவப்பாலும்
வார்த்தைகளை உமிழ்ந்து இன்றும்
உடன்பாட்டில்லா யுத்தம்
நடத்தும் அவர்களா பேசாதவர்கள்...?

தொட்டால் சுடுவது நெருப்பு
தொடாமல் சுடுவது சிரிப்பு
என்று வாழ்க்கை பாடம் நடத்தி

என்னை வளர்த்துவிட்ட
அவர்களா பேசாதவர்கள்...?

பேசக்கூடியவற்றையும்
பேசக்கூடாதவற்றையும்
பேசிமுடித்துவிட்டு
இளைப்பாறும்
அவர்களா பேசாதவர்கள்...?

பார்வையால்
வெந்நீர் ஊற்றி
கேலி கிண்டலில்
உரம் போட்டு
என்னை வளர்த்துவிட்ட
அவர்களா பேசாதவர்கள்...?

பேசாதவர்களின்
சிலநேர அமைதியும்

என்னை எழுத வைக்கிறதே
அவர்களா பேசாதவர்கள்..?

இல்லை இல்லை
பேசாதவர்கள் அல்ல
என்னை பேசவும்
எழுதவும் வைத்தார்களே..!

அவர்கள் பேசாதவர்கள் அல்ல
பேசக்கூடாதவற்றையும்
பேசக்கூடியவற்றையும்
முடிந்தவரைக்கும்
பேச மீண்டும் வருவார்கள்
இன்முகத்தோடு காத்திருக்கின்றேன்.

- செல்வம் பெரியசாமி
நாமக்கல், தமிழ்நாடு




## நூல் மதிப்புரை

நூலாசிரியர் : மலர்விழி மணியம்
வகை : சிறுகதைகள்
பக்கங்கள் : 144
விலை : 120
நூல் பதிப்பாளர் : தமிழ்நெஞ்சம்

தொடர்புகளுக்கு : 9750557987

## அன்பின் வழியது உயிர்நிலை

திருமதி மலர்விழி மணியம் அவர்களை ஒரிரு மாதங்களுக்கு முன்பு “விழியம் பேசும் காலம்” எனும் சிறுகதைத் தொகுப்பின் வழி அறிந்தேன். படைப்பைப் படைப்பாக மட்டுமே பார்ப்பது உத்தமம், படைப்பாளாரோடு ஒப்பிடுவது அபத்தம் என்ற கோட்பாட்டினைச் சற்றுத் தளர்த்திவிட்டு மலர்விழியைப் பற்றி சிந்தித்து ஆழ்ந்து உறைந்து நின்றேன்.

144 பக்கங்களில் 12 சிறுகதைகளில் ஒரு வார்த்தையில் கூட கோபம், பொச்சாப்பு, சுய புலம்பல், மன அழுத்தம், உறவுகள் குறித்த அவநம்பிக்கை, துரோகத்தின் குற்றசாட்டு, பாலினம் சார்ந்த பாரபட்சம், சமூகச் சாடல் போன்ற எவ்வித எதிர்ப்புணர்வினையும் காணமுடியவில்லை.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ், அன்பினால் ஆகாதது உண்டோ, அன்பெனப்படுவது தன்கிளை செறாஅமை,அன்பின் வழியது உயர்நிலை, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல், மனமிருந்தால் மார்க்கம் உண்டு முதலான வாழ்வியலின் விழுமியங்களைத் தன்னுடைய நேர்மறையான எண்ணங்களால் கதைகளாக வண்ணம் தீட்டியுள்ளார் மலர்விழி. ஒவ்வொரு சிறுகதையும் ஒவ்வொரு கதைமாந்தரும், அன்பின் நிழல், அன்பின் அடையாளம், அன்பின் வெளிப்பாடு, அன்பின் முழுமை. அன்பு ஒன்றே அவரின் அத்துணைக் கதைகளிலும் அடிநாதத்தின் ஆனந்த ராகமாய் இனிக்கச் செய்கிறது.

படைப்பு மனம் எல்லாவற்றையும் நேசிக்கும். ஆனாலும் செயற்கை சாயம் பூசித் திரியும். எல்லா வகையான மனிதர்களையும் எவ்வித காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல் முழுமையாக நேசிக்க முடியுமா? சாத்தியமாகுமா? என்கிற கேள்விகளுக்கெல்லாம் ‘ஆம் முடியும்’ என்ற மனநிறைவினை அளிக்கின்றது “விழியம் பேசும் காலம்”- சிறுகதைத் தொகுப்பு.

பெண் பார்க்கச் சென்றவுடனேயே உங்கள் மகள் அல்ல எங்கள்வீட்டு மகாராணி என்று கூறி வரதட்சணை எதுவும் வேண்டாம் என்று நிச்சயிக்கும் மணமகனைப் பெற்றோர். பிரசவித்த

மருமகளுக்கு முதல் வேலையாக காப்பியாற்றிக் கொடுக்கின்ற மாமியார். அடுக்குமாடி குடியிருப்பு வாழ்க்கையிலும் அன்பைப் பரிமாறிக்கொள்கின்ற இளைய தம்பதியினர். சொந்தபந்தம் என்று யாரும் இல்லாத நிலையில் வீட்டு வாட்ச்மேன் மனைவிக்கு வளைகாப்பு செய்து பார்க்கின்ற முதலாளி குடும்பத்தினர். அலுவலகம் சென்று உத்தியோகம் பார்த்தாலும் கூட வீட்டுவேலைகளைச் சரிபாதியாகப் பகிர்ந்து கொள்கின்ற நடுத்தர வயது குடும்பத் தலைவர் . படித்துவிட்டு ஐ.டி கம்பெனியில் வேளை பார்த்தாலும் நாள்தோறும் அம்மாவிற்கு அனைத்து வேலைகளிலும் ஒத்துழைப்பு நல்கிவிட்டு அலுவலகம் செல்லும் மகன். மரணம் ஒன்றே காதல் தோல்விக்கு முடிவு அல்ல, வாழ்க்கையை வாழ்வதே காதல். கலப்புத் திருமணம் செய்துவந்த மருமகளின் பட்டமளிப்பு விழாவிற்குச் சென்று எல்லோரிடமும் தன்மகள் என்று மார்தட்டிக் கொள்கின்ற மாமியார் மாமனார். பாலியல் வன்கொடுமை செய்கின்ற மனித மிருகங்களை வேட்டையாடுகின்ற மிருகமனிதம். அன்பு ஒன்றே விலைமதிக்க முடியாத மாணிக்கம் போன்ற பொருண்மைகளில் ‘என்போடு இயைந்த உடம்பிற்கு எல்லாம் அன்போடு இயைந்ததே உயர்’ என்ற தத்துவத்தினை வாரி தெளித்திருக்கிறார். நனைந்து பாருங்கள், வாழ்க்கை முன்னிறுத்தும் அவலங்களின் கண்ணீர் உவர்ப்பு காய்ந்துவிடும். இனிமையின் சுவையை உணர்த்தும்.

மலர்விழியின் ‘விழியம் பேசும் காலம்’ சிறுகதைத் தொகுப்பு கள்ளம் கபடம் அறியாமல் தாவி வரும் குழந்தையின் தழுவல். பயணிக்கும்போது எதிர்பாராமல் புன்னகையின் வழி கிடைக்கின்ற ரயில் சிநேகம். யாரோ ஒருவர் எதிர்பாராமல் கால் இடறுகையில் சட்டெனப் பதறித் துடிக்கும் மனித மாண்பு என்று பலவாறாகச் சொல்லிக்கொண்டே போகலாம். நல்லதொரு படைப்பினை வாசித்த நிறைவினை அளிக்கின்றது. நன்றியும் மகிழ்வும்.

அன்பின் நெகிழ்வில்,



முனைவர் ப.அமிர்தவள்ளி,
உதவிப் பேராசிரியை மற்றும் எழுத்தாளர்,
புதுச்சேரி.



இரண்டு நூல்களும் சலுகை விலையில்...

தமிழக வாசகர்கள் 200 ரூபாய் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 9750557987



பொன்விலங்கு பூ.சுப்ரமணியன்



# ஆத்மாவின் தாளங்கள்!

விநாயகர் படத்தருகில் இருந்த சுவர்க்கடிகாரம் இரவு பத்தடித்து ஓய்ந்த பின்னும் சத்தியமூர்த்தி 'வெற்றியடைய வேண்டுமா? பிரம்மச்சரியம் விரதத்தில்...' என்ற புத்தகத்தை படித்துக் கொண்டிருந் தான். நித்யா, சத்தியமூர்த்தி இருவரும் தனித்தனியாக இரண்டே அறைகள் கொண்ட அந்த சிறிய வீட்டில் இருந்த கட்டில்களில் தனித்தனியாக படுத்திருந் தார்கள். சத்தியமூர்த்தி கட்டிலில் ஒருக் களித்துப் படுத்துக்கொண்டே புத்தகம் படித்துக்கொண்டிருந்தான். அவன் அருகில் வந்த நித்யா "என்னங்க இன்னும் நீங்க தூங்கலையா?" என்று கேட்டாள்.

சத்தியமூர்த்தி "இல்ல நித்யா, நீ தூங்கு லைட் எரிந்து கொண்டிருப்பதால் உனக்கு தூக்கம் வரலையா?" என்று கேட்டான்,

நித்யா "ஆமா" என்று கூறிக் கொண்டேகட்டிலில்படுத்துக்கொண்டாள் அவளுக்கு தூக்கம் வரவில்லை ஆனால் கண்களை மூடிக்கொண்டாள்.

சத்தியமூர்த்தி புத்தகத்தை மூடி விட்டு நித்யா படுத்திருக்கும் நிலையை தற்செயலாகப் பார்த்தான். கடந்த ஒரு மாதமாக அவன் கடைபிடித்திருந்த பிரமச்சரியம் காற்றில் பறந்து விடுமா? தான் அவளுக்குக் கொடுத்த வாக்குறுதி எல்லாம் தவிடு பொடியாகி விடுமா? என்று அச்சப்பட்டான். அவளுடைய கருங்கூந்தல் இழைகள் மின்விசிறியின் சுழற்சியில் முன் நெற்றியில் தவழ்ந்து விளையாடிக் கொண்டு இருந்தன. அவள் படுத்துக்கொண்டிருந்த நிலையில், அவள் விடும் மூச்சுக் காற்றினால் மின்விசிறி ஓடிக்கொண்டிருந்ததாலும் அவளுடைய மெல்லியஆடைக்குள்தாமரைமொட்டுக்கள் ஏறி இறங்குவதைப் போல் அவனுக்குத் தோன்றியது. அவனை நிலை தடுமாற வைப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது. மின்விசிறி ஓடிக்கொண்டிருந்தாலும் அவன் முகமெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

இன்னும் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தால், அவளிடம் கூறிய உறுதிமொழி பொய்யாகி, தன்னை ஒருமாதிரியாக தவறாக நினைத்து விடுவாள்? அதனால் அவள் மனம் புண்படும்படி தான் வரம்பு மீறி விடுவேனோ ? என நினைத்து விரைந்து சென்று விளக்கை அணைத்து விட்டு, படுக்கையில் சத்தியமூர்த்தி சாய்ந்தான். சுட்டுப் போட்டாலும் இப்போது தூக்கம் வராததுபோல் இருக்கிறது. அவன் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டே கடந்து போனவைகளை புரட்டிப் பார்க்க ஆரம்பித்தான்.

சத்தியமூர்த்தி கல்லூரியில் படிக்கும் போதே, நித்யாவிடம் அடிக்கடி பேசி பழகி

இருக்கிறான். அவள் அருகில் இருந்து சிரித்துப் பேசிக்கொண்டிருந்தாலே, அவனுக்கு அதில் ஓர் இனம் தெரியாத இன்பத்தையும்உணர்ந்தான்.எத்தனையோ பெண்களிடம் அவன் பேசினாலும் நித்யாவிடம் பேசும்போது மட்டும் ஒரு இனம் புரியாத இன்பத்தில் மிதப்பதுபோல் அவன் உணர்ந்தான். இதற்குப் பெயர்தான் காதல் என்பதா என்று தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டான்.

சத்தியமூர்த்தி கொஞ்சம் கூச்ச சுபாவம் உள்ளவன். பயந்த சுபாவம் உள்ளவன். எனவே எதையும் வெளிப் படையாக கூறுவதற்கு அஞ்சுவான். அவன் நித்யாவைக் காதலிப்பதாக, அன்று அவளிடம் கூறியிருந்தால், அவன் இன்று இப்படி நித்யாவிடம் வாக்குறுதி கொடுத்து விட்டு, தூக்கம் வராமல் கஷ்டப்பட்டு கொண்டு இருக்க மாட்டான். அவன் தன்னோட காதலை வளர்த்தானே தவிர, வெளிப்படையாக அவளிடம் தன் காதலை பற்றிக் கூறவில்லை. இதுதான் அவன் செய்த மிகப் பெரிய தப்பு.

அவர்கள் கல்லூரிப் படிப்பு முடிந்தது. எல்லாமே மின்னல் வேகத்தில் நடந்து முடிந்து விட்டது. ஆம். நித்யாவுக்கும் சத்தியமூர்த்தியின் கல்லூரி நண்பன் பரத்துக்கும் எதிர்பாராமல் திருமணம் நிச்சயார்த்தம் நடந்து முடிந்தது. தன்னோட காதலை பற்றி அப்போதும்கூட நித்யாவிடமோ, நண்பன் பரத்துவிடமோ வெளிபடுத்தாமல், அவன் காதலை மனதிற்குள்ளேயே போட்டு புதைத்துக் கொண்டான். பரத் - நித்யா திருமண நிச்சயார்த்தத்திற்கு சத்தியமூர்த்தி சென்று எங்கிருந்தாலும் வாழ்க என நித்யாவை மனநிறைவோடுதான் வாழ்த்தினான்.

திருமணம் நிச்சயார்த்தம் முடிந்து பதினைந்து நாட்கள் கழித்துதான் நித்யா-பரத் திருமணம் என முகூர்த்தநாள் பார்த் திருந்தார்கள். அதற்குள் பரத் வாழ்வில் விதியானது விளையாடி விட்டது. எப் போதும் போல அன்றும் பரத் அலுவல கத்திற்கு ஸ்கூட்டரில் சென்றவன், எதிரே வந்த லாரியில் அடிபட்டு தூக்கி எறியப்பட்டு பலமாக மண்டையில் அடிபட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டான்.

நித்யாவுக்குத் தகவல் கிடைத்து, அவள் அதிர்ச்சியுடன் மருத்துவமனையை சென்றடைந்தாள். அவள் தகவல் கிடைத்து மருத்தவமனைக்குச் செல்வதற்கு முன் பாகவே சத்தியமூர்த்திக்குத் தகவல் கிடைத்து,அங்குசென்று நண்பன்பரத்துக்கு இரத்தம் கொடுத்துக் கொண்டிருந்தான். அவன் இரத்தம் கொடுத்த பிறகு, பரத் பத்து நிமிடங்கள்தான் உயிருடன் இருந்திருப்பான். அதற்குள் தன்னோட மனதில் தோன்றியதையெல்லாம் சத்திய மூர்த்தியிடம் கண்ணீர்மல்க திக்கித் திணறி கூறி விட்டான்.

பரத் “சத்யம் நித்யாவை மேரேஜ் பண்ணி அவளுக்கு வாழ்வு கொடு. இவ் வளவு இளமையில் அவளோட லைப் முடிய வேண்டாம். பொதுவாக நிச்சயார்த்தம் முடிந்த மாப்பிள்ளை, விபத்தில் இறந்துட்டால், அந்தப் பொண்ணை ராசியில்லாதவள் என்ற இந்தச் சமூகம் முத்திரையைக் குத்தி விடும். அதன்பிறகு நித்யாவின் மேரேஜ், அவள் வாழ்வு என்பது கேள்விக் குறியாகி விடும். நித்யாவுக்கு நீதான் வாழ்வு கொடுக்கணும். எதாவது காரணமும் கூறி என் வேண்டுகோளை மறுத்துடாதே” என்று பரத் கூறும்போது, சத்தியமூர்த்தி கண்ணீர் பொங்க, எதிரே நின்று கொண்டிருந்த நித்யாவைப் ஏறிட்டுப் பார்த்தான்.

தன்னோட நண்பன் பரத்தின் இறுதி வேண்டுகோளை அவனால் அப்போது மறுத்துக் கூறவும் முடியவில்லை. அப்போது தன் எதிரே நின்றுகொண்டு இருந்த நித்யாவிடம் சம்மதம் கேட்டு விட்டு, பரத்துக்கு பதில் கூறமுடியாத நிலையில் பரத்தின் உடல் நிலையானது மிகவும் மோசமாகிக்கொண்டு இருந்தது. எனவே நண்பனின் வேண்டுகோளுக்கு இணங்கி ‘சரி’என்பதுபோல்தலையாட்டிக்கொண்டே

கண்ணீர் ததும்ப சத்தியமூர்த்தி, பரத்தின் உள்ளங்கையில் தன் உள்ளங்கையை வைக்கவும் அவன் உயிர் பிரிந்தது.

அப்போது தன் எதிரே நின்று கொண்டிருந்த நித்யா கண்ணீர் விடுவதைக் கண்டு சத்தியமூர்த்தி அவளைத் தேற்றி னான். பரத்துக்கு தாய் தகப்பன் உறவினர்கள் யாரும் இல்லாததால், சத்தியமூர்த்தியே பரத்தின் இறுதிக் காரியங்களைப் பார்த்தான்.

ஒரு மாதம் கழித்து சத்தியமூர்த்தி நித்யாவைச் சந்தித்தான். அவள் முகம் வாடிய நிலையில் இருப்பதைக்கண்டு "நித்யா உனது மனதைத் தேற்றிக்கொள். கடந்த காலத்தை நீ மறந்து விடு. உனக்கு ஒரு துணை அவசியம் தேவை. மேலும் ஒரு பெண் இந்தச் சமுதாயத்தில் தனியாக வாழ்வது, என்பது உடல்ரீதியாகவும் உள்ளரீதியாகவும் பல விதமான இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். கதைகளில் வேண்டு மானால் புதுமைப்பெண், புரட்சிப்பெண், ஏன் ஆண்கள் மட்டும் தனியாக வாழும்போது, ஒரு பெண்ணால் வாழமுடியாதா வீராப் பாகப் பேசிக் கொள்ளலாம்,

அரசியல்வாதிபோல் மேடை ஏறியும் பேசலாம். ஆனால் இது நடைமுறையில் சாத்தியமில்லை என்பதைப் புரிந்து கொள். நித்யா, எனக்காக எதுவும் சொல்ல வில்லை உன் எதிர்காலத்தை நினைச்சுத்தான், உனக்கு துணையாக இருக்கேன். நாம ரெண்டு பேரும் தனியாக ஒரே வீட்டில் சேர்ந்து இருந்தாலும் பக்கத்தில் இருப்பவங்க எல்லாம் ஒரு மாதிரியாகத் தான் பேசுவார்கள். நாம ரெண்டு பேரும் ரிஜிஸ்டர் மேரேஜ் செய்துக்குவோம். பரத்துக்கு ப்ராமிஸ் பண்ணிட்டோம்ன்னு நான் இந்த முடிவுக்கு வந்தேன்னு மட்டும் நீ நினைத்துடாதே! நீ தனிமரமாகயிருந்து கஷ்டப்படுவதைப் பார்த்துக்கொண்டு என்னால் தாங்கிக் கொள்ள முடியாது நன்கு யோசித்துத்தான் நான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன்." என்றான் சத்தியமூர்த்தி.

சத்தியமூர்த்தியின் எண்ணத்தை புரிந்து கொள்ளாமல், நித்யா கோபத்துடன் "சத்யம், நான் இளமையாகவும் அழகா கவும் இருப்பதால்தானே என்னை ஏற்றுக்கொள்ள இப்ப முன் வரீங்க" என்றாள் நித்யா

"இல்ல நித்யா உண்மையிலேயே உனக்கு ஒரு நல்ல வாழ்வு கொடுத்து, உன் பாதுகாப்பு கருதித்தான் மேரேஜ் செய்துக்கலாமுன்னு நினைக்கிறேன். உன் னோட இளமையும் அழகையும் கண்டு அல்ல என்பதை மட்டும் நீ புரிந்து கொள் நித்யா." அப்போதுகூட அவன் கல்லூரியில் படிக்கும்போது நித்யாவைக் காதலித்தது குறித்து ஒரு வார்த்தைகூட கூறவில்லை.

"உன்னைத் தனியே தவிக்க விட என்னோட மனம் இடம் கொடுக்கல. உனக்கோ உற்றார் உறவினர் யாரும் இல்லை. இந்நிலையில் இப்பொல்லாத உலகில் நீ தன்னந்தனியே இருப்பது மிகவும் கஷ்டம் நித்யா. நாம் இருவரும் ரிஜிஸ்ட்டர் மேரேஜ் செய்து கொள்வோம். நீ விரும்பினால் நாம் இருவரும் கணவன் மனைவியாக இருப்போம். உனக்கு விருப்பமில்லைன்னா, உனக்கு நான் ஒரு பாதுகாவலனாகவே இருந்துடுறேன்" என்று அவளுக்கு புரியவைக்க முயற்சி செய்தான் சத்தியமூர்த்தி.

"சத்தியம் என்ன பேசுகிறீங்கன்னு தெரிஞ்சுகொண்டுதான் சுய நினைவோடு தான் பேசுகிறீங்களா? உங்களுக்கு இப்போது என் இளமையான உடம்பு தேவை அதை அனுபவிக்க ஆயிரம் கதைகள். அடுக்கடுக்கான வாக்குறுதிகள் அப்படித்தானே...!" என்றாள் நித்யா !

"ஐயோ நித்யா என்ன எல்லாரை யும்போல் என்னையும் காமவெறி பிடித்து அலையும் காமுகன் என்று நினைத்துட்டாயா நித்யா! பெண்மையை மதிக்கத் தெரிந்தவன் எப்போதும். உண்மையைத்தான் பேசுவான் என்பதை உணர்ந்து கொள். என்னை நம்பு. உனக்கு

எப்படி புரியவைப்பதுன்னு புரியல்ல. உன் விருப்பம்ந்தான் என் விருப்பம் என்று கூறிவிட்டேன்" என்று கூறும்போது அவன் கண்களில் கண்ணீர்த் துளிகள் ததும்பி நின்றன.

நித்யா தன்னோட முடிவிலிருந்து சற்று இறங்கி வந்தாள். சத்தியமூர்த்தியை திருமணம் செய்து கொள்ள நீண்ட தர்க்க வாதங்களுக்குப் பின்னர் சம்மதித்தாள். "நீங்க கூறியபடியே ரிஜிஸ்ட்டர் மேரேஜ் செய்து கொள்வோம். ஆனால் ஒரு கண்டிசன் , என் அனுமதியின்றி, என்னைத் தொடக்கூடாது. அதாவது... புரியும் என்று நினைக்கிறேன். உங்களுடைய சுயரூபம் குணம் எப்படிபட்டது என்று நாம் இரண்டு பேரும் தனியாக இருக்கும்போது தெரியவரும். அதாவது பெண்மையை மதிக்கத் தெரிந்தவரா? இல்லை மிதிக்கத் தெரிந்தவரா! என்பது தெரிய வரும். அதாவது கணவனா அல்லது பாதுகாப்பாளரா என்பது அறிய முடியும்" என்று நித்யா கூறும்போது அவளது நம்பிக்கையின்மை நன்கு வெளிப்பட்டது.

இந்த கம்யூட்டர் உலகில் இப்படிப் பட்டப் பெண்ணா ? என்று சத்தியமூர்த்தி அவள் கண்டிசனை நினைத்து ஆச்சரியப் பட்டான். நித்யா அவனிடம் 'என் அனுமதியின்றி, என்னைத் தொடக் கூடாது' என்பதை கூறியதைக் கேட்ட சத்தியமூர்த்திக்கு'. நிலவைப் பார்த்து வானம் சொன்னது என்னைத் தொடதே...'. என்ற கண்ணதாசன் பாடல் வரிகள்தான் அப்போது அவனுக்கு நினைவுக்கு வந்தது.

'எங்களுக்குத் திருமணம் ஆகி ஒரு மாதமாகியும் நான் அவளுக்கு வாக்கு அளித்தபடி அவள் விருப்பப்படி பாதுகாவலாகத்தான் இருந்து வருகிறேன். இருந்தாலும் சில சமயங்களில்...'. அவனை அவனது நினைவலைகளில் இருந்து சுவர்க்கடிகாரம் மணி அடித்து கலைத்தது.

எழுந்து சென்று மின்விளக்கைப் போட்டான். தூக்கத்தில் நித்யாவின் ஆடை விலகி அவள் படுத்திருந்த நிலையானது

# ஹைக்கூ

■
விழலுக்கு இறைத்த நீர்
வாய்க்கால் வழி ஓடுகிறது
கடலில் விழும் மழைநீர்

■
உலகக் கிண்ணம்
உருகி வழியவே இல்லை
பனிக்கட்டிக் கடல்

■
கடலில் மீன்
கூடவே மிதந்து வருகிறது
மீனவனோடு கட்டுமரம்

■
மணலில் எழுதியவை
கரையில் இருந்து
திரும்புவதில்லை
துரத்தப்பட்ட அலைகள்

■
ஆர்ப்பரிக்கும் அலை வெளியில்
தெரியவே இல்லை
குமுறும் கடலின் வலி

**முனைவர்**
**பெண்ணியம் செல்வக்குமாரி**



விளக்கின் வெளிச்சத்தில் அவனுடைய உணர்வுகளை தட்டி எழுப்பியது. அருகில் சென்று ஆடையைச் சரி செய்து விட்டான். அந்த மென்மையான கருங்கூந்தலை வருடிவிட்டு ''என்னை மன்னித்து விடு நித்யா என்னால் உன் அழகைப் பார்த்து ரசித்துக்கொண்டு மட்டும் இருக்க முடியாது. அவனது மனது கிடந்து அடித்துக் கொண்டது. அவனும் ஒரு சராசரி மனிதன்தானே !

'சீ சீ இவ்வளவுதானா நீங்க இதுக்குத் தான் என்னை திருமணம் செய்ய அப்படித் துடித்தீர்களா என்று நித்யா தன்னைத் திருப்பிக் கேட்டுவிட்டால்... சத்தியமூர்த்தி நெற்றியிலுள்ள வியர்வைத் துளிகளைத் கையினால் துடைத்துக் கொண்டான். இனிமேல் இப்படிப்பட்ட உணர்வுகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. இதற்கு ஒரே வழி ஒரு குழந்தையை தத்து எடுத்து, அக்குழந்தையை தன்னோட அருகில் வைத்துக் கொண்டால், அக்குழந்தையை கவனிப்பதிலேயே தன் கவனம் சென்றுவிடும்.

எனவே விடிந்ததும் முதல் வேலையாக குழந்தையை தத்து எடுப்ப தற்கு நித்யாவிடம் அனுமதி வாங்கி விடவேண்டும். நித்யாவிடம் என்னோட தோல்வியை ஒப்புக்கொண்டு தன் நிலையைக் கூறிவிட வேண்டும். 'ஒரு தத்து எடுத்தக் குழந்தை இருந்தால்தான் நித்யாவுக்கு கொடுத்த வாக்குப்படி பாது காவலனாக இருக்க முடியும் என பலவித எண்ணங்களுடன் மனக்குழப்பங்களுடன் சத்தியமூர்த்தி தூங்கியும் விட்டான்.

அன்றிரவு நித்யாவும் சத்திய மூர்த்தி யைப்போல் படுக்கையில் தூக்கம் வராமல் பலவிதமான எண்ணப் போராட்டங்களுடன் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள். 'இன்றைக்கு நான் பயமில்லாமல் இங்கு பாதுகாப்புடன் இருப்பது, சத்தியமூர்த்தி எனக்கு கொடுத்த வாழ்வுதான். அவர் நினைத் திருந்தால் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து, சந்தோசமாக இருந்திருப்பார். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. இதுவரை என்னிடம் கொடுத்த வாக்குறுதியை கண்ணியமாக காப்பாற்றி வருகிறார். அது போதுமே அவருடைய நல்ல குணத்தைப் பற்றி அறிந்து கொள்ளலாமே ! இந்த கம்ப்யூட்டர் யுகத்தில் இப்படிப்பட்ட ஆண்களும் இருக்கிறார்களே திடீரென்று நித்யாவின் மனசாட்சி அவளைக் கேலி செய்யவும் ஆரம்பித்தது. சத்தியமூர்த்தி என்ற அந்த உத்தமரை உனது அன்புக்காக ஏங்க வைத்திருப்பாயா? அவரும் ஒரு ஆசாபாசங்கள் நிறைந்தவர் என்பதை நீ இதுவரை நினைத்துப் பார்த்தாயா? உனக்கு வாழ்வு கொடுத்த அவருக்கு நீ செலுத்துகிற நன்றியின் லட்சணமா இது.

'நான் என்ன தப்பு செய்தேன் என தன்னோட மனதைப் பார்த்து நித்யா கேட்டாள்.'நீ இல்லாமல் அவர் வேறு ஒரு பெண்ணை மணம் முடித்திருந்தால் அவருடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அப்பெண் தன்னையே பூரணமாக ஒப்படைத்திருப்பாள். ஆனால் நீயோ அவரைச் சுற்றி ஒரு தேவை யில்லாத வட்டம் வரைந்து, அந்த வட்டத்திற் குள்ளேயே செக்குமாடுபோல் அவரைச் சுற்றிவரும்படி செய்து நீ வேடிக்கை பார்க்கிறாய்.

நிஜந்தான். எனக்காக தன்னோட இன்பமான எத்தனையோ இரவுகளையும் சத்தியமூர்த்தி இழந்து தவித்திருக்கிறார். ஆம் அவரை எப்படியெல்லாம் தனிமையில் வாட்டி அவர் இன்ப வாழ்வுக்காக ஏங்கவும் வைத்து, சித்ரவதை செய்து விட்டேன். நான் ஒரு பாவிதான். என்று தனக்குள் வருந்தினாள். ஐயோ கடவுளே என்னை மன்னித்து விடு. அவரது உணர்வுகளைப் எனக்குப் புரியவைக்கவும் தட்டி எழுப்புவதற்காகவும் இன்று என்னை தூங்கவிடாமல் இப்படிப்பட்ட எண்ண அலைகளை எனக்குள் இன்று உண்டாக்கி விட்டாய் என்றுதான் நினைக்கிறேன்.

இந்த எண்ண அலைகள் மட்டும் எனக்குள் இன்று வரவில்லை என்றால் இன்னும் நான் அவரை அவருடைய வாழ்வையே சூனியமாக்கிருப்பேன். சத்தியமூர்த்தி போன்ற உத்தமரை நான்

கணவராகப் பெறுவதற்கு என்ன தவம் செய்திருப்பேனோ என்று நினைத்து நினைத்து தன்னோட எண்ண அலைகளை அடக்க முடியாமல் அந்த நடுஇரவில் தன்னையறியாமல் விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

கட்டிலில் படுத்திருந்த சத்திய மூர்த்தி அவள் அழுவதைப் பார்த்து எழுந்து வந்து “என்ன நித்யா இன்னும் நீ தூங்காமல் என்ன நினைத்து அழுது கொண்டிருக்கிறாய்“ என்று ஆதங்கத்துடன் கேட்டான்.

“சத்தியமூர்த்தி ஐ ஆம் வெரி ஸாரி தெய்வத்தையே நான் சோதித்து விட்டேன். அன்று லக்ஷ்மணன் கிழித்த கோட்டை சீதை தாண்டினாள். ஆனால் நான் கிழித்தக் கோட்டை இதுவரை நீங்கள் தாண்டாமல், உங்கள் உயர்ந்த பண்பைக் காட்டி, என்னைத் தலை குனியும்படி செய்து விட்டீர்கள். என்னை மணந்த ஒரே காரணத்திற்காக வேறு எந்தப் பெண்ணையுமே ஏறெடுத்துப் பார்க்காமல் இருந்து விட்டீர்கள். இந்த கம்யூட்டர் காலத்திலும் உங்களைப் போன்ற ஆண்களும் இருக்கிறார்கள் என்பதை உங்களைப் பார்த்து நான் தெரிந்து கொண்டேன்” என்று நித்யா கூறும்போது உணர்வு மிகுதியில் வார்த்தைகள் வராமல் திணறினாள்.

சிறிது இடைவெளிக்குப் பின் சத்தியமூர்த்தியைப் பார்த்து “நான் கிழித்தக் கோட்டை நானே அழிக்கிறேன். இக்கணத்திலிருந்து என்னை முழுமையாக உங்களிடம் ஒப்படைக்கிறேன்.” என்று கூறிக்கொண்டே அவன் மார்பில் வெட்கத் துடன் சாய்ந்தாள். அவள் கருங்கூந்தலை இதமாக வருடி, அவளைத் தன் மார்போடு சத்தியமூர்த்தி இறுக அணைத்துக் கொண்டான். அன்றைய நிசப்தமான இரவில், அப்போது அங்கு அவர்கள் சரீரத்தின் தாளங்களோடு, அவர்களின் ஆத்மாவின் தாளங்களும் கேட்க ஆரம்பித்து விட்டன.

■

பல ஆயிரம்
ஆண்டுகளாக மனிதர்கள்
இம்மண்ணில் வாழ்ந்தாலும்
பகையின்றி
வாழ்வது எப்படி என
இன்னும் கற்றுக்கொள்ளவில்லை
கற்றுக்கொள்வார்கள்
எனவும் தோன்றவில்லை...

**- ஜே. கிருஷ்ண மூர்த்தி**

# மௌனம்

மௌனம்
சப்தங்கள் சேர்ந்து
நடத்தும் தொழுகை!

ஒளி ஓலமிட்ட
தீபத்தின் நாவுகள்
வெட்டப்பட்டதும்
ஜனித்த இருள்நிசப்தத்தின்
அழுகை!

வாழ்க்கைப் பரீட்சையின்
பல வினாக்களுக்கான முத்தாய்ப்பு
முற்றுப்புள்ளிக்கு முன்,
தற்காலிக பதிலான துருப்புச்சீட்டு.

ஏழைகளின் வயிற்றில்
அடிக்கும் போது எழும் ஓசை!

பணம்படைத்தோர் செய்யும்
பாவங்கள் பாடும் கீதம்

தட்டுகளைத் தட்டும் போது எழுந்த
இரைச்சலில் அடங்கிய
பசித்த வயிறுகளின்
கொரோனா ஒப்பாரி!

காதலர்கள் காதில் விழாமல்
கண்ணில் விழும் வார்த்தை!

**பாபு கனிமகன்**
இளையான்குடி

# பயணங்கள்

அன்னையின் மடியில் ஆரம்பப் பயணம்
தந்தையின் கரம்பிடித்து தளிர்நடைப் பயணம்
மூன்று வயதில் துவங்கும் கல்விப் பயணம்
ஆசிரியர் துணையுடன் அறிவுப் பயணம்.

பள்ளிப்பருவம் முடிந்து கல்லூரிப் பயணம்
எதிர்காலத்தை அதுவே நிர்ணயிக்கும் பயணம்
அடுத்து துவங்கிடும் அலுவல் பயணம்
பணம் சம்பாதிக்கும் சாகசப் பயணம்

இருபத்தைந்திற்கு மேல் இல்லறப் பயணம்
துணையுடன் துவங்கிடும் நல்லறப் பயணம்
வருங்காலத்திற்கு வசதிகள் சேர்க்கவும்
அறுபது கடந்ததும் அமைதியாய் வாழவும்
வியர்வை சிந்தியும், விவேகமாய் சிந்தித்தும்
உழைப்பை நல்கி உயர்ந்திடும் பயணம்

சந்ததி பெருக்கிடும் சந்தோஷப் பயணம்
அவர்களை வளர்க்கும் ஆனந்தப் பயணம்
பிள்ளைகளுக்கு இல்லறம் அமைத்திடும் பயணம்
பேரக்குழந்தைகளுடன் பேரின்பப் பயணம்

பெற்றோர் , உற்றோர் என உறவுகளுடன் பயணம்
நண்பர்கள் துணையுடன் நல்லதோர் பயணம்
பணி ஓய்வு பெறும்வரை உழைத்திடும் பயணம்
இனிமையாய் ஓய்வினை கழித்திடும் பயணம்

பிறந்தவர் பயணம் இறப்பினில் முடியும்
பாதையில் ஆயிரம் பயணியர் வருவார்
பாதியில் பலரும் பாதை மாறுவார்
இறுதிவரையில் உடன் வருவார் எவருளர்

முதலும் தெரியாது , முடிவும் தெரியாது
இடையினில் சிலகால வாழ்க்கைப் பயணத்தில்
இனியது பேசி, இனியன செய்து
இயன்ற வரையில் உதவிகள் செய்து
இந்தப் பயணம் முடிவுற்றாலும்
இறந்தும் வாழ்வோம் பலரது மனதில்

**சிலேடை சித்தர் சேது சுப்பிரமணியம்**

## வினையே மானிடர்க்கு அழகே



ஆம்பலில் ஊறும் தேனும்,
ஆலிலை துளிர்க்கும் பூவும்,
சோம்பலாய் இருப்ப தில்லை!
சோர்வுடன் துவண்ட தில்லை!
காம்பிலா மலராம் விண்பூ,
காவலில் நிற்ப தில்லை!
வீம்பனாய் வெட்டி யாக,
வீணென வாழ்ந்தி டாதே!!

ஒருநொடி நில்லா பூமி,
ஒருகணம் நின்று விட்டால்?
வருங்கதிர் வெய்யோன் ஓர்நாள்,
வருவதைத் தவிர்த்து விட்டால்?
தருவளர் கிளைகள் தாங்கள்,
தளிர்ப்பதை நிறுத்தி விட்டால்
இருப்பவர் வாழ்தல் ஆமோ?
இந்நிலம் பிழைத்தல் ஆமோ?

பழங்கதை பேசிப் பேசி,
பகலினைக் கழித்தல் வேண்டா!
இழந்தது மீளாக் காலம்,
இசைவுடன் வினைகள் ஆற்று!
வழக்கமாய் செய்யும் யாவும்,
வழுவற செய்திட் டாலே,
பழம்புகழ் பெருமை யாவும்,
பழுதற நிலைக்கும் தானே!!

அடுத்தவர் செய்வர் என்றே,
அலட்சியம் காட்டி டாதே!
தடுத்திடும் தோல்விக் கல்லை,
தகர்த்தெறி: மேலே ஏறு!
சடுதியில் பரவும் தீயாய்,
சக்தியாய் வினைகள் ஆற்று!!
மிடுக்குடன் வாழ வேண்டின்,
மிகைபணி துணிந்து செய்க!!

விதையென முளைத்து ழைத்து,
விண்ணகம் முட்டித் தள்ளு!
அதையிதைச் செய்து நாளும்,
அகிலென யாக்கைப் போற்று!
சதையுடன் நரம்பும் பின்ன,
சகத்தினை வானில் ஏற்று!!
புதைபடும் நாளில் கூட,
புரிந்திடு வினைகள் தானே!!

**சு.வி.லட்சுமி**

---



## உள்ளூறும் காதல்

**உயிரிழைகள் எங்கும் உன் ஆக்கிரமிப்பு**
**உற்சாகமூட்ட உள்ளூறும் காதல்**
**என்னைக் கொல்லாமல் கொல்லுதே**
**உயிர்நாடியெங்கினும் ஊர்கோலம் போகுதே!**

*– வஃபீரா வஃபி*

# அவசரகால தர்மம்

ஆசிரியர். பா.நூருல்லாஹ்
மதுரை



குரு கோயில் வாசலில் புலம்பிக் கொண்டு இருந்தான். தம்பி இங்க எதுக்கு கத்திக்கிட்டு இருக்க, உள்ள போ! பகவான் கிட்ட சொல்லு, இல்ல வேற எங்காவது போ என்றார் பூசாரி. நா எங்க இருந்தாலும் ஏதாவது சொல்ல வந்துருங்க. போங்க சாமி உங்க வேலைய பாருங்க, எனக்கு தான் வேலை இல்லை என்றான் குரு.

வேலை கிடைக்காத கவலையில் எல்லோரிடமும் சண்டை போடுவது என இருந்தான்.

அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லா ததால் பக்கத்திலிருக்கும் "நலம் மருத்துவ மனைக்கு" நலம் பெற அழைத்துச் சென்றான். அண்ணன் அனுப்பும் பணம் ஏதோ, அவர்களை நடமாட வைத்துக் கொண்டிருக்கிறது. பெயர் பதிவிட்டதும் டோக்கன் எண் 5 கிடைத்தது. வேகமாக அப்பாவை காட்டிவிட்டு சென்றிடலாம் என நினைத்துக் கொண்டான் குரு.

அங்கு, இருக்கும் நோயாளிகள் இருமும் போதும், தும்மும் போதும் அவன் இதயம் வேகமாக துடித்தது. நமக்கு எதுவும் வந்துவிடுமோ, நம்மளும் படுத்துட்டா அவ்வளவு தான். அப்பா என்ன திட்டி தீர்த்திடுவாரு. சும்மாவே வேலைக்கு போகாத உதாரினு கத்துறாரு, என கண்ணை மூடி புலம்பிக் கொண்டு இருந்தான். இருமல் சத்தம் அமைதியானதும் மெதுவாக கண்ணை திறந்தான். அனைவரும் குருவையே பார்த்துக் கொண்டிருந்தார்கள் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

பக்கத்தில் அப்பாவை பார்த்தான். என்ன? அப்படி பாக்குற வாயை மூடி புலம்ப மாட்டியா, இவ்வளவு சத்த மாவா புலம்புவ.

ச்சே!

இங்க வந்தும் அப்பாட்ட அசிங்கப் பட்டாச்சு,

சரி, புதுசா இது நம்மளுக்கு எனக் கூறிய படி வெளியே வந்து நின்றான் குரு.

கதவை திறந்து விட ஒருவர் பணி யில் இருந்தார்.

அவரிடம் குரு, அண்ணே! நல்ல வேலை கிடைச்சிருக்கு, அற்புதம் என்று சொல்லி முடிப்பதற்குள் அந்த நபருக்கு கோபம் வந்து கத்த தொடங்கினார்.

போப்பா, எதுக்கு வந்தயோ அத பாரு என்றான்.

குரு எதுவும் பேசாமல் வந்து அமர்ந்தான்.

நா என்ன கேட்டே? அவனோட வேலையவா?

அய்யோ! அய்யோ!

இப்படி ஒரு வேலையானு அவனும் எனக்கு இப்படி ஒரு வேலை இல்லையேனு நானும் புலம்ப வேண்டியது தான்.

ஒருவர் அங்கும் இங்குமாக ஓடிக் கொண்டிருந்தார். அங்கு அமர்ந்திருக்கும்

நபர்களிடம் ஏதோ விசாரிக்கிறார். பின் வரவேற்பறையில் இருக்கும் பெண்ணிடம் கேட்கிறார். மீண்டும் அங்கு அமர்ந்திருக்கும் நபர்களிடம் விசாரிக்கிறார். மீண்டும் வரவேற்பறைக்கு செல்கிறார், இறுதியாக, அந்த பெண் டோக்கன் வழங்கும் நோட்டை பார்த்து விட்டு, குருவை பார்த்து கையை காட்டினாள்.

மேலும், வரவேற்பறையில் இருந்த பெண் கூறியது, சார் நீங்க கேட்டுப் பாருங்க, டோக்கன் வாங்குன மக்கள் மாத்திக்கிட்டா போதும்.. நாங்க எதுவும் செய்ய முடியாது. எல்லாமே கேமிரா வில் பதிவாகும். அவசரத்துக்கு இங்க எதுவும் செய்ய முடியாது. வந்த எல்லாரும் சண்ட போடுவாங்க. அதனால நீங்களே கேளுங்க.

குருவை நோக்கி, அந்த நபர் வந்து பேசும் போது தான். அவனுக்கு முன்னால் ஒன்று முதல் நான்கு டோக்கன் வாங்கிய நபர்களிடம் இதைப் பற்றி தான் பேசியிருக்கிறார் என்று புரிந்ததது.

அய்யா, நீங்கள் வைத்திருக்கும் டோக்கன் எனக்கு வேண்டும். நான் இன்று இரவு 11.15 மணிக்கு வெளி நாட்டிற்கு செல்கிறேன். டோக்கன் எண் எனக்கு 13 டாக்டரை பார்த்து விட்டு போக நேரம் ஆகும். இந்த டாக்டர் ஒரு நோயாளியை பார்க்கவே அதிக நேரம் ஆகும். நா "பிளைட்ட மிஸ் பன்னிருவே"

அம்மா. இந்த டாக்டர் தான் நல்லா பாப்பாருனு சொல்லுவாங்க,

முதியோர்களுக்கான சிறப்பு மருத்து வராம். நா கிளம்பும் போது தான் இப்படி நடக்குமா. அதனால் தான் கேக்கிறேன் என்று ஒரே மூச்சில் சொல்லி முடித்தார் அந்த நபர்.

குரு பதில் கூறாமல் கொண்டு வந்த தண்ணீரை குடித்துக் கொண்டிருந்தான். என்ன சொல்லுவது என்று புரியாமல் தயக்கமாக. என்னால் முடியாது. அப்பா



# மை டியர் சிகரெட்

இரு விரல் இடுக்கினில்
புகைத்திடப் பற்றினாய்

பற்றிய நெருப்பினில்
புகையினைக் கக்கினாய்

கக்கியப் பிறகும்
நெஞ்சினில் சிக்கினாய்

சிக்கலைத் தீர்ப்பதாய்
எண்ணியே புகைத்ததால்

அறிவுரை அனைத்தையும்
அக்கினியில் இட்டதால்

தாயகம் போலவே
தஞ்சமாய் பதுங்கினாய்

பதுங்கியது அறியுமுன்
நெஞ்சகம் தாக்கினாய்

புற்று நோயெனப்
பூவுடல் பொசுக்கினாய்

உணர்ந்திட நினைக்கையில்
சுவாசத்தை நிறுத்தினாய்

தாமதம் ஆனதால்
ஆணவம் அடக்கினாய்....

புகை உடலுக்கு பகை 
எப்போது உணருவாய்......

- **கவிஞர் ச. ஆரா**
திருநின்றவூர்



## உள்ளதைச் சொல்லுகிறேன்

கவிஞர் தியாரூ

விண்மீன்கள் இடம்விட்டு
வேறெங்கும் நகர்வதில்லை - நம்
கண்களுக்குப் பகற்பொழுதில்
விண்மீன்கள் தெரிவதில்லை!

விழிகளின்மேல் இமையிருந்தும்
விழிகளதைக் கண்டதில்லை - செங்
கமலமதில் தேனிருந்தும்
மீன்களதை உண்டதில்லை!

கறிக்குழம்பின் வாசத்தைக்
கறிச்சட்டி உணர்வதில்லை - உயர்
நெறிகொண்டார் நேசத்தை
நச்சுமனம் நினைப்பதில்லை!

பண்புடையார் நல்லமனம்
பொல்லாதார் அறிவதில்லை - மனக்
கண்கெட்டுக் கிடப்போர்க்கு
காலஜதி புரிவதில்லை!

மூடருக்கு வழிசொல்லி
முக்திபெறப் போவதில்லை - வெறுங்
கூடையினைக் கொண்டுவந்து
கொண்டுசெல்ல ஏதுமில்லை!

நல்லாரைச் சேர்வோர்க்குத்
தெய்வங்கள் தூரமில்லை - தினம்
நல்லவற்றை எண்ணுவோர்க்கு
நெஞ்சினிலே பாரமில்லை!

சொல்வதைநான் சொல்லிவிட்டேன்
சொன்னதிலே குற்றமில்லை - மனம்
கொள்வதையே கொள்ளட்டும்;
தள்ளினாலும் நட்டமில்லை!

வுக்கும் அவசரம் தான். இங்க இருந்து எப்ப போகலாம்னு நா இருக்கே, போங்க சார், வேற யாரையாவது பாருங்க என்றான்.

யாரும் என்னுடைய நிலமைய புருஞ்சுக்க மாட்டிங்கிறாங்க, எல்லாரும் வயசான மக்களா இருக்காங்க, நீங்க தான் என்னுடைய நிலமைய கொஞ்சம் பாக்கணும். நா "பிளைட்ட மிஸ் பன்னா பணம் பாதி போயிரும்", வேலைக்கு சரியான நேரத்துக்குள்ள போலனா என்ன அங்கேயே அம்மாவ பாத்துக்கிட்டு இருனு சொல்லிருவாங்க என்று கண்ணீர் ததும்ப பேசினார்.

குருவிற்கு வேலையில்லாதது எப்படி இருக்கும்னு தெரியும்.. ஆனா இன்னக்கி டாக்டர் பாக்க முடியலனா, அண்ணே திட்டுவாரு அப்புறம் அண்ணே கொடுக்கும் பணம் கிடைக்காது அப்பா வேற, யோசிச்சாலே தலை சுத்துது. வேனா சார். உங்களுக்கு உதவுனா, நான் தான் கஷ்டப் படனும். சோறு கிடைக்காது இப்ப ஏதோ கிடைக்குது அத கெடுக்க பாக்குறீங்களே.

நீங்க டோக்கன் மாத்திக்க ஒத்துக் கிட்டா, நா பணம் தர ரெடி என்று சொன்னதும் குரு.டோக்கனுக்கு பணமா? என்று சொல்லி முடிப்பதற்குள் ஐயாயிரம் தருகிறேன் என்றான்.

ஐயாயிரம், ஒரு சின்ன கடை நடத்தலாம். நல்ல கடை என்று சிந்தித்த வாறு அப்பாவை பார்த்தான். அப்பா தெருவில் அசிங்கமா பேசியது நினைவிற்கு வந்தது. அம்மாடி! வேனா சார், பணம் தந்து என்னுடைய தன்மானத்த கெடுக்க பாக்குறீங்களே.

அம்மா, கொஞ்சம் முடியாம இருக்கும் போதே வந்திருக்கலாம். இப்ப அவசரமா வந்தா, எப்படி? சார். அம்மா முக்கியம் தான் இருந்து பாருங்க என்றான் குரு.

அந்த நபர் கோபமாக வேளியே போய், யாருக்கோ போன் செய்து

பேசி கத்திக் கொண்டிருந்தான். அவன் வெளியே கத்தி பேசுவது ஏசி அறையில் அமர்ந்திருக்கும் அனைவரின் காதிலும் விழுந்தது. அங்கு வந்த நோயாளிகள் குணம் பெற்றது போல ஆர்வமாக கேட்டுக் கொண்ருந்தனர்.

மற்றவர்களுக்கு கஷ்டம் என்றால் வேடிக்கை பார்க்க மக்கள் ஆர்வமாகத் தான் இருக்கிறார்கள். எழுந்து நிக்க முடியாமல் தவித்த நபரை நான் தான் கை பிடித்துக் கொண்டு அமர வைத்தேன். இப்ப பாத்தா யாருடைய உதவியும் இல்லாமல் நிக்கிறாரு. இருமிக் கொண்டு இருந்த நபர் சத்தமில்லாமல் இருக்கிறார். யாருக்காவது பிரச்சனை, வந்தா, நம்ம ளுக்கு வந்த நோயும் போகுமா? என்று வந்த நபர்களை பார்த்து மனதிற்குள் கேள்வியாக கேட்டுக் கொண்டிருந்தான்.

அந்த நபர் போன வேகத்தில் மீண்டும் குருவிடம் வந்து நிள்றார். அங்கு இருந்த நோயாளிகள் மீண்டும் நோயாளியாக மாறினர். இருமல் சத்தம் கேட்க தொடங்கியது. அனைவரும் ஆவலாக இருந்தனர். அந்த நபர் என்ன கேப்பார், இவன் என்ன சொல்லுவான் என்று அவர்களின் மனக் குமுறல் குருவின் காதில் விழுந்தது.

ஐயாயிரம் வேணாமா?,என்னுடைய நிலைமை, பரவாயில்லை. பக்கத்துல ஒரு சுழி போட்டுக்கோ, சுழியா, அப்படினா என்ன சாருனு கேட்டான். சுழி தெரியாதா? சைபர். குரு அதிர்ந்து போனான். ஐம்பது ஆயிரமா?, தர்மம் பன்றதுனாவே யோசிக்கிறாங்க. இவரு அவசர காலத்துல தர்மம் பன்றாரு. பணம் இருக்கு, அது செய்யுது, அம்மா உயிருக்கு பணம்.

ம்ம்ம்

குரு எதுவும் சொல்லவே இல்லை. அமைதியா இருக்க. டாக்டர் வந்துட்டாரு. டோக்கன் 1 ரெடியா இருங்க என்ற குரல் கேட்டது. அனைவரும் இங்கு எதுவுமே நடக்காதது போல் அமைதியானார்கள். அந்த நபர் பதட்டமாக என்ன செய்வது என்று தெரியாமல் அமர்ந்தார்.

அருகில் இருந்த அவரின் தாய், விடுப்பா, நீ போ, நா பாத்துகிறேன்.

யார்டயும் நீ கெஞ்சுறது எனக்கு சுத்தமா புடிக்காது. என்றதும் அந்த நபர்

## இறுதி நாள்

வந்தவர்கள்
இங்கே
என்னை பேசிவிட்டார்கள்...
வராதவர்கள்
அங்கே
என்னை பேசிவிட்டார்கள்...
வருவதும் போவதுமாய்
இருந்தவர்கள்
இங்கேயும் அங்கேயும்
என்னை பேசிவிட்டார்கள்...
இப்போது எனக்கான
ஏற்புரை நேரம்...
எனது பேச்சு
எல்லோருக்கும் கேட்காதென்பது
தெரியுமெனக்கு!
சிலருக்கு மட்டும்
என் பேச்சு கேட்பதால்
கை தட்டிக் கொண்டதை
நான் மகிழ்ந்து கொண்டேன்!
ஏற்புரைக் கிடையே
விழுந்த மாலைகளால்
வியந்து போனவன்
திரும்ப எழுவேனா என்ன?!

**ம.சக்திவேலாயுதம்**
**நெருப்பு விழிகள்**

என்ன செய்வது தெரியாமல் கொஞ்சம் அமைதியாக இருந்தார்.

குருவிற்கு பணம் கேட்கலாம் என்று முடிவுக்கு வந்தான். ஆனால் இப்ப கேட்டா!

சார், தப்பா நினைப்பாரு,

திரும்ப வந்து கேட்டா, ஓகே சொல் லலாம் என்று அமைதியாக அமர்ந்து விட்டான். டோக்கன் 2 என்று குரல் வந்தது.

அவசரம்! அவசரம்! என சொல்லிக் கிட்டு இருந்தார். இப்ப வந்து கேக்காம இருக்காங்களே! நம்ம கேக்கலாம் என்று முடிவுக்கு வந்தான் குரு. ஆனால் அந்த நபர் கண்களை மூடியபடி இருந்தார். கண்களை திறக்கட்டும் கேக்கலாம்.

நேரம் போனது.

டோக்கன் 3 என்று குரல் வந்தது.

பொறுமையாக இருந்த குரு, கண்ண திறக்க மாட்டாரு, ஓடி, ஓடி தூங்கிட்டாரு, நம்ம பணம் கேக்கலாம் என்று எழுந்தான். அந்த நபரின் தாய், செய்கையில் வராதே, அமரவும் என்றார். குருவிற்கு புரியவில்லை. வரும் போது கை அசைக்க முடியாம இருந்த அம்மா! எப்படி இப்படி! என்று அமர்ந்தான்.

டோக்கன் 4 என்று குரல் வந்தது.

குருவின் அப்பா, நீ அப்பவே யோசிக்கனும், இப்ப போய் கேக்கப் போற, ஒரு தடவதான் வாய்ப்பு வரும். திரும்ப திரும்ப வராது என்று கூறி கண்ணை மூடிக் கொண்டார்.

நீங்க தூங்கிட்டு இருக்கீங்கனு பாத்தா, இப்படியா! என்ன செய்வது புரியாமல் குரு அமைதியானான்.

டோக்கன் 5.

குரு அப்பாவை அழைத்துக் கொண்டு போனான். டாக்டர் அப்பாவை முழுவதுமாக பரிசோதனை செய்து முடித்து விட்டு உடல் உபாதைகளை கூறினார். ஆனால் குருவிற்கு எதுவும் காதில் விழவே இல்லை. நினைவு முழுவதும் பணத்தை சுற்றிக் கொண்டிருந்தது. சொன்னது புரிஞ்சுச்சா, என்று டாக்டர் கேட்டதும், பணம் தாங்க மாத்திக்கலாம் என்று குரு வேகமாக கூறினான்.

டாக்டர், குழப்பமாக, என்ன? ஆச்சு, நா பணம் தரனுமா புரியலையே என்றார். குருவின் அப்பா, அவன் வேலை குழப்பத்தில் இருக்கான். நீங்க சொன்னது எனக்கு புரியுது என கூறி வெளியே வந்தனர்.

குரு மருந்து வாங்க நின்று கொண்டி ருந்தான். அந்த நபரின் தாய், அருகில் வந்து தம்பி, நா பயந்துட்டேன். நீ பணத்த வாங்கி டோக்கனை தந்துருவேனு. எ புள்ள வெளிநாடு போறது எனக்கு புடிக்கல. நா சொல்லிப் பாத்தே, கேக்குற மாதிரி தெரியல, அதனால நெஞ்ச புடிச்சு கீழ விழுந்து நடிச்சேன். நீ செஞ்ச உதவிக்கு அந்த பணத்த நா தரேன் என்றதும்,

பணமா! அதோட தேவை இப்ப எனக்கு இல்ல. உங்க ஆசைய காப்பாத் துறது அவரோட கடமை. அவருக்கு புரிய வைங்க என்றான் குரு. இதை மறைந் திருந்து பார்த்து கொண்டிருந்த அந்த நபர் ஓடி வந்து தாயிடமும் குருவிடமும் மன்னிப்பு கேட்டார்.

குருவின் அப்பாவும் இதை கவனித்துக் கொண்ருந்தார். மருந்துகள் வாங்கிக் கொண்டு இருவரும் வீட்டிற்கு நடந்து கொண்டிருந்தனர்.

குரு அப்பா, எனக்கு சந்தோஷமா இருக்கு. நலம் மருத்துவமனைக்கு போனதுல நா நலமா இருக்கேன். உன்னால அந்த அம்மா ஆசை நடந்துருக்கு என்று அன்பாக பேசினார். தினமும் திட்டும் அப்பா அன்பாக பேசியதை கேட்டு குரு அப்பாவுடன் வீடு வந்து சேர்ந்தான். ■

# உள்வாங்கும் நேரம்

கனவுகள் அற்றப் பூமியாய்...
காற்றில் மிதக்கும் நிஜங்கள்!!

மரங்கொத்திப் பறவையாய்...
நொடிகளில் கடக்கும் காலங்கள்!!

தினந்தோறும் ஒத்திகைப் பயணமாய்..
விழி மூடும் உறக்கங்கள்!!

உயிர்வளியென உள் வாங்கும்
மூச்சில் ஊசலாடும் உயிர்கள்!!

பிரபஞ்சத்தின் பெருவெளியின்
இறுதியில் சிறுப் புள்ளியாய் கரையும்
துகள்களாய் ஜீவராசிகள்!!

அதில் சூட்சும சிந்தனையில்
'வந்த வழி மறந்த
வழிப்போக்கர்களாய் நாம்!!?

எதுவும் அற்ற வெற்றிடமாய் மறையும்
நமக்கு... அடையாளம் தான் என்ன?

இனியாவது யோசிப்போமா?
சுவாசத்தை உள்வாங்கும் நேரம்
கொஞ்சம்... 'மனிதத்தையும்' சேர்த்து
உயிர் வாழ...!?

**நெல்லை. க. சோமசுந்தரி.**
சென்னை



நம் எண்ணங்களுக்குள் சிறைப் பட்டு தவிக்கும் நம்மை நாமே விடுவித்துக் கொள்வது தான் மன்னிப்பு

- லூயிஸ் ஸ்மீட்ஸ்

# மலரும் மன்னிப்பு

Dr. ஃபஜிலா ஆசாத்
(International Life Coach - Mentor - Facilitator)

உடம்பு சரியில்லைன்னு டாக்டரைப் பார்க்கப் போனால், ஸ்ட்ரெஸ் இல்லாம இருங்க, கோபப்படாதீங்க, மனசை லேசா வச்சிக்கிருங்கன்னு சொல்றார். துரோகமும், ஏமாற்றமும் நிறைந்த இந்த உலகத்திலே எப்படி கோபப் படாம இருக்கமுடியும், பட்ட அவமானமும் வெறுப்பும் மனசு நிறைந்து இருக்கும்போது, எங்கேயிருந்து மனசை லேசா வச்சிக்கிறது, இதிலே எப்படி ஸ்ட்ரெஸ் இல்லாம வாழ்றது?

ஸ்ட்ரெஸ் இல்லாம வாழ முடியுமா என்று கேட்கிறீர்களே, ஸ்ட்ரெஸ் இருந்தால் (ஆரோக்யமாக) வாழ முடியாது என்று அறிவியல் கூறும் நிதர்சனத்தை அறிவீர்களா?!

நம் உடலின் இயக்கங்களில் பெரும் பங்கு வகிக்கும் நம் ஆழ் மனதின் சங்கேத மொழி பாஸிட்டிவ் எண்ணங்களாக இருக்க, அதன் தலையாய பணி, நம் உடலைப் பாதுகாப்பதாக இருக்கிறது. கோபம், குரோதம், பயம் என்று நெகட்டிவ் உணர்ச்சிகளை நம் மனதில் போட்டு வைக்கும் போது அது ஆழ்மனதில் பதிந்து, அதன் அதீத சக்தியை உபயோகிக்க விடாமல் ஸ்தம்பிக்க வைத்து விடுகிறது. அதனால் தான் கோபமோ வருத்தமோ இருக்கும் போது அறிவு பூர்வமாக சிந்திக்க முடியாமல் போய் விடுகிறோம். அது மட்டுமில்லாமல் இது நம் நரம்பு மண்டலத்தின் செயல்பாடுகளிலும் கை வைக்க, அது நம் எதிர்ப்பு சக்தியில் கை வைக்கிறது. இதனால் பல நோய்கள் உண்டாவதோடு, வந்த நோய்கள் குணமா வதற்கும் கால தாமதமாகிறது.

ஆனால், என்ன தான் மனசையும் உடம்பையும் ரொம்பவே பாதிக்கக் கூடிய உணர்ச்சியால் கோபமும், வெறுப்பும், குரோதமும்இருந்தாலும்,ஏழை,செல்வந்தர், படித்தவர்கள், படிக்காதவர்கள், இப்படி யாரா இருந்தாலும் நிச்சயமா அவங்ககிட்ட ஒரு தீர்க்கப்படாத கோபமும், பாசி படிஞ்ச ஒரு வெறுப்பும் இருக்கும்.

இந்த கோபம் நமக்கு என்னவெல் லாம் தீங்கு செய்யுதுன்னு அறியாமலேயே, யாரோ நம்மை ஏதோ பண்ணிட்டாங் கன்னு, அவங்க மேலே, நம்மைப் பொறுத்த வரைக்கும், அவங்க மேலே நாம கோபமா இருக்குறோம். அந்த யாரோ மேலே நாம எதுக்காகவோ வெறுப்பா இருக்குறோம். அவங்க நமக்கு தீங்கு செய்தாங்களா, இல்லையாங்கிறதை விட, அவங்க நமக்கு தீங்கு செய்திட்டாங்க, துரோகம் பண்ணிட்டாங்க, அவமானப் படுத்திட்டாங்க, அப்படீன்னு நினைத்து அந்த கோபத்தையும், அந்த வெறுப்பையும் நம்ம மனசுக்குள்ளே நாம தூக்கி சுமந்து, நமக்கு நாமே தீங்கு விளைவித்துக் கொண்டு இருக்கிறோம்.

இப்படி ஸ்ட்ரஸ்ஸைப் பற்றி யும், அதன் விளைவுகளைப் பற்றியும் மேலை நாட்டிலேபலஆராய்ச்சிகளும்,அறிக்கை களும் வெளி வந்தாலும், டாக்டர் ஸ்டீவன் ஸ்டான்ஃபோர்ட், பல நோயாளிகளை வைத்து செய்த ஆராய்ச்சியும், அதன் அறிக்கையும், தீர்வுகளும் நம்மை யோசிக்க செய் கிறது.

அவமானம், வன்மம், ஒருவர் மனதில் கிடக்கும்



போது, அது அவர் சக்தியை எல்லாம் உறிஞ்சி, நோய் எதிர்ப்பு சக்தி இல்லாமல் செய்து விடுகிறது. 61% நோய்களுக்கும், அவை குணமாக கால தாமதமாகுவதற்கும், குணமாகாமல் போவதற்கும், இந்த எதிர்மறை எண்ணங்கள் தான் மூல காரணம்னு தன் ஆராய்ச்சியில் சொல்கிற டாக்டர் ஸ்டீவன் ஸ்டான்ஃபோர்ட், இந்த கோபமும் வெறுப்பும், பல நோய்க்கு மூலகாரணமா இருப்பதனால் அந்த வெறுப்பு இல்லாம, அந்த கோபமில்லாம, மற்றவங்களை மன்னித்து விடுவதுதான் நமக்கு நல்லதுன்னு சொல்லி, (forgiveness therapy) "ஃபர்கிவ்னெஸ் தெரபி" அப்படீங்கற ஒரு மருத்துவ தீர்வையும் அறிமுகப்படுத்துகிறார்.

இந்த 'ஃபர்கிவ்னெஸ் தெரபி' மூலமா, பெரும்பாலான நோய்கள் குணமாகுதுன்னு சொல்கிற டாக்டர் ஸ்டீவன், மன்னிக்கிறது பலகீனமான செயல் இல்லை. அது பெருந்தன்மையான செயல் என்பதோடு, 'ஃபர்கிவ்னெஸ் தெரபி' மூலம் மன்னிக்க வேண்டியவர்களை நேருக்கு நேர் சந்திக்காமலேயே, நம் மனதுள் மானசீகமாக மன்னிக்கும் முறையை சொல்லித் தருகிறார். மன்னிக்க இயலவே இல்லையே என்று தவிப்பவர்களிடம் மன்னிப்பது போல் பாவனையாவது செய்யுங்கள், என்று அதன் சிறப்பை வலியுறுத்துகிறார்.

மன்னிப்பு, ஒருவர் மனதில் இருக்கும் வன்மத்தை நீக்குகிறது. மன அழுத்தத்தைக் குறைக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப் படுத்துகிறது. அது மட்டுமல்ல, மன்னிப்பதின் மூலமா மனசிலே இருக்கற வெறுப்புணர்ச்சி, காழ்ப்புணர்ச்சி முற்றிலும் வடிந்து போகிறது. தவிர, அப்படி மன்னிப்பதே ஒரு பெருந்தன்மைன்னு நினைக்கும் போது, மன நிம்மதி வருகிறது. மனசு இலகுவாகி, நோய் குணமாகுது என்கிறார் டாக்டர் ஸ்டீவன்

மன்னிப்பில் இவ்வளவு தீர்வு இருக்கிறதான்னு நமக்கு வியப்பா இருக்கிற அதே நேரம், சமீபத்தில் நடந்த இந்த psychological case stuydy யைப் பார்ப்போம்.

மிஸ்டர் ஜான் இரு குழந்தைகளின் தந்தை. ஒரு நாள் அவர் தன் மனைவியையும், பிள்ளைகளையும் தவிக்க விட்டு விட்டு, எங்கோ சென்று விடுகிறார். காலம் ஓடுகிறது. மனைவி இறந்து விடுகிறார். பிள்ளைகள் வளர்ந்து ஆளாகி நிற்கிறார்கள்.

திடீரென்று ஒரு நாள் மூத்த மகன் அலுவலகத்தில் இருக்கிறார். யாரோ அவரைப் பார்க்க வந்திருப்பதாக சொல்கிறார்கள்... யாரென்று பார்த்தால் தன் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை. ஒரு காலத்தில் தன்னுடைய ஹீரோவாக விளங்கிய தன் தந்தை, என்ன நடக்கிறது என்று கூட அறியாத வயதில் தங்களை தவிக்க விட்டு விட்டு சென்ற தந்தை, இன்று வயது முதிர்ந்து, நரை கூடி, தள்ளாடி தன் முன் நிற்கிறார். ஓ... மை காட். இது கனவாக இருந்து விடக் கூடாதா? என் தந்தையா இது.. ஏன் விட்டு சென்றார். இன்று ஏன் வந்திருக்கிறார். மனமெங்கும் இனம் புரியாத வேதனையும் தவிப்பும் எழ, அவர் கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வடிகிறது.

தன்னைக் கண்டவுடன் இயன்றும், இயலாமலும் ஓடோடி வந்து, தன்னை நெருங்கி, ஆரத்தழுவி, தள்ளாடும் கைகளுக்குள், தன்னை அள்ளிப் பருகும் தன் தந்தையையே வைத்த கண் வாங்காமல் பார்க்கிறார். அந்த முதிர்ந்த கண்கள் என்னை மன்னித்து விடு எனக் கெஞ்ச, அந்தக் கைகள் வளைந்து என்னை ஏற்றுக் கொள் என்று துடிக்க, என்ன இருந்தாலும் நீங்கள் என் தந்தை உங்களை ஏற்றுக்

வீழ்ந்திடின் துடிக்கும் கண்கள்
உணர்வறியாது உதவுகரம்
தாழ்ந்திடின் தாங்கும் இதயம்
இரங்கும் நட்புறவு

**இரா. விஜயகல்யாணி**

கொள்வது என் கடமையென மகனும் ஏற்றுக் கொள்கிறார். மகனும் தந்தையும் நெகிழ்ந்து போக அந்த இடம் மன்னிப்பால் நிறைகிறது.

அடுத்து, இதே நினைவோடு தந்தை, தன் இளைய மகனைப் பார்க்க செல்கிறார்.

உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார்கள். ஆஃபிஸ் பையன் சொல்லி விட்டு செல்கிறான். வந்து நிற்கும் அந்த முதியவரை முதலில் இளைய மகனுக்கு அடையாளம் தெரியவில்லை. அடையாளம் தெரிந்த பின் அங்கே நிற்க அந்த முதியவருக்கு அவர் இடம் தரவில்லை.

எந்த முகத்தோடு நீங்கள் இங்கு வந்தீர்கள். நீங்கள் எங்களுக்கு இழைத்த துரோகத்தை மன்னிக்கவோ, மறக்கவோ எங்களால் முடியவே முடியாது என்று கத்தும் மகனைப் பார்த்து கதறி அழும் தந்தையால் எதுவும் செய்ய முடியவில்லை. அவர் தாங்கொணாத வேதனையோடும், குற்ற உணர்ச்சியோடும் அந்த இடத்தை விட்டு நகர்கிறார்.

நாட்கள் நகர்கிறது. கடும் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக அந்த முதியவர் ஒரு மனோதத்துவ நிபுணரிடம் செல்கிறார். அங்கோ... அதே பிரச்னையோடு, செயலற்ற மன நிலையில், அந்த இளைய மகனும் சிகிச்சைக்காக காத்திருக்கிறார்...

இது தான் நாம் கவனிக்க வேண்டியது. இதுதான் இந்த case study யில் முக்கியமானது. மனதில் எந்த குரோதமும் வைக்காத மூத்த மகன் ஆரோக்யமாக இருக்க, தன்னை ஏற்றுக் கொள்ளாத தன் இளைய மகனை நினைத்து வருந்தி, தான் தவறு செய்து விட்டோம் என்று குற்ற உணர்ச்சியில் துடித்த தந்தைக்கு மட்டும் மன அழுத்தம் வரவில்லை. அந்த தந்தையை மன்னிக்கவும் முடியாமல் அதை ஏற்றுக்கொள்ளவும் முடியாமல், தவித்த அந்த இளைய மகனுக்கும் மன அழுத்தம் ஏற்படுகிறது. இருவரும் ஒரே மருத்துவரிடம் சிகிச்சைக்காக வந்து நிற்கிறார்கள்.

***இந்த உண்மையான case study நமக்கு அறிவுறுத்துவது ஒன்றுதான். உங்கள் ஆரோக்யத்தை நீங்கள் பேணிக் கொள்ளுங்கள். அதற்காக நீங்கள் எவ்வளவு விட்டுக் கொடுத்தாலும் தகும்.***

அதுமட்டுமில்லை. டாக்டர் மைக்கல் பாரிஷ், ‘மன்னிப்பு’ தரும் நன்மைகளை ஆராய்ந்து “ஃபர்கிவ்னஸ் ப்ராஜக்ட்” என்ற ஒரு நூல் எழுதி இருக்கிறார்.

மன்னிப்பின் நல்ல விளைவுகளையும், மன்னிக்காததினால் ஏற்படும் தீய விளைவுகளையும் எடுத்து சொல்லி, மன்னிப்பதன் மூலமாக எல்லா நோயும் குணமாகுதுன்னு மீண்டும் வலியுறுத்துகிற அந்த நூல். மன்னிக்கும் மனப் பான்மையினாலே, வேறு யாருக்குமில்லை உங்களுக்குக்குத்தான் நீங்கள் நல்லது செய்கிறீர்கள். மன்னிக்க விரும்பாமல் வன்மம் பாராட்டும் ஒருத்தருக்கு ‘கார்டிசால்’ என்னும் ஸ்ட்ரெஸ் ஹார்மோன் அதிகம் சுரக்குது. அது அவங்க மன அழுத்தத்தை மிக அதிகப் படுத்தி, ஒரு நோயை உன்டாக்குவது மட்டுமல்லாமல் அதை எந்த மாத்திரை மருந்தினாலும் இலகுவில் குணமடைய முடியாத தாக்கத்தை உடம்பில் ஏற்படுத்துதுன்னு அறிவியல் பூர்வமா விவரிக்கிறார்.

ஆக, மன்னிப்பு, மகானாக்குதோ இல்லையோ, மனிதனை ஆரோக்கியமா வாழ வைக்குது. அந்த மன்னிப்பை, நம் கையிலெடுத்தால், சுற்றமும் நட்பும் மட்டுமல்ல, நிம்மதியும் ஆரோக்கியமும், தேடி வரும். ஸ்ட்ரெஸ் இல்லாத வாழ்க்கையும், ஸ்ட்ரெச்சர் இல்லாத முதுமையும், தானே கை கூடும். ■

# மௌனமாய் வந்து போகிறேன்

**தினுஷா மகாலிங்கம்**
இலங்கை

அத்தனைக்கு பின்னும்
நான் சிரித்துக்கொண்டே
நகர்கிறேன்.

ஒரு கடலோ
பட்டாம்பூச்சியோ
நீல வானமோ
நிறைந்த நிலவையோ
சுவீகரிக்கமுடியாத
மனதோடு
அத்தனைக்கு பின்னும் நான்
நலமாகவே இருக்கிறேன்.

ஒன்றும் இல்லை.

இப்போதைக்கு நிரப்பிக்கொண்ட
கசப்பினை மிடறு மிடறாக
விழுங்கி தீர்க்க மட்டுமே
தெரிகிறது எனக்கு...

யாருக்கெல்லாம் தெரியும்?
ஒரு பெரும் மௌனத்தோடு
உழன்று கொண்டிருப்பது
அத்தனை சுலபமானதாக
இருப்பதில்லை என்று...

அங்கு விசாரிக்கப்படாத என்
தனிமையின் நீட்சிகள்
முட்டிமோதி
வெறுமையின் விசும்பல்களை
தீர்த்து கொண்டிருக்கும்.

நானும் எப்போதும் போல
நிரப்பப்படாத பெருந்தனிமையை
புசித்துக்கொண்டே நகர்கிறேன்.

நீண்டு உயர்ந்து வளர்ந்து
கிளைவிடும் வாழ்க்கையில்
எப்போதும் போல
உதிர்ந்துக்கொண்டே போகிறேன்.

அங்கு
வனமெங்கும் கருமைகளை
வாசித்து காத்திருக்கிறது
நீள் வலிகள்.

அதனாலென்ன?
நான் மௌனமாய் இருந்துவிடுகிறேன்.

எப்போதும் போல
அத்தனைக்கு பின்னும்
சிரித்துக்கொள்ளக் காத்திருக்கும்
சாயங்களில் நேசமுற
உலர்ந்து கொள்கிறேன்...

இப்படியே
சொற்களற்று உறைந்து போகட்டும்
என் மொழியின்
நெடி ...

நான் மௌனமாகவே
இருந்துவிட்டுப் போகிறேன்.

# கனவுப் பறவைகள்

**– புல்லாங்குழலன்**

நடக்கிறேன் நடக்கிறேன் என்னைச் சுற்றி எங்கும் மனிதர்கள் ஜோடி ஜோடியாகச் சென்று கொண்டிருக் கிறார்கள். சில மணி நேரங்கள் கடக்கின்றன. மணற்பாங்கான பாலைவனம் போலிருக்கிறதே, காத தூரம் வரை எங்கும் மணல் மேடுகளே தெரிகின்றன. திடீரென நான் வானத்தில் நடப்பது போலிருக்கிறது. மேகக்கூட்டங்கள்என்னைத் தொட்டு விளையாடுகின்றன. சட்டென்று நான் கடலில் நடக்கிறேன். தண்ணீரில் கால் வைத்து நடக்கிறேன். கடல் என்னை உள்ளே இழுக்க வில்லை. உறடயோகம் படித்து விட்டேனோ? திடீரென்று பார்த்தால் ஒரு வீட்டிலிருக்கிறேன். என் அறை போலிருக்கிறதே. ஆம் அது என் அறை தான். ஆம். அது என் வீடு தான்.

இருள் சூழ்ந்த வெளியுலகில் அங்கங்கே வெளிச்சத் திட்டுகள். மின் விளக்குகள் தான். சுவர்க்கடிகாரத்தைப் பார்க்கிறேன். மணி 1.30ஐக் காட்டுகிறது. இரவுப் பயணமா போனேன். தடுமாற்ற மாய் இருக்கிறதே.

பிரதிபா, இன்னும் நீ தூங்கவில் லையா அம்மா என்ற குரல் கிணற்றில் இருந்து கேட்பது போலிருக்கிறது. சற்றே கண்ணை நன்கு விழித்து நோக்குகிறேன். அது என் அம்மா எனத் தெரிகிறது.

பிரதிபா இப்படித் தூங்காமல் விழித்திருக்காதே, இப்போதே உடல் மெலிந்திருக்கிறாய். உன் கணவன் சீக்கிரம் வந்துவிடுவானம்மா. நீங்கள் தான் ஸ்கைப்பில் வாரம் ஒருமுறை பேசுகிறீர்களே. பிறகு எதற்கு இப்படிக் கவலையில் உழல்கிறாய்? வா அம்மா, இந்த சூடான பாலைக் குடி என ஆதரவாய் என்னை அணைத்து அழைத்துச் சென்று என் படுக்கையில் உட்கார வைத்து பாலைப் பருகச் சொல்லுகிறார்கள் அம்மா.

பாவம் அம்மா, நான் தான் இப்படி யிருக்கிறேன் என்றால் என் அம்மாவும் என் கவலையைப் பார்த்து வாடிக் களைத்து விட்டார்களே. சரி. இனி அம்மாவுக்காகவாவது சற்று மாறுவோம் என நினைத்து அந்தப் பாலைக் குடித்து டம்ளரைக் கீழே வைத்தேன். அம்மாவின் கண்களில் கண்ணீர்.

என்னம்மா, என அவர்களை அணைத்தேன்.

இங்கே பார்த்துக் கொண்டிருந்த வேலையே நல்ல சம்பளத்துடன் தானே இருந்தது. எதிர்காலம் பிரகாசமாக இருக்க

---

## உயர் உயிர்

உயிர் பறிக்கப்பட்டு
சவ ஊர்வலமாய்
மரக்கட்டைகள்
சென்றன
மனிதர்களுக்கான
சவப்பெட்டி தயாரிக்கும்
தொழிற்சாலைகளுக்கு
உயிர் கொடுக்க...

பா.சக்திவேல்
கோயம்புத்தூர்

வேண்டுமென்று மாப்பிள்ளை சொன்ன போதே நாங்கள் அவரிடம் சொன்னோம் உங்கள் சம்பாதனையே போதும். நாங்கள் வைத்திருக்கும் காசு பணமெல்லாம் உங்களுக்குத் தானே. என் ஒரே மகளுக்குச் செய்யாமல் நாங்கள் வேறு என்ன செய்யப் போகிறோம்? என்றேன்.

நீயும் சேர்ந்து கொண்டு ஒன்றும் சொல்லாமல் மாப்பிள்ளை சொல்வதையே ஆமோதித்தாய். ஒரு வருடம் தான் அக்ரிமென்ட். அதை மட்டும் பல்லைக் கடித்துக் கடந்துவிட்டால் பிறகு இங்கே இன்னும் அதிக சம்பளத்துடன் வந்து விடலாம் என்றாரே. என்னாயிற்று, நீ இப்படியாகிவிட்டாய்.

அம்மா அவரைக் குறை சொல்லாதே. அவர் எங்கள் வாழ்வு வளமாக வேண்டும் என்று தானே இந்த முடிவெடுத்தார்.



நெருஞ்சி முள்ளாய்
குத்துகின்ற காதல்
குறிஞ்சி மலராய்
இருந்திருக்கவேண்டும்...!

**ச. இராஜ்குமார்**
திருப்பத்தூர் மாவட்டம்

கல்யாணமாகி இரண்டு மாதங்கள்கூட நீங்கள் சேர்ந்து வாழ வில்லையே. அந்தக் கொடுமையால்தானே நீ இப்படி இளைக் கிறாய் என்ற என் அம்மாவில் குரல் முடிவதற்குள்ளாகவே நான் கனவுலகில் சஞ்சரிக்கத் தொடங்கினேன்.

நானும் நிரஞ்சனும் நெருங்கிய உறவு தான் என்றாலும் சந்தர்ப்ப வசத்தால் பிரிந்து தானிருந்தோம். அவர் படிக்கச் சென்றது வேற்றூர். நான் பெண்கள் கல்லூரியில் படித்தேன். அலைபேசியில் பேசுவதோடு சரி. அதுவும் சில நிமிஷங்களே பேசுவோம். படிப்பு படிப்பு என அவர் இருந்தார் அப்போது. நானும் என் படிப்பை முடிப்பதில் தீவிரமாயிருந்ததால் காதல் ஏணியில் ஏறத் தொடங்கவில்லை. ஆனால் எப்போது இரு வீட்டாரும் எங்களுக்கு நிச்சயதார்த்தம் நடத்தினார்களோ அப்போதே காதல் உணர்வுகள் எங்கள் இதயங்களில் பச்சக் என்று ஒட்டிக் கொண்டன...

நாங்கள் உறவென்பதால் எங்களை எங்கள் வீட்டார் அதிகம் தடுக்கவில்லை. என்றாலும் ஒரு வரைமுறையில் நாங்கள் காதல் வளர்த்தோம். ஒரு நாள்கூட அவரைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியாது. அவருக்கும் அதே நிலை. நிரஞ்சன் மிக மிக நல்லவர். எந்த கெட்டப் பழக்கங்களும் அற்றவர். ஆளும் அழகன். பிறகெப்படி நான் காதலிக்காமல் இருப்பதாம்.

திருமணமும் முடிந்தது. நாங்கள் ஹனிமூனுக்கு சிங்கப்பூர் சென்றோம். வாழ்வின் இனிய அத்தியாயங்களை அங்கே தான் எழுதினோம். ஒரு வாரத்தில் இருவரும் இன்ப நிலையில் தான் இருந்தோம். அந்த நாட்கள் இனி வருமா என்கிற பயம்கூட இருக்கிறது. அப்போது தான் அவருக்கு கனடாவில் நல்ல ஒரு அசைன்மென்ட் வந்தது. அப்போது தான் அவர் நம் எதிர்காலத்துக்கும் நம் பிள்ளைகளுக்கும் என பொருள் சேர்க்க வேண்டுமே, அதனால் இது ஒரு வருட

அக்ரிமென்ட் தான் என்றார், நமக்கு இது கஷ்டமாகத் தானிருக்கும், பொறுத்துக் கொள்ளலாமா என்றார். நானும் ஒரு வருடம்தானே சரி என்றேன்.

அவர் புறப்படும் நாள் வந்தது. அவர் ப்ளைட்டுக்குப் போவதற்குத் தயாரானபோது தான் எனக்கு அவருடைய பிரிவு அதிகத் துன்பமாயிருக்குமே என்கிற ஞானோதயம் வந்தது. அது என் கண்களில் கண்ணீர் ரூபத்தில் வழிந்தது. அவரும் கண் கலங்கி தான் நின்றிருந்தார். ஒரு வழியாக அவர் பிரிந்து புறப்பட்டார்.

கொடுமை என்னவென்றால் அதற்குப் பிறகு ஸ்கைப்பில் பேசுவதுகூட ஒரு வாரத்திற்கு ஒரு முறை என்றானது தான். அப்படி ஒரு சிஸ்டம் அந்த ஆபிசில். அது அவர்கள் போன். அப்படி செட் செய்திருந்தார்கள். ஒரு வருடம் முடியப் போகிறதே என்று மகிழ்ச்சியில் திளைத்திருந்தேன். அதில் இடி போல் இறங்கியது. அவர் கூடுதலாக ஒரு வருடம்கூட அங்கே பணி செய்ய வேண்டும் என்று உத்திரவாம். அதைத் தட்ட முடியாதாம். என்ன செய்வது? வேலையை விட்டுவிட்டு வந்துவிடுங்கள் என்று நான் சொன்னேன். ஆனால் அப்படி விட்டால் இதுவரை சம்பாதித்ததில் பாதி தான் கைக்குக் கிடைக்குமாம். அவர்தான் என்னை சமாதானப்படுத்தினார்.. நீண்ட நேரம் நான் மௌனத்தில் ஆழ்ந்திருந்ததால் அம்மா என்னை உலுக்கினார். அப்போது தான் அம்மா கடைசியாகச் சொன்னது என் நினைவில் வந்தது.

அம்மா, நான் மட்டும்தானா, பாவம் அவரும் தானே. என்றேன்.

அப்போது என் தோழி மஞ்சரி அங்கே வந்தாள்.

என்னடி இன்னும் கவலையில் தான் இருக்கிறாயா?

மஞ்சரி, அவர் வர இன்னும் ஆறு

## ஹைக்கூ

●

வலுக்கும் புயல்
கரை ஒதுங்குகிறது
மீனவனின் நம்பிக்கை.

●

எண்ணத் தொடங்குகையில்
மறையும் நட்சத்திரங்கள்
ஆறுதலளிக்கிறது நிலா.

●

நீளும் ஒற்றையடிப்பாதை
துணையாய் வருகிறது
மனதிற்கு பிடித்த பாடல்.

●

வண்டியை இழுக்கும் மாடுகளுக்கு
தணியவில்லை தாகம்
பாரமாகிறது ஆற்றுமணல்.

●

தாகத்தில் பறவைகள்
தண்ணீர் தருகிறது
ஓட்டைப் பானை.

**ச. கோபிநாத்**
சேலம்



மாதங்கள்கூட ஆகுமாமே.

பொறுத்தது பொறுத்தாய் இன்னும் ஆறு மாதங்கள் தானே. பொறுத்துக் கொள் என்று என்னை ஆறுதல் படுத்தினாள்.

மஞ்சரி உன்னிடம் சொல்வதற் கென்ன? நான் இப்போதெல்லாம் ஒரு நிலையிலிருப்பதில்லை. எங்கு இருக்கி றேன், என்ன செய்கிறேன் என்பதே சில சமயங்களில் மறந்து விடுகிறது. கண்ட கற்பனைகளில் உலகையே சுற்றுகிறேன். இப்படியே போனால் நான் என்ன ஆவேனோ என பயமாயிருக்கிறது. என் தோள்கள் மெலிந்திருப்பது எனக்கே தெரிகிறது. அவர் வரும் போது நீ யார் எனக் கேட்காமலிருந்தாலே பெரிது என்று கண்ணில் நீர் பெருக்கினேன்.

நானும் தான் நிச்சயம் நடந்து தவிக்கிறேன் என்பது உனக்குத் தெரியாதா? எங்களுக்கு திருமணத்தை நிச்சயம் நடந்து ஒரு வருடம் தள்ளி வைத்திருக்கிறார்களே இது கொடுமையில்லையா? அலைபேசியில் பேசுவதோடு எங்கள் காதல் நொண்டுகிறது. எனக்கும் உன் நிலைமை தானே. நான் எப்படியோ சமாளிக்கிறேனே. அதுபோல் நீயும் இரு. பொறுத்தார் பூமி ஆள்வார் என்ற பழைய பழமொழி யை நினைத்துக் கொள் என்றாள் மஞ்சரி.

மஞ்சரி நீ இன்னும் தாம்பத்ய சுகம் அறியவில்லை என்பதால் உனது துன்பம் என்னளவில்லை. நான் அவரோடு முழு அளவில் தாம்பத்ய சுகம் கண்டவள். எங்களுக்குள் எந்த ஒளிவு மறைவுமில்லை. எங்களைப் பிரித்தாலும் எங்கள் மனங் களைப் பிரிக்கமுடியாது மஞ்சரி என்றேன்.

ஆமாம். நீ சொல்வது சரி தான். நான் கனவில் தான் காதல் டூயட் பாடுகிறேன். நீ உண்மையில் பாடியவள். அதனால் நீ சொல்வது கரெக்டாகத் தானிருக்கும்.

என்னைப் பார்த்தால் எப்படியிருக் கிறது மஞ்சரி. நோஞ்சான் பெண் போலி ருக்கிறேனா? மறைக்காமல் சொல்லடி என்றேன்.

ஒன்றுமில்லை, இப்போதும் நீ அழகாகத்தான் இருக்கிறாய். என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே காலிங் பெல் சத்தம் கேட்டது.

அம்மா தான் போய்க் கதவைத் திறந்தார்கள். பிரதிபா இங்கே வாயேன் எனக் கூச்சலிட்டார்கள். என்னவோ ஏதோ என நாங்கள் இருவரும் அங்கே ஓடினோம். அங்கே நான் காண்பது என்ன கனவா? எப்போதும்போல் கற்பனையா? என் கணவர் நின்று கொண்டிருந்தார்.

என்ன அப்படியே திகைத்து நின்று விட்டாய். என்னை உள்ளே கூப்பிடக் கூட ஒருவரும் தயாரில்லையா? எனக் கூறிச் சிரித்தார்.

மாப்பிள்ளை ஆறு மாதம் கழித்துத் தான் வருவீர்கள் என்று எழுதியதால் இவள் உங்கள் நினைவில் பைத்தியம் ஆகாத குறை மட்டும் தான் பாக்கி மற்றபடி கனவுலகில் மிதந்து படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறாள். என்றாள் என் அம்மா.

எனக்கு மட்டும் கஷ்டமில்லையா, உங்கள் மகளைப் பற்றி மட்டும் கவலைப் படுகிறீர்களே அத்தை என்ற என் காதல் கணவர் நான் மாறுதல் கேட்டு வர வேண்டும் என்று நினைத்த போது அவர்களே சென்னையில் எங்கள் பிராஞ்சுக்கு நீங்கள் வேண்டும். அங்கே போங்கள் என்று சொன்னார்கள். உடனே ப்ளைட் பிடித்து ஓடி வருகிறேன். அப்படி வந்தும் என் அன்பு மனைவி என் அருகில்கூட வருவதற்குத் தயங்குகிறாளே எனச் சொல்ல நான் ஓடோடிச் சென்று அவரைக் கட்டிப் பிடித்தேன் வெட்கத்தை மறந்து.

எல்லோரும் கொல்லெனச் சிரித்தார் கள். என் அம்மாவின் முகத்திலும் சிரிப்பு தாண்டவமாடியது. ■

## ஊன்றுகோலாய் பேரன்

தள்ளாத வயதிலும்  தளராத மனமே
தளிரான பேரன் தன்னம்பிக்கை ஊட்டுகிறான்
ஊன்றுகோலாய் உதவிடும் சின்னஞ்சிறு சிறுவனே
சுருக்கம் கண்டு சுளித்ததில்லை இவனே
செல்லும் இடமெங்கும் வழிகாட்டியாய் வந்திடுவான்
அன்பின் வடிவமாய் அரவணைத்து சென்றிடுவான்
ஆறுதல் தந்திடும் பாசத்தின் பண்பாளனே
எந்நாளும் தொடர்ந்திடுவான் ஊன்றுகோலாய் பேரன்...

**பெ. வெங்கட லட்சுமி காந்தன்.**

## அருங்கவி செய்கின் றேன்

காதலை வளர்க்கின் றேன்நான்
கன்னியே உன்னால் உள்ள
வேதனை மறந்து நித்தம்
வெண்மனம் கொண்டு நின்னை
போதனை இல்லா போதே
புலவனாய் மாறி ஏட்டில்
ஆதவன் ஒளியைப் போல
அருங்கவி செய்கின் றேனே

**– தமிழமின்**



# வெண்பாப் பயணம் 5






என்ன இருந்தாலும்  இப்படியா எப்போதும்
என்னை அழைத்தவுடன்  எங்குள்ளேன் - என்பவளே
சின்ன இடைவெளிக்கே  சீறுகின்ற நின்செய்கை
அன்பில் அதி-காரம் ஆம்

செ. ராசா

.

பொய்யால் பொருள்சேர்க்கும்  புத்தியினை ஊட்டாமல்
மெய்யன்பைத் தந்தென்னை  மேன்மையுறச் - செய்தாயே...!
எப்போதும் தீமையென்னை  ஏமாற்ற; என்தாயே
எப்படித்தான் வாழ்வேனோ  இங்கு..?

ஜ. க. நாகப்பன்

.

என்னசொல்வேன் நானிப்போ? எப்படியும் பார்வையினால்
என்னசெய்தேன் என்பதைக் கண்டிடுவாய்! - இன்னமும்
என்றனுக்கு எட்டாத கல்வியிதை எங்குகற்றாய்?
இன்றெனக்குச் சொல்வாய் இனிது!

சுரேஜமீ

.

நங்கையானாள் தோழியாக நானுற்றேன் பேரின்பம்
தங்கத்தைப் போன்ற தரங்கொண்டாள் - மங்காத
நேசத்தால் கண்படுமுன் நேரடியாய்க் காட்டுகிற
பாசத்தை மாற்றத்தான் பார்.

க. இராணி இலக்குமி,

.

கட்டுக் குடுமியின்னு கண்சொன்ன பொய்யால
ஒட்டுக் குடுமி உறவாச்சு - பட்டு
நரையதனில் மைப்பூசி நான்மயங்க மல்லிச்
சரமணிந்து வந்தாள் சரசு

க. சங்கரபாண்டியன்

.

எட்டடுக்கு மாளிகையாம் என்மன்னன் தங்கையே
பட்டாங்கைப் பேசிப் பழகாதீர் - ஒட்பால்
பணத்தை விரும்பாது பண்பை விதைத்தே
அணங்குபோல் வாழ்த(ல்) லழகு.

கவிஞர் வீக பொன்னையா

.

பார்த்துமே நாளும் பலவகையில் காய்கறிகள்
சேர்த்துமே வாங்க சினமேறி - ஆர்க்கும்
சிலம்பாக ஆடியே சீறுகிறாய் நானும்
புலம்பாமல் என்செய்வேன் போ .

கவிஞர். அ. முத்துசாமி, தாரமங்கலம் .

.

உண்டு கொழுத்தே உருமாறிப் போனதேனோ
குண்டான பெண்ணேநீ கொஞ்சமே - கண்டிடும்
கண்டதையும் தின்னாது கட்டாய் இருந்திடச்
செண்டாம் உடலே சிறப்பு.

கு. கமலசரஸ்வதி

.

பொன்னணி பூட்டி, புதிரெனக் காட்டியே
என்னைநீ தீண்டாய் எழிற்கொடியே! - என்றென்றும்
புன்னகை பூக்கும் பொலிவார் முகம்கண்டால்
நன்நகையா காதோ நவில்.

படைக்களப் பாவலர்

.

நற்குணங்கள் கொண்டுள்ள நான்பெற்ற செல்வமகள்
சுற்றங்கள் போற்றும் சுடர்விழியாள் - பெற்றோர்
எதிர்பார்க்கும் கல்வியை ஏனோ படிக்கா(து)
அதிகம் விளையாடு வாள்.

மாலதி திரு

.

அன்புள்ள தங்கையே! அண்ணன் எழுதிடும்
அன்புக் கடிதமிது, யாதெனில்! - நன்னலம்
நாங்கள் அனைவரும், நல்ல சுகமாநீ!
பூங்குழலே நன்றாய்ப் படி.

கு. லோகநாதன், மதுரை

.

பொன்னட்டி வேண்டுவதேன்  பெண்ணே! உனக்கென்றும்
இன்முகமே நல்லழகு இல்லவளே! - என்னை
உணர்ந்தேநீ கூடுவாய்  ஊடலின்றி காண்போம்
கணமும் விலகாக் களிப்பு.

வானதி சந்திரசேகரன்

.

பொசுக்குன்னு கண்ல பொலபொலன்னு கண்ணீர்
விசுக்குன்னு கோவந்தான் வேண்டா - நசுக்கித்தான்
எம்மனச நோகடிச்சி என்னத்தக் கண்டியோ
சம்மதந்தான் சொன்னேன் சரி!

இரா. அழகர்சாமி

.

இமைபோலே காக்கும் இனியவளே தாயே
சுமையென எண்ணாது சொல்வாய் - சமையலைக்
கற்பாய் மகளே கருத்துடன் என்றுதான்
மற்றென் பணிகள் மறந்து.

முனைவர் ஓசூர் மணிமேகலை

.

புதுசா சமச்சதப் புள்ளைக்குப் போட்டு
மெதுவா பழசெனக்கு  வெப்பா - இதுதான்
சரியில்ல மாறணுமென் சம்சாரம் சொல்லிப்
புரியாத சோகப் பொழப்பு

விசு. இம்மானுவேல், பெங்களூரு

.

அன்பானக் காதலிதான் அந்தோ எனக்காக
தன்னைத்தான் அள்ளியவள் தந்திடுவாள் - என்றும்
உயிரையும்  தருவேன்  உனதாவேன் என்றே
உயிரை எடுக்கின்றாள் ஓடு

வா. சண்முகம்

.

அன்னையவள் மாய்ந்திடவும் அப்பனும் ஓய்ந்திடவே,
உன்னிடம்நான் தஞ்சமான(து) உண்மையே - என்வாழ்க்கை
இன்புறவே அக்காநீ இல்வாழ்வில் நாட்டமின்றி
தன்னிறைவு கொள்ளல் தவறு!

பொதியன் செல்வம்...

.

உடுக்க நிறைய உனக்கிருக்கு வீணா
அடுக்கிறியே சேலை அடியேய் - நடுக்கடலில்
கப்பல்  துடுப்பாட்டம் காசுவேணும் வாழ்ந்திட
அப்பன் தரல அடங்கு

மைதிலி தயாளன்

.

வெண்பாப் பயணம் 5

அழுக்குசட்ட மாத்தாம அப்படியே வார;
கழுதயாட்டம் சுத்துற: காலுங் - கழுவாம;
சீனியள்ளித் திங்கிற: சீக்கிரமாத் தூங்குற:
ஏனிப்டி செய்யுற ஏய்.

சு. வி.லட்சுமி.

.

தூங்கையில காலிரண்டும் தோள்மேல. நள்ளிரவில்
ஏங்கையில புட்டிப்பால் ஏந்தணும்நான்! - பூங்கிளியாய்
ஒப்பனை செய்யுமகள் உட்கார்ந்து அழுதழைப்பாள்
அப்பன் கழுவணுமாம் ஆய்..!

வள்ளி முத்து

.

என்னூட்டுச் சின்னது என்டதா வம்பிழுக்கும்
தன்னோட அப்பனையும் தாம்பார்க்கா(து) - இன்றைக்கு
காசுபையில் ஐநூறு கண்டேன் அடதாம்மா....
தூசாகப் பேசும் தொடர்ந்து

தென்றல் கவி

.

ஆனவரை சண்டையென ஆனதில்லை ஆனாலும்
வானவில் போலவே வந்துபோகும் - போனக்
கதைக்கெல்லாம் போடுகிறாய் கண்ணீர் அணுகுண்(டு)
அதைத்தாங்கா(து) இவ்வுக்ரைன் ஆம்!

ஞால ரவிச்சந்திரன்

.

கண்கட்கு இடையே கவனமாக நின்றிருக்கும்
கண்ணியத்து நாசிபோல கச்சிதமாய் - பெண்கள்
நடுநிலையாய் புக்ககத்தை நன்றாகப் பார்த்தால்
கடுகளவும் ஏதுலகில் காசு !!

கிறிஸ்டினா அருள்மொழி



# வெண்பா போட்டி (பயணம்) 6

**சுவாரஸ்யமான போட்டி..**

**மார்ச் 26 - ஏப்ரல் 09 வரை....**

.

*வணக்கம் கவிஞர்களே...*

.

*பெருந்தகைகள், மூத்தவர்கள், அறிவிற் சிறந்தவர்கள் மத்தியில் நமக்கு எப்போதும் ஒரு அவையடக்கம் தேவைப்படுகிறது.*
*சரி... விஷயத்திற்கு வருவோம்...*

*எந்தவொரு காவியம் எழுதுவதற்கு முன்பும் அவையடக்கப் பாடல் கட்டாயம் எழுதவேண்டும்.*

*சரி... தங்களிடம் ஒரு காவியம் எழுதச் சொல்லி பொறுப்பை ஒப்படைத்தால் அதற்கு அவையடக்கம் எப்படி எழுதுவீர்கள் ??*
*அதில் எதுபோன்ற கற்பனையை வைப்பீர்கள்???*

இதோ எ-கா பாடல்....

.

**கற்பனையில் நான்மூழ்கிக்**
**கன்னித் தமிழ்த்தாயின்**
**பொற்பதத்தைப் போற்றி**
**புனைவதற்கு - நற்கவியாய்த்**
**தேன்கடலின் முன்னின்று**
**தீட்டுகின்ற என்பாட்டோ**
**வான்பறவை இல்லா**
**வனம்.**

.

*இதுபோல ஒரே வெண்பாவில் அவையடக்கம் பாடுவதே போட்டியின் விதி.....*

*வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில்.*
*எல்லாம் கற்பனைக்கே...*
*அது நகைச்சுவையானாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும். காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்...*

.

**என்றும் தமிழுடன்...**
**தமிழ்நெஞ்சம் அமின்**
மற்றும்
**தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு...**

தளர்வுகள் : - *தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.*



# ஹைக்கூ

■
அத்துமீறிய குடியேற்றம்
துரத்திட மனமில்லை
வீட்டுக்குள் குருவிக்கூடு.

■
உதிர்ந்த மலர்கள்
சேமித்து வைக்கிறேன்
பிரிவின் வலிகள்.

■
கொன்றைப்பூக்கள்
பூத்துச் சிரிக்கின்றன
பள்ளிக்கால நினைவுகள்.

■
கலைக்கப்படும் ஒப்பனை
இருளடைந்து போகின்றது
அந்தி வானம்.

■
மஞ்சள் பூச்சு
குளித்து அழகு பார்க்கிறது
அந்தி வானம்.

■
திருமணப் பந்தல்
வாடிப்போனது
முதிர்கன்னி மனம்.

■
வீட்டில் விஷேசம்
தீப்பற்றி எரிந்தன
பழைய பொருட்கள்

■
மனைவியை அடித்தவன்
வீதியில் ஆர்ப்பாட்டம்
மிருகவதை தடுப்போம்.

■
பிரிவுத் துயர்
துணைக்கு வந்தது
கண்ணீர்த்துளி

■
மஞ்சள் பூசி
நீராடிச் செல்கிறாள்
மாலைச்சூரியன்

■
பாலூட்டி வளர்த்தவள்
எல்லோரும் பாராட்டி
கொண்டாடுகிறார்கள்
அன்னையர் தினம்.

■
இரு கரங்கள் கோர்த்ததும்
இன்னும் நெருக்கமாகியது
ஒற்றையடிப் பாதை.

■
கொடுத்த முத்தம்
வெட்கிச் சிவந்து போனது
அந்தி வானம்.

■
ஊரெங்கும் அமைதி
எங்கே போய்விட்டது
மின்சாரம்.

■
மின்சாரத்தடை
இயங்க ஆரம்பித்தது
மனித இதயம்.

■
யாருமில்லாப் பொழுது
ஓடத் தொடங்குகிறது
நின்ற கடிகாரம்

- மக்கொனையூறாள்

# நெஞ்சு பொறுக்குதில்லை

முனைவர் ப. கற்பகராமன்
M.A.,M.A.,M.A.,M.Phil.,Ph.D.,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி சேலம் - 636003

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது இன்றைய கால மனிதர்களிடம் ஒவ்வொரு தருணத்திலும் பொய்ப்பித்துக்கொண்டே இருக்கின்றது. விலங்கினங்களே மனிதர்களிடம் பழக வெட்கப்படும்படி மனிதர்களுடைய வாழ்வியல் மாறி வருகின்றது. இதனை விவாதத்திற்காக வேண்டுமானால் நாம் மறுத்துரைக்கலாமே தவிர, உண்மையாக ஆராய்ந்தோமானால் இதனை மனதார ஏற்றுக்கொள்வதே சிறந்தது.

இவ்வளவு நாட்களாக எந்தெந்த மிருகங்களாகவோ வாழ்ந்துவிட்டோம். இனி வரும் காலங்களிலாவது மனிதர்களாக வாழ முயற்சிப்போம். மனிதர்களாக வாழ்வதையே விரும்பவில்லை எனில் மகான்களாக எப்படி மாறுவது?

நாம் வாழ்கின்ற இந்த வாழ்க்கை நமக்கான வாழ்க்கை இல்லை என்பது நமக்குத் தெரியும். நமக்கான வாழ்க்கையை வாழ்வதற்கு என்ன வழி என்பதும் நமக்குத் தெரியும். நாம்தான் நம்டமுடைய மனதிற்கு என்னென்னவோ காரணங்கள் கூறி> நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டு யார் யாராகவோ வாழ்ந்து வருகின்றறோம்.

தந்தை மகனின் அழகிய உறவை நம்முடைய பெற்றோரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளாத காரணத்தினால்,,நம்முடைய பிள்ளைகளுக்கு அவ்வுறவினைக் கற்றுத்தருவதை மறந்துவிட்டோம். இறுதியில் கொள்ளி வைப்பதற்குக் கூட பிள்ளை வருவதில்லை என்ற நிலைக்கு இதுவே காரணம் என்பதை ஒருபோதும் நாம் மறந்துவிடக்கூடாது.

உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு (திருக்குறள் -1122)

என்கின்றார் வள்ளுவர். உடம்பும் உயிரும் இரண்டற கலந்தது. உடம்பில் உயிர் இல்லை என்றால் அதனை சடலம் என்று கூறுவோம். உயிர் இல்லாத உடம்பால் ஒரு பயனும் இல்லை. உடம்புக்கும் உயிருக்கும் உள்ள இத்தகைய நெருக்கமே கணவனுக்கும் மனைவிக்குமானது என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். ஆனால் வள்ளுவர் வகுத்துக் கூறிய வாழ்வியலை இன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோமா என்றால் பல ஆயிரம் கேள்விகள் நமக்குள் எழுவதை நம்மால் மறுக்க இயலாது.

வெளியே தெரியக்கூடிய புற வாழ்க்கைக்கு மட்டுமின்றி, அன்புடைய இருவர் மட்டும் மனதளவில் மேற்கொள்ளும் அக வாழ்க்கைமுறைக்கும் இலக்கணம் வகுத்த ஒரே இனம் தமிழினம். ஆனால் இன்றைய மனித இனமோ, இந்த அக வாழ்வியலை அனைவரும் அறியும் வண்ணம் புறத்தே விற்றுக்கொண்டிருப்பது கண்டு நெஞ்சு பொறுக்குதில்லை.

உள்ளம் பெருங்கோயில்
ஊனுடம்பு ஆலயம்

என்கின்றார் திருமூலர். இவருடைய கூற்றின்படி, நம்முடைய உடம்புதான் ஆலயம். உடம்பில் உள்ள உள்ளமே கோயில். ஆலயம் என்றால் ஆன்மா லயம் ஆகும் இடம் என்பது பொருள். லயம் என்பதற்கு லயித்தல், ஒன்றிணைத்தல், கலத்தல் என்பது பொருள். கோயில் என்றால் இறைவன் குடி கொள்ளக்கூடிய இடம் என்று பொருள். ஆன்மா லயப்பட்ட இடத்தில் மட்டுமே இறைமை குடிகொள்ளும். இத்தகைய இறைமை குடிகொள்வதற்கு ஏதுவாக இந்த உடம்பை நாம் ஆலயமாக பாதுகாக்கின்றோமா என்றால்> இல்லை என்பதே உண்மையான பெருள்.

நம்முடைய வினைப் பதிவுகளைத் தீர்ப்பதற்காக ஒரு சிறு பயணமே நம் வாழ்க்கை. இந்தப் பயணத்திற்கான வாகனமே நம் உடல். உடலில் உள்ள ஐம்புலன்களே நம்முடைய வாகனத்தின் ஐந்து தேரோட்டிகள். ஐந்து தேரோட்டிகளும் ஒரேபாதையில் இயக்கினால் மட்டுமே வந்த இடத்தை நோக்கி மீண்டும் வாகனத்தால் செல்ல முடியும். ஆனால் ஐந்து தேரோட்டிகளும் ஐந்து திசைகளில் வாகனத்தை இயக்கும் போது வந்த இடத்தை மறந்து முற்றிலும் அதற்கு மாற்றான திசையில் பயணிக்கும் நிலை ஏற்படுகின்றது.

எது சரி என்பதே தெரியாமல் தவறானவழியைத் தேர்ந்தெடுப் பவர்களைக்கூட மாற்றிவிடலாம். அனைத்தும் நன்கு அறிந்தவர்களும் தவறான வழியில் பயணிப்பதையே ஏற்றுக்காள்ள இயலவில்லை.

கொடுப்பதைவிட கேட்பதையே பெரிதாக எண்ணி யாசகம் பெற்று வாழ்வது வாழ்வாகாது. புலியாகப் பிறந்தும் பூனையென எண்ணியே வாழ்வது அறிவார்ந்தவர்களுடைய செயல் அல்ல. கேட்பதற்கும் கொடுப்தற்கும் பெரிய வித்தியாசம் இல்லை. கேட்பதற்காக நீட்டும் கையை சற்றே மாற்றி நீட்டினாலே போதும் அக்கை கொடுக்கும் கையாக மாறிவிடும்.

எனவே பிறருக்குக் கொடுக்கும்படியான வாழ்வியலை வாழப் பழகிக் கொள்வோம். அது பொருளானாலும் சரி, புகழானாலும் சரி, வாழும் முறையானாலும் சரி. எதுவாக இருந்தாலும் பலருக்கும் சான்றாக அமையும்படி நம்முடைய வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்வாம். இல்லையெனில்>

“நெஞ்சு பொறுக்குதில்லையே -இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்
அஞ்சி அஞ்சியே சாவார் - இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சிப் பேய்களௌன்பார் - இந்த
மரத்திலென்பார் அந்த குளத்திலென்பார்
துஞ்சுது முகட்டிலென்பார் - மிக
துயர் படுவார்எண்ணி பயப்படுவார்”

என்று மீண்டுமொரு பாரதி நம்மிடையே வந்து நினைவுபடுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுவோம் என்பதை உளமாற உணர்ந்துகொள்வோம். ■

# வாய்ப்புகளே ஒரு படைப் பாளியை உருவாக்குகிறது

## - கவிதைச்சிகரம் அ. முத்துவிஜயன்



## நேர்காணல்

பொன்மணிதாசன்



வணக்கம்

தாங்கள் பன்முகவித்தகர். கவிஞர் எழுத்தாளர். பேச்சாளர். பாடகர். நடிகர். இத்தனையும் சிறப்பாக செய்து வருகிறீர்கள் பிரமிக்கும் வண்ணம் இது எப்படி சாத்தியம்?

எதைச்செய்தாலும் அதில் ஒரு அர்ப் பணிப்பு உணர்வுடன் செய்தலும் கற்றுக் கொள்ளும் ஆர்வமும் அதற்கான தயாரிப்பும் இருப்பதாலே சாத்தியம் ஆகிறது...

வாய்ப்புகள்தான் ஒரு படைப் பாளியை உருவாக்குகிறது. அந்தவகையில் எனக்கு வாய்ப்பளித்த நிலாமுற்றம், கவியுலகப் பூஞ்சோலை, சந்திரோதயம், அமுதசுரபி, தென்சென்னைத் தமிழ்சங்கம் தஞ்சைத் தமிழ்சங்கம், பொற்கைப் பாண்டியனின் சங்கப்பலகை, படைப்பு, செந்தமிழ்ச்சாரல், தமிழ்ப்பட்டறை, சங்கத்தமிழ்பூங்கா ஸ்ரீகாந்தராஜாவின் நிகழ் மீடியா போன்ற குழுமங்களுக்கும் தமிழ்நெஞ்சம் இதழுக்கும் நன்றிகள் பல.

தாங்கள் எழுதத்துவங்கிய முதல் பொழுதும் எழுத்தும் நினைவில் நிலவுகிறதா? அப்படியெனில் அதைப்பற்றி கொஞ்சம் தமிழ்நெஞ்சம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்களேன்.

நான் முதலில் எழுத்தொடங்கியது நாடகங்கள் தான். அதன்பின் தான் கவிதை சிறுகதை குறும்படம் ஓவியம் எல்லாம். ஆனால் முதல் முதலில் நான் எழுதி இயக்கி நடித்த நாடகம் தோல்வியில் முடிந்தது. அதன் பின் கடின உழைப்பால் தேசிய அளவில் விருது பெறும் அளவுக்கு படைக்க முடிந்ததற்குக்காரணம் அந்த முதல் தோல்வியே... அதில் கற்றுக்கொண்ட பாடம் என்னை புடம்போட்டது

இன்றும் நண்பர்கள் அதைச் சொல்லி கேலி செய்வார்கள். இன்று குறும்படத்துக்காக மாநிலவிருதும் தேசிய அளவில் விருதும் நாடகத்திற்காக தேசிய அளவில் விருதும் வாங்கியதற்குக்காரணம் முதலில் பெற்ற தோல்வியே....

கவிச்சிகரம் அந்த பட்டத்திற்கே உரிய உயரத்தில் உலாவரும் தாங்கள் இதுவரை படைத்த படைப்புகளில் தங்களையே பிரமிக்க வைத்த படைப்பு எது?

என்னுடைய ஒரு சிறுகதை கீரக்காரம்மா. அதை நான் முகநூலில் எழுதி வெளியிட்ட 30 நிமிடத்தில் அதை ஒருவர் யூத்டியூபில் வெளியிட்டார் தன் குரலில். என் பெயர் சொல்லாமலே... அதற்கு பார்வையாளர்கள் லட்சத்துக்குமேல். ஆனால் பலர் அந்தப்பதிவில் வந்து இது என்னுடைய சிறுகதை என்று பதிவிட்டார்கள் கண்டனமும் தெரிவித்தார்கள். பெயர் சொல்லாமைக்கு. பின் அவர் பணிந்து பெயருடன் வெளியிட்டார். அந்தக்கதை வாட்சாப்பில் ஆயிரக்கணக்கானவர்களால் பகிரப்பட்டு பின் எனக்கே வந்தது சிரிப்பைத் தந்தது. இன்னும் பல எனது படைப்புகள் என் பெயரில்லாமல் வாட்சாப்புகளில் உலா வருகின்றன.

தாங்கள் சிறுகதைகள் ஏராளமாக எழுதி வருகிறீர்கள். தொண்ணூறுக்குப் பின் சிறுகதைகளை வாசகர்கள் அவ்வளவாக படிப்பதில்லை என்றொரு கருத்து நிலவுகிறது இது உண்மைதானா? அப்படி இருக்கும் பட்சம் அதற்கான காரணம் என்று எதை சொல்வீர்கள்?



படைப்பு இலக்கியவிழா நூல் வெளியீட்டு தருணம்



தென்சென்னை மக்கள் நல அறக்கட்டளை விழாமேடையில் கவிக்கோ ஆரூர் தமிழ்நாடன் அவர்களோடு கவிச்சிகரம் அமுதன்

ஆம் அப்படி ஒரு காலம் இருந்தது உண்மைதான். ஆனால் முகநூலில் சிறு கதைகள் வந்தபின் நிலைமை மாறி வருகின்றது

சிறுகதைகள் எல்லாம் 6 - 7 பக்கங்களுக்குப் பெரியதாக இருந்ததும் அதைப் படிக்கும் ஆர்வம் குறைந்ததற்கு ஒரு காரணம். இப்போது அதிக பட்சமாக 3 - 4 க்குள் சிறுகதைகள் வந்து பெரிய வரவேற்ப்பைப் பெற்றுள்ளன. இப்பொழுது நூல்களாக வெளிவரும்போதும் வாங்கிப் படிக்கத் தொடங்கியுள்ளனர். முகநூலில் பெரும் வரவேற்பை சிறுகதைகள் பெறுகின்றன. இன்று பலர் சிறுகதைகள் எழுதத்தொடங்கியுள்ளனர்.

ஒரு சிறுகதைக்கான கரு எங்கும் கிடைக்கலாம். அப்படி கிடைக்கும் பட்சம் ஒரு ஆரம்ப எழுத்தாளன். சம்பவத்தை வைத்தோ. காட்சியை வைத்தோ கருவை உருவாக்க எளிய வழி என்று ஏதும் உள்ளதா?

எதைக்கதையாக்கலாம் என்பதை அனுபவத்தின் அடிப்படையில் தான் கற்றுக்கொள்ள இயலும். மற்றவர்களின் கதைகளைப் படித்து அவர்கள் எப்படிக் கையாளுகின்றார்கள் என்று தெரிந்துக் கொள்வதும் தன் சுற்றுப்புறத்தை உற்று நோக்கலும் ஒரு எழுத்தாளன் சிறந்த எழுத்தாளன் ஆவதற்கான வழி

பன்முகவித்தகராகிய நீங்கள். எதில் வெற்றியின் இலக்கை நிர்ணயித்து பயணிக் கிறீர்கள்?

வெற்றிதோல்விகளுக்கு அப்பால் படைத்தல் மற்றும் இன்றைய நிகழ்வை ஆவணப்படுத்தல் என்ற என் இலக்கைத் தான் நோக்கிப் பயணிக்கிறேன். அது வெற்றி தோல்வி என்பது காலத்தின் கைகளில்தான் உள்ளது. காலங்களைத் தாண்டி நிலைப்பதில்தான் ஒரு படைப்பு வெற்றி அடைகின்றது. நம் கடமை பயணித்தலே...

மேடையில் கம்பீரமான குரலோடு உலாவருவதைக் கண்டு நான் பலமுறை வியந்துள்ளேன். அது எல்லோருக்கும் சாத்தியமில்லை. தங்களுக்கு அந்த பாக்யம் எப்படி?

குரல் என்பது இயற்கை கொடுத்த வரம். ஆனால் அதைப் பயன்படுத்துவது பயிற்சியில் உள்ளது ஏற்ற இறக்கங்கள் மொழி உச்சரிப்பு நகைச்சுவை உணர்வு போன்றவை நம் பயிற்சியினால் வருபவை... அது எனக்குக்கிடைத்த நல்வரமாகவே கருதுகிறேன்

முகநூலில் உலாவரும் பல்லாயிரக் கணக்கான படைப்பாளிகளில் தாங்களும் ஒருவர். முகநூல் மக்கள் வாழ்வை மேம் படுத்துகிறதா? சீரழிக்கிறதா? ஒரு நடுவரின் தீர்ப்புநிலையில் தங்களின் கருத்து என்ன?

எல்லா அறிவியல் கண்டுப்பிடிப்பு களும் நல்லவர் கரங்களில் கிடைக்கும் போது சமுதாயத்தை மேம்படுத்துகிறது. வீணர்களின் கரங்களில் கிடைக்கும்போது சீரழிக்கின்றது. இன்று முகநூல் இல்லை என்றால் என்னை யார் என்றே தெரிந்



கவியுலகப் பூஞ்சோலை நான்காம் ஆண்டு விழா மேடையில் கவிக்கோ துரை வசந்தராசன் தமிழ்நெஞ்சம் ஆசிரியர் அமின் ஆகியோருடன் கவிச்சிகரம் அமுதன்

தஞ்சைத் தமிழ்மன்ற இரண்டாமாண்டு விழா மேடையில்



கவிப்பேரரசு வைரமுத்துவோடு கவிச்சிகரம்






மேடைவிருது விழாவில் கவிச்சிகரம் அமுதன் விருதுபெற்ற தருணம்

திருக்காது பலருக்கு. பல கவிஞர்கள் முகநூலினால் வளர்ந்தவர்களே... இன்று பலபடைப்பாளிகளை உலக அளவில் அறியச்செய்வது முகநூலே

இலக்கியம் மக்களுக்கானது அதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனாலும் இது தேவையில்லை என்று எதையாவது சொல்வீர்களா?

அதில் எந்த சந்தேகமும் இல்லை. இலக்கியம் என்றும் மக்களுக்கானதே. இது சிறந்த படைப்பு இது குப்பை என்று முடிவு செய்ய யாருக்கும் உரிமை இல்லை. அதைக் காலம் பார்த்துக்கொள்ளும்

குழுமங்கள் தரும் விருதுகளைப் பற்றிய தங்கள் அபிப்ராயம்?

அறிமுக நிலையில் உள்ள கவிஞர் களுக்கு குழுமங்கள் தரும் விருதுகள் ஊக்கத் தைத்தரும். பாராட்டுக்காகத்தானே பலர் ஏங்கிக் கிடக்கின்றனர். அதன் பின் அவர்கள் ஆர்வமுடன் எழுதத் தொடங்கு வார்கள். வளர்ச்சி பெறுவார்கள். எனவே குழுமங்கள் தரும் விருதுகள் தேவை தான்

தாங்கள் இதுவரை வெளியிட்ட நூல்களின் பட்டியல்?

வெளியிடப்பட்ட நூல்கள்.

1. கீரக்காரம்மா
2. கருப்பு
3. செல்லாயி
4. குட்டச்சி
5. பச்சசேலை
6. பொன்னுத்தாயி
7. அப்பத்தாவும் ஆன் ட்ராயிடு போனும்.

இவற்றில் பெரும்பான்மை படித்து ரசிப்புக்கும் பாராட்டுக்கும் உள்ளான நூல் எது?

எல்லா நூல்களுமே பாராட்டப் படுகின்றன

புத்தக வெளியீட்டு மூலம் தாங்கள்

சந்தித்தது மகிழ்வா அல்லது ...?

புத்தகவெளியீட்டின் மூலம் மனதிற்கு மகிழ்வு படைப்பாளியாய். தான் பெற்ற குழநதையைக் காணும் மகிழ்வு

நூல் வெளியிடுபவர்களுக்கு தாங்கள் கூறும் அறிவுறுத்தல் யாது?

நூல் வெளியீட்டாளர்களுக்கு நல்ல பதிப்பகம் பார்த்துவெளியிடுங்கள். எடுத்த எடுப்பில் லாபம் வரும் என்று எதிர்பார்க்காதீர்கள். நல்ல விமர்ச்சகளிடம் கொடுத்து விமர்சனத்தைப் பதிவிடுங்கள்.

தமிழ்நெஞ்சம் இதழ்பற்றிய தங்கள் கண்ணோட்டம்?

ஒவ்வொரு படைப்பாளிக்கும் தமிழ் நெஞ்சம் ஒரு வரப்பிரசாதம். நல்ல தரமான படைப்புகளை உலக அளவில் எடுத்துசெல்லும் ஓர் அரிய ஊடகம் தமிழ்நெஞ்சம். குழுமங்கள் அளவில் எழுதிக்கொண்டிருந்த பலரின் படைப்புகளை உலகத்தில் தமிழும் தமிழரும் இருக்குமிடமெல்லாம் கொண்டுசேர்க்கும் தமிழ்நெஞ்சத்தின் பணி மகத்தானது. அது மட்டுமல்ல பல விருதுகளையும் வழங்கி படைப்பாளிகளுக்குப் பெருமை சேர்க்கிறது. பலருடைய படைப்புகளை ஆவணப்படுத்தி இருக்கின்றது. முகநூலில் வரும் படைப்புகள் ஒருவிதத்தில் மின்னல் போன்று பளிச்சிட்டாலும் ஆவணமாகாது. அதுவே தமிழ்நெஞ்சம் போன்ற இதழ்களில் வரும்போது சிறந்த ஆவணமாக்கப்படுகின்றது. அதற்காகப் படைப்பாளிகள் அனைவரும் நன்றி செலுத்த வேண்டும். ■



பொன்மணிதாசனுடன் கவிச்சிகரம்





# கருப்பசாமி வெண்பா!

என்னா கருப்பசாமி?
எம்மேல் வெறுப்புசாமி?
சொன்னா திருத்திப்பேன்
தோள்கொடுநீ; - உன்னைக்
குடிசாமி யாய்க்கொண்டேன்;
கும்பிட்டு நின்டேன்;
விடியலைக் காட்டு
விரைந்து! (1)

ஆடுவெட்ட ஆகவில்லே;
கோழிவெட்டக் கூடவில்லே;
மாடுவெட்டக் கையில்
Moneyயில்லே; - பாடுபட்டு
ஒத்தளவு மிச்சை
உனக்காக வாங்கியாந்தேன்
கெத்தா(ய்);என் வேண்டுதலைக்
கேள்! (2)

வம்பாக ஏசவல்லே;
வக்கணையாப் பேசவல்லே;
அம்பானி ஆகணுன்ற
ஆசையில்லே; - தெம்பாநான்
நாலு சனத்துக்கு
நல்லது போய்ச்செய்ய
ஏலும் வகையிலெனை
ஏத்து! (3)

நான்ரொம்ப நல்லவன்;
நாநயம் உள்ளவன்;
மாண்பு மிகுந்தநல்ல
மாணவன்; - சாண்புள்ளை
ஆனாலும் ஆண்புள்ளை;
ஆக்காதே வீண்புள்ளை;
நானாள வேண்டியதை
நல்கு! (4)

ஆசெல்லாம் வேணாம்
அறிவைத்தா; கைநெறையக்
காசெல்லாம் வேணாம்
கனிவைத்தா; - நான்செல்லாக்
காசாகும் முன்னாலே
கௌரவம்தா; பக்தர்க்குத்
தாசா!நான் கேட்டதைத்
தா! (5)

நாசாவில் வேலையா
நாங்கேட்டேன்? ஸ்ரீபத்ம
சேஷாத்ரி ஸ்கூலிலா
ஷேர்கேட்டேன்? - ராசாவா
ஊராள வையின்னா
ஊளையிட்டேன்? ஸ்பீச்தமிழ்ச்
சீராள வையதே
சேஃப்! (6)


மாலையிலே சாப்பிட
மட்டனா நான்கேட்டேன்?
காலையிலே சாப்பிட
கஞ்சிகொடு; - வேலயிலே
கில்லிநான் ஆனாலும்
Cashவந்து சேரலியே;
பில்லிசூன்யம் வச்சதாரப்
பே? (7)

வானமே கூரையா
மண்ணுலகு உன்வீடா
ஆனவன்நீ; என்னாலே
ஆகுமா? - நானுமே
தங்கஒரு மாளிகை
தாஇன்னா நாங்கேட்டேன்?
தங்க(க்) குடிசையொன்னு
தா! (8)

கண்ணுலே காமமெனும்
காய்வேணாம்; வெட்டுண்ட
புண்ணுலே அன்புமலர்
பூக்கட்டும்; - பண்புலே
உச்சத்தில் என்னைவை;
ஊரவையில் முன்னேவை;
வச்சாநீ வாகைசூட
வை! (9)

அஞ்சிலிட்டர் போதாதே
அம்பது லிட்டரேனும்
கொஞ்சிக் கொடுக்கக்
குருதியத்தா; - கெஞ்சலாய்
ராவெல்லாம் தூங்காமல்
ராகம் படிக்கிறாள்
பாவம் கொசுப்பெண்ணப்
பா! (10)

# அகரம் அமுதன்



சொற்பம் அறிஞ்சதுக்கே
  ‘ஷோ’காட்டும் நெஞ்சிது
முற்றும் அறிஞ்சிருந்தா
  ‘மூவி’காட்டும்; - வெற்றாக
வையதை; உன்பின்
  வரவழை; வீண்விறகு
மெய்யிதை வீணையாய்
  மீட்டு! (11)

அடசாமி! நானொரு
  ஆசாமி; நீயும்
மடசாமி இல்லே;மா
  சாமி; - கிடந்துழலும்
நானுன்சேய் இல்லையா?
  நாதியத்தப் பிள்ளையா?
வானளவு வந்தென்னை
  வாழ்த்து! (12)

குலசாமி! நீயென்
  குருசாமி; நீதான்
‘தல’சாமி; நானுன் தாள்
  சாமி; - பலசாமி
பாத்துட்டேன் நீதான்
  Powerசாமி; உன்கையில்
சேத்துட்டேன் என்னையாக்கு
  ஷேக்! (13)

நன்றி மறவாத
  நெஞ்சம்தா; முன்னேற
இன்றி அமையாத
  எண்ணம்தா; - குன்றின்மேல்
வெள்ளிநிலா ஆக்கென்னை
  விட்டிலாய் ஆக்காதே;
உள்ளிருந்து தாஉள்
  ஒளி! (14)

மேகத்தை என்னோட
  மேனியாக்கு; மற்றவர்
தாகத்தைத் தீர்க்கும்
  தடாகமாக்கு; - ஆகத்தில்
அன்பை வெதைச்சிவிடு;
  ஆசை பொதைச்சிவிடு;
துன்பந் துடைச்சிவிட்டா
  தூள்! (15)

முன்பின் தொழுதறியேன்;
  மூக்கால் அழுதறியேன்;
உன்போல் பகையை
  உழுதறியேன்; - என்னளவில்
வாய்வந்த சொல்லால்
  வழுத்துகிறேன்; நெஞ்சுருகி
ஏய் கருப்பா! ஏதாவ(து)
  ஈ! (16)

என்ன வறுமையிது?
  ஏகா எருமையிது?
என்னை தினம்பாத்(து)
  இளிக்கிறது; - என்போலே
நாலுநாள் தேய்ந்துபார்;
  நல்கூர்ந்து வாழ்ந்துபார்;
ஏலுமா உன்னால்?
  எழு! (17)

ரெட்டைக் குழல் Gun னும்
  Race bike கும் நான்தாரேன்;
கிட்டவா! use பண்ணக்
  கிளாஸ்எடுப்பேன்; - பட்டனைத்
தட்டினா குண்டுவிழும்
  தற்காலப் போர்முறை;
வெட்டருவா வெண்குதுரை
  Waste! (18)

பூச்சாண்டி யாடாநீ?
  பூகம்பக் காடாநீ?
ஏச்சேன்டா வாங்குறநீ
  எங்கிட்டே? - பாச்சல்
புலிவால் கணக்காப்
  பொடலங்கா மீசை
எலிவால் கணக்கா
  எடு! (19)

தூக்கியா கட்டுவே
  தூணாந் தொடைதெரிய?
ஜாக்கிரதை போட்டுக்கோ
  சட்டையை; - பாக்கறவன்
காட்டான்பான் பாத்துக்கோ;
  கள்வன்பான் மாத்திக்கோ;
கூட்டாளி யாச்சொல்றேன்
  கொள்! (20)

# வாழ்க்கையின் பாதை

1. 40 வயசுக்கு அப்புறம், அதிகமா படிச்சிருந்தாலும், குறைவா படிச்சிருந்தாலும் ஒண்ணு தான்...

(குறைவா படிச்சவங்க பெரும்பாலும் முதலாளியா இருப்பாங்க, அதிகமாவும் சம்பாதிப்பாங்க).

2. 50 வயசுக்கு அப்புறம், அழகா இருந்தாலும், அசிங்கமா இருந்தாலும், வெள்ளையா இருந்தாலும், கருப்பா இருந்தாலும் ஒண்ணு தான்.

(எவ்வளவு அழகா இருந்தாலும், இந்த வயசில், முகத்தில் சுருக்கங்கள், கரும் புள்ளிகள் வந்துரும்).

3. 60 வயசுக்கு அப்புறம், மேலதிகாரி, கீழதிகாரி எல்லாரும் ஒண்ணு தான்.

(ரிட்டயர் ஆனப்புறம், எல்லார் நிலையும் ஒண்ணு தான்).

4. 70 வயசுக்கு அப்புறம், பெரிய வீடோ, குட்டி வீடோ எல்லாம் ஒண்ணு தான்

(மூட்டு வலி, தள்ளாமை, நடக்க முடியா நிலை எல்லாமே வந்துரும். கொஞ்ச இடத்தில் மட்டுமே புழங்க முடியும்).

5. 80 வயசுக்கு அப்புறம், பணம் இருந்தாலும் பணம் இல்லன்னாலும் எல்லாமே ஒண்ணு தான்.

(அதிகமா செலவழிக்க முடியாது, தேவைகளும் குறைஞ்சிரும், ஆசைகளும் குறைஞ்சிருக்கும்).

6. 90 வயசுக்கு அப்புறம், ஆணோ, பெண்ணோ எல்லாரும் ஒண்ணு தான்

(ஆணுக்கு உரிய தன்மைகளும், பெண்ணுக்கு உரிய தன்மைகளும்.. எல்லாமே மங்கி போயிருக்கும்).

7. 100 வயசுக்கு அப்புறம், படுத்து இருந்தாலும், நடந்துட்டு இருந்தாலும் எல்லாம் ஒண்ணு தான்.

(நடக்க முடிஞ்சா கூட, செய்யுறதுக்கு எந்த வேலையுமே இருக்காது).

அதனால வாழ்க்கையை ஈசியா எடுத்துக்குவோம்..
என்ன இருக்கோ, அதுக்காக சந்தோஷப்பட கத்துக்குவோம், இல்லாதத நினைச்சு வருத்தப்படுறத விட்டு விடுவோம்.

மனித வாழ்வில் நாற்பது வயதுக்குள் நாம் என்ன மாதிரியான வாழ்க்கையை வாழப்போகிறோம் என்பது முடிவு செய்யப்பட்டு விடுகிறது... ■

- **ஷேக்,** ஒஸ்னி

**சில்லறை காசில்**
**சிதறிக் கிடக்கிறது**
**வீதி ஓவியனின்**
**தூரிகைத் தடங்கள்**

**நெல்லை க. சோமசுந்தரி**

## உள்ளத்தை உருக்கும் காதல்

கண்கள் பேசிடும்
காதல் மொழிகள் !

கண்டு பருகினேன்
காயம் உருகினேன் !

இதயத்தில் புகுந்தே
இனிமை தந்தது!

மதமும் கொண்டது
மனமும் இங்கே!

சிந்தையில் நீயும்
சித்திரமாய்!

வந்து அமர்ந்தாயே
வானவில்லின் வண்ணமாய்!

**ஜனனிகுமார்**

---

# சக்தி

தத்தி தவழும் குழந்தையாய்
எழுத்தை ரசித்து
குதித்து மகிழும் சிறுமியாய்
வார்த்தை அரங்கேற்றி
நாணி கோணும் மங்கையென
அச்சிடும் தாளை நுகர்ந்து
வளர்ந்த குமரியாய்
கவிதை படைத்து
புதுக்கவிதையாய்
புதுமை கண்ட
சக்தி அவள்....

**புவனாபாபு**
நாகை

# தித்தோம் தித்தோம் தமிழ்மங்கை!

************************************
கவித்திலகம்
வெற்றிப்பேரொளி,
திருக்குவளை.

************************************

தித்தோம் தித்தோம் தமிழ்மங்கை
திசைகளில் பாயும் தமிழ்க்கங்கை!
தித்தோம் தகத்தோம் மலர்ச்செங்கை
தாவி யாடுக புகழ்நங்கை!

மயிலும் மானும் அசைவுகளில்
மடவார் அன்னம் அடவுகளில்!
ஒயிலும் பயிலும் உன்விழியில்
ஒளிரும் அணிமணி உன்னெழிலில்!

அழகுத் தேரின் ஊர்வலம்நீ
ஆகா யத்தின் கார்மழைநீ!
பழகும் தமிழின் பண்ணிசை நீ
பாவை யாடிடும் தொல்லிசைநீ!

வானில் மின்னும் தோரணமே
வடிவில் சிறந்த ஆரணங்கே!
காணில் மகிழ்வர் உன்நடமே
காலம் வெல்லும் உன்தடமே!

வாழி தோழி நீவாழி
வாழ்த்திப் பெய்யும் பூமாரி!
வாழி தோழி நீவாழி
வளர்க்கும் புகழில் பேராழி! - நீபேராழி!

# நூல் மதிப்புரை

நூலாசிரியர் : ஐ.துஷ்யந்தன்
வகை : ஹைக்கூ
பக்கங்கள் : 116
விலை : 350 ரூபாய் இலங்கை
நூல் பதிப்பாளர் : தேடல்

தொடர்புகளுக்கு : 0772141527




சின்னஞ்சிறு வயதில் மழைத் தூறல்களில் நனைவதென்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். அம்மா திட்டுவார்கள். தலைதுடைத்து ஆதரவும் தருவார்கள். இன்று ஹைக்கூ தூறல்களில் நனைய விட்டிருக்கிறார் ஈழத்தமிழ் நண்பர் கவிஞர் ஐயம்பிள்ளை துஷ்யந்தன்.

முகநூல் குழுமங்கள் மூலம் கவிதை எழுத முனைந்த நண்பர் இன்று, சஞ்சிகை களிலும் எழுதித் தன்னை கவிஞரென அடையாளப்படுத்தி வருகிறார். அவரது ஆற்றலை தமிழ்நெஞ்சம் இதழும் ஆதரித்து தளமமைத்துத் தந்திருக்கிறது.

தன்னால் முகநூல் குழுமங்களில் எழுதி சான்று பெற்ற முத்திரைக் கவிதை களைத் தொகுத்து ஹைக்கூ தூறல்கள் எனப் பெயரிட்டு தனது முதல் குழந்தையை தமிழுலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளார். முதல் நூலென்றாலும் பெருங்கவிஞர்கள் போலநூலின்முகப்பில்சிறகுத்தூரிகையால் எழுத முற்பட்டிருக்கிறார் ஆயிரம் சிந்தனை களுடன். சிறப்பாக அமைந்திருக்கிறது அட்டைப் படம்.

காதல் கவிதைகள மட்டுமே எழுதிக் கொண்டிருந்த கவிஞருக்கு ஹைக்கூவும் வளம் சேர்க்கிறது. எண்ணுகின்ற யாவும் இயல்பாய், எண்ணியபடியே கவிதை யாகிக் காட்சித் தருகிறது. இதுவே கவிஞரை பலப்படுத்துகிறது, வளப்படுத்து கிறது.

ஆயிரந்தான் சான்றிதழ்களும், விருதுகளும் பெற்றிருந்தாலும், இந்த முதல் நூல் தருவதிலேயே அவர் அதிகமாக மகிழ்ந்திருக்கக்கூடும். காரணம் தமிழ் இலக்கிய உலகில் தன்பெயர்ச்சொல்லத் தடம் பதித்திருக்கிறார்.

கவிஞரின் பொறுப்புணர்வை போற்றாமலிருக்க முடியாது.

விழுதுகள் கிளை பரப்பும் உயிர் நிலையைக் காண நீங்களில்லையே என கண்களில் நீர்க்கசிய இந்நூலை தனது தந்தைக்குச் சமர்ப்பித்திருக்கிறார். என்னிலும் இப்படியான இயல்புநிலையை அனுபவித் திருக்கிறேன்.

தேடி எழுதிய கவிதைகளை தேடல் கலை இலக்கிய அமைப்பு வெளி யிட்டிருப்பது சிறப்பு. இப்படியானவர் களை வளர்க்க இன்னும் நிறைய செய்யவேண்டுமென வாழ்த்துகிறேன்

ஹைக்கூ வெனும் பெரும் ஊற்றை, உணர வைத்த நட்புகளுக்கு நன்றி சொல்ல மறக்கவில்லை.

மேலும் ஊக்கப்படுத்தி, செதுக்கியும், சிறப்பித்து வாழ்த்தியும்வரும் தோழமைகளயும் மறக்கவில்லை. இந்த உயர்ந்த பண்பாட்டை மதிக்கிறேன். நானும் வாழ்த்துகிறேன்.

ஈழத்து தமிழர்களின் தமிழ் உணர்வுக்கு ஈடு இணை ஏதுமில்லை. அவர்களின் தமிழ்மீதான காதலைப் போற்றாமல் இருந்துவிட முடியாது. ஈழ மண்ணின் சிறப்பை நான் அதிகமாகவே அறிந்திருக்கிறேன். அவர்களில் நான் அதீத அன்பையும் சொரிபவனாக அதிக நட்புகளைப் பெற்றிருக்கிறேன்.

ஈழத் தமிழிதழில் பணியாற்றிய அனுபவமும், அந்த மண்ணில் வாழ்ந்தக் காலங்களையும் என்னால் மறந்திட முடியாது.

கவிஞரும் தான்கண்ட காட்சி, தனது சூழல் நிலையை படம்பிடித்துக் காட்டுகிறார். ஆழப்பதிந்த நினைவுகளைச் சிந்தனையில் உருவான உத்திகளுடன் வாழ்வியல் கருத்துகளை ஏராளமாகக் காட்சிப்படுத்தியிருக்கிறார்.

***சுவரொட்டிப் படம்***
***தெரியாதபடி இருக்கிறது***
***முகத்தில் சாணம்***

பொறுப்பற்றத்தன்மையில் வாழும் மனிதர்களின் முகத்தில் சாணத்தை அள்ளி வீசுகிறார்.

***அழுகின்ற குழந்தை***
***அழகாய் இருக்கிறது***
***........... ......***

உண்மைதானே... அந்த அளவுக்கு ஓவியரின் கைவண்ணத்தில் வரைந்த ***ஓவியம் அழகாய்*** இருக்கிறது. சிறப்பு தானே...

***குளத்து நீர்***
***குறைந்து வருகிறது***
***கூடிவரும் பக்தர்கள்***

***நீரருந்தும் குருவி***
***நிலைமாறித் தெரிகிறது***
***மதுக் கண்கள்***

***நிறம் மாறும் பச்சோந்தி***
***நிலைமாறி நிற்கிறது***
***மனித குணம்***

***வெட்டிய மரம்***
***வெறுமையாய நிற்கிறது***
***கூடிழந்த குருவி***

இப்படி கொட்டும் மழையாய் தூறல்கள் மூலம் நம்மை ஈர்க்கும் கவிஞர் ஐ.துஷ்யந்தன் இன்னும் பல நூல்களைத் தமிழுலகிற்குத்தந்து சிகரம்தொட வாழ்த்துகிறேன்.

தமிழ்நெஞ்சம் அமின்



# பாட்டி இட்லிக்கடை




பாட்டி இட்லிக்கடைன்னா சுத்துப் பட்டு கிராமங்களில் எல்லாம் பேமஸ். தும்பைப்பூ கலரில் இலவம் பஞ்சுமாதரி ஸ்டார் ஓட்டலில்கூட இந்த மாதரி இட்லி கிடைக்காதுன்னு ஊரே பேசும். இத்தனைக்கும் இரண்டுவகை சட்னியோடு ஒரு சாம்பாரும் உளுந்தில் செய்த இட்லி பொடியும் சேர்த்தே ஒரு இட்லி இரண்டு ரூபாய்தான் அதனால் கூட்டம் அலைமோதும் காலையில் அஞ்சு மணிக்கு அடுப்பு பத்தவைத்து பத்துமணிக்கே கடையை சாத்திவிடும் பாட்டி... பாவம் பாட்டி உதவிக்கூட யாரையும் வைத்துக் கொள்ளவில்லை அதையும் பாட்டி விரும்பவில்லை எல்லாமே தன் கைப் பக்குவத்தில் இருக்க வேண்டும் என்ற பிடிவாதம்,

நேத்து காலையில பாட்டி கடை திறக்கும் முன்பே பக்கத்து கிராமத்திலிருந்து நாட்டாமை வந்தார்

“என்ன பாட்டியம்மா சௌக்கியமா”

“ம்... இருக்கேப்பா என்ன இவ்வளு வெள்ளனம்மா வந்திருக்கே தம்பி”

“அது ஒன்னுமில்ல பாட்டி நம்ம நாகூரான் இல்ல அவன் பொண்டாட்டி இறந்துப்போச்சு அதான் ஒரு நூறு இட்லி வேணும் வாங்கிட்டு போகலாமுன்னு வந்தேன்”

“அடடா அந்த லட்சுமியா அவ நல்ல பொண்ணாச்சே... ஏன் என்ன பன்னிச்சி இரண்டு புள்ளங்கள அனாதையா விட்டுட்டு போய்டாளே சண்டாளி”

“என்ன பாட்டி செய்றது இரண்டு வாரமா ஒரே காய்ச்சல் சளி இருமல் அவனும் ஆஸ்பத்திரிக்கெல்லாம் கூட்டிட்டு அலைந்தான் கடைசில இப்படி ஆச்சு நம்ம கையில் என்ன இருக்கு பாட்டி நீங்க ஆக வேண்டியதை பாருங்க இந்த பாத்திரத்துல ஒரு நூறு இட்லியை பார்சல் பன்னுங்க எனக்கு நிறைய ஜோலி இருக்கு”

“இட்லி இல்லப்பா நானே நூறு நூத்தம்பத்து இட்லிதான் போடுவேன் உன்னக்கட்ட கொடுத்துட்டு வியாபாரத்துக்கு என்ன செய்வது தம்பி”

“அடா இதுவும் வியாபாரம்தானே பாட்டி பணம் உடனே தரேன் கடன் வாங்குவேன்னு பயப்படாதே”

“அதுக்கு இல்லப்பா உன்னக்கட்ட மொத்தமா கொடுத்திட்ட தெனமும் வந்து வாங்குறவங்க வந்து ஏமாந்து போய்டுவாங்க... இந்த ஊரில வேற கடையும் இல்ல. உனக்கே தெரியும்ல எனக்கு தெனைக்கும் வர்றவங்கதான் முக்கியம் நீ வண்டியை எடுத்துக்கிட்டு டவுனுல போய் வாங்கிட்டு வந்திடப்பா கோச்சிக்காதப்பா”

நாட்டாமை பாட்டியை முறைத்துப் பார்த்தார்.

பாட்டிச்சொன்னது “என்னைப் பார்த்து என்ன செய்யப்போறப்பா நான் சொல்றது தவறா? நீயும் நாட்டாமைதானே யோசித்துபாரு”

நாட்டாமை டவுனுக்கு விரைந்தார் இட்லி வாங்க... பாட்டியின் நேர்மையை உணர்ந்தவராக...! ■



## இயற்கையின் ஆளுகை

இயற்கையின் வனப்பு
இனிமையின் நிறைப்பு!
கண்களில் நிறைந்திடும்
காட்சியின் செழிப்பு!

அருவியோ டோடியே
அகமகிழ் தாடிடும்!
ஆற்றோர நாணலாய்
குனிந்துமுகம் பார்த்திடும்!

கிளைதாவும் அணில்களும்
மயலில் மயங்கிடும்!
கீச்சொலி ராகங்கள்
கானகத்தை நிறைத்திடும்!

ரீங்கார வண்டுகள்
பூவழகில் கிறங்கிடும்!
மதுரக் களிப்புடன்
மகரந்தம் சேர்த்திடும்!

குரங்கினத் தாவலில்
கிளைகள் அதிர்ந்திடும்!
அதிராத் தாவலில்
முயல்கள் கொஞ்சிடும்!

இயற்கை யாவிலும்
இனிமையின் ஆளுகை!
ரசித்து வாழ்வதில்
மகிழ்ச்சியின் நீளுகை!

**- வானதி சந்திரசேகரன்**



## சர்க்கரை நிலவு

வானம் இனிக்கச்
சர்க்கரை நிலவு
என்னை கொஞ்சம் பார்த்தது
இல்லை இல்லை
அதிகமாகவே பார்த்தது

என்னுள் கரைந்து
தன்னுடன் சேர்த்தது

நிலவு டன் கை கோத்து
காதல் சொல்லி
தினம் தினம் பாடல் பாட

தூரத்தில் இருந்தே
துடிப்பாக துள்ளி வந்து
துடிதுடிக்கச் செய்கிறது

காற்றுக்கும் கால்கடுக்க
கடுப்பேற்றுகிறது
வேண்டாம் என்றே நினைக்கிறேன்
விட்டு விடு என்னை
கெஞ்சுகிறேன்

ஓர் ஓரமாக கொஞ்சம்
இளைப்பாறி கொள்கிறேன்
விட்டு விடு என்னை

விட்டுவிடு என்னை
என்று கூறியும்
தொட்டுவிட வருகிறது
விடாத கருப்பாய்

கட்டுப்படுமா ....
விட்டுவிடுமா....

**- தென்றல் கவி**

# ஒரு சாண்ட்விட்ச் கதை

கும்பகோணம்
நெளஷாத் கான் .லி

ரவி சின்ன வயசுலே இருந்தே ரொம்ப கெட்டிக்காரன். ஜன்னல் கதவு பக்கம் மட்டுமின்றி வாசல் கதவு வழியாகவும் வறுமை அவன் வீட்டில் குடிகொண்டிருந்த போதும் அவன் படிப்பை மட்டும் கைவிடவில்லை. அம்மா ராசாத்தி திறமை கெட்ட புருஷனை நம்பி இல்லாம தெரிஞ்ச தையல் தொழிலை வச்சு தெரிஞ்ச நாலு வீட்டுக்கு துணி தச்சு கொடுத்து அவ பொண்ணு - பசங்க வாழ்க்கைக்கு உறுதுணையா இருந்தா... ராசாத்தி புருஷன் மாக்கான் சரியான குடிகாரன், வேலைக்கு போக மாட்டான். பொறுத்து, பொறுத்து பாத்தவ புள்ளைங்க பெரிதாய் ஆன போதும் அவன் குணத்தை மாற்றி கொள்ளாததால் புருஷனை அடித்து வீட்டை விட்டே துரத்தி விட்டாள்..

வாழ்க்கையில் பல கஷ்டம் வந்த போதும் தன் பெரிய மகள் பானுவையும், சின்ன மகன் ரவியையும் கண்ணும் - கருத்துமாக பார்த்து கொண்டது மட்டு மின்றி தன் இயலாத நிலையிலும் படிக்க வைத்தாள்.

பெரியவ பானு தம்பி ரவி படிக்க ணும்னு பன்னிரண்டாவதோட படிப்பை நிறுத்திகிட்டா, தன் அம்மா ராசாத்திக்கு உடம்புக்கு முடியாம போனதால் அம்மா பார்த்த தையல் தொழிலை அவள் பார்த்தாள்.. தன் அம்மாவுக்கும் - அக்காவுக்கும் ரொம்ப தொல்லை கொடுக்க கூடாது என்பதற்காக பள்ளி படிப்பு நேரம் போக மீதி நேரம் உள்ளூர் டீ கடையில் வேலை பார்த்தான் ரவி.

எப்படியோ நல்ல படியாக பள்ளி படிப்பை முடித்த ரவி காலேஜ் சென்றான். காலேஜ் அரை நாள் என்பதால் படிப்பு நேரம் போக காசுக்காக வேண்டி வெல்டிங் பட்டறையிலும் வேலை பார்த்தான்.

அவன் இறுதியாண்டு படிப்பை முடிக்கும் தருவாயில் அவனது அம்மா ராசாத்தி உடல் நலக்குறைவால் இறந்து போனாள்.. அவளது இழப்பு ரவிக்கும் - பானுவுக்கும் பேரிடியாக இருந்தது.

தன் அக்காவுக்காக அவனும், தன் தம்பிக்காக அவளும் தங்கள் சோகங்களை அவரவர்க்குள் புதைத்து கொண்டு வெளியே புன்னகையுடன் வாழ்ந்தனர்...

ஒரு வழியாக ரவி கல்லூரி படிப்பை முடித்த கையோடு, நண்பன் ஒருவன் செய்த உதவியால் பிடிக்காத வெளிநாட்டுக்கு தன் அக்காவின் திருமணத்திற்கு பணம் சேர்க்க வேண்டி வேண்டா வெறுப்பாக சென்றான் ..

அந்த நாட்டில் அடுக்கு மாடி குடியிருப்புகள் நிறைய நிறைந்திருந்த போதும் அவனது ஓலை குடிசைக்கு கால் அளவு கூட ஈடு ஆக வில்லை

ஊரில் கஞ்சி குடித்த போது கிடைத்த திருப்தி அந்த காஞ்சு போன குபூஸ் / தந்தூரி ரொட்டி திண்ண போது ஏனோ கிடைக்க வில்லை. பசி மனிதனை என்ன வேண்டுமென்றாலும் திண்ண வைக்கும். இங்கே நிறைய பேர் காலை சாப்பாடே



அரைகுறையாய் கால்வயிறு சாப்பாட்டை சாப்பிட்டு முட்டாள்தனமாய் காசு சேமிக்க ஆரம்பித்தான்.

சாப்பிடுவதில்லை மீறி பசிக்காக, கடினமான வேலையை சமாளிப்பதற்காக காலை உணவை கட்டாயம் உண்டால் மட்டும் தான் வேலை செய்ய முடியும் என்ற கட்டாயத்தால் வேறு வழியின்றி தன் வறுமையின் காரணமாக, குடும்ப சூழ்நிலை கருதி வெறும் ரொட்டியையும் ஒரு டீயையும் குடித்து கொண்டு வாழும் இந்திய தொழிலாளர்கள் இங்கு ஏராளம்.

அடிப்படை வசதிகள் கூட இல்லா மல் தவிக்கும் தொழிலாளர்களுக்கு மத்தியில் ஏதோ ஒரு டிகிரி படித்ததால் கிடைத்த வேலையை உடும்பு பிடியாய் பிடித்து கொண்டிருப்பதால் தன் குடும்பத் துக்கு ஏதோ நிறைவாய் பணம் அனுப்ப முடிகிறது என்று நினைத்ததோடு மட்டு மின்றி இந்த வாய்ப்பை ஏற்படுத்தி கொண்ட அந்த ஆண்டவனுக்கும் நன்றி தெரிவித்தான்.

தன் அக்காவின் திருமணத்தை சிறப்பாய் செய்ய வேண்டி கஞ்சத்தனமாய்

ரவியின் அறையில் வசிக்கும் நண்பன் கேரளாவை சேர்ந்த முனீர், டே அண்ணா மாசத்துக்கு ஒரு முறையாவது என்ஜாய் பண்ணுடா

உங்க தமிழன் மார் எல்லோருமே இப்படி தான், குடும்பம் குடும்பம்னு ரொம்ப கஞ்சத்தனமா இருப்பீங்க அப்புறம் கஷ்டப்பட்டு சேர்த்து முழு சம்பள பணத்தையும் ஊருக்கு அனுப்பிடுவீங்க ,வாயை கட்டி, வயித்தை கட்டி நீங்க அனுப்புற காசை வீட்ல உள்ளவங்க உங்க உழைப்பை புரிஞ்சுக்காம பணத்தை வீணா தண்ணியா செலவு பண்ணுவாங்க. நீ ஒரு நாளைக்குகூடஆபிஸ்க்குபஸ்ஸோ,காரோ பிடிச்சு வராம கால் நடையா அஞ்சு கிலோ மீட்டர் நடக்குற ஆனா ஒரு வேளை உங்க வீட்ல தொட்டதுக்கெல்லாம் ஆட்டோவுல கூட போகலாம்.

டே முனீர் மத்த குடும்பம் எப்படின்னு தெரியலை ஆனா எங்க அக்கா அப்படி இல்லை, நான் அனுப்புற

பணத்தை பத்திரமா சேமிப்பா டா...

சரி... சரி ... உங்க அக்கா நீ அனுப்புற பணத்தை சேமிப்பாங்க, இருந்தாலும் இப்படி பிராந்து கணக்கா வேலை, பணமுன்னு ஓடாம லீவு நாளுல கொஞ்சம் என்ஜாய் பண்ணு அண்ணா, பிடிச்சதை சாப்பிடு இந்த அழகான ஊரை சுத்தி பாரு, ஊர்ல லவ்வர்க்கிட்ட பேசு என்றான்.

நான் வேற லவ்வர்ன்னு சொல் லிட்டேன், நீ சரியா வயித்துக்கு சாப்பிட கூட மாட்டுற, நீயெல்லாம் எங்கேன்னா ஊர்ல லவ் பண்ணி இருக்க போற?

டே முனீர் அப்படி சொல்லாதடா, எனக்கும் ஊர்ல லவ் இருந்துச்சு என் பக்கத்து வீட்ல இருக்குற நிலவழகி மேல ரொம்ப லவ், அவ பேர்ல மட்டும் அழகி அல்ல. நிஜத்திலும் அழகி தான். அவ அழகை விட அவ குணம் தான் எனக்கு ரொம்ப பிடிச்சு இருந்துச்சு. அவகிட்ட இரக்ககுணம் அளவுக்கு அதிகமாவே இருந்துச்சு. ஸ்கூல், காலேஜ் எல்லாம் ஒண்ணா தான் படிச்சோம். அவ எல்லார்கிட்டயும் சகஜமா பேசுவா. என்கிட்டயும் பேசி இருக்கா. ரெண்டு, மூணு தடவை காலேஜ் பீஸ் நான் கட்டட்டுமா என கேட்டு இருக்கா, என்னதான் வறுமையில வாழ்ந்தாலும் அவகிட்ட பணம் வாங்க என் தன்மானம் ஒத்துக்கலை. காதலிக்கிற பொண்ணுக்கிட்டயே கடன் வாங்குற கையாலாகாத நிலை யாருக்குமே வந்திட கூடாது. வறுமை வாசல் வழி வந்தா காதல் ஜன்னல் வழியே போயிடும்னு ஒரு பழமொழி இருக்கு. என்னை நம்பி வீட்ல மூத்த அக்கா ஒருத்தி இருக்கா. அதான் என் ஒரு தலை காதலை என் மனசுக்குள்ளேயே போட்டுக்கிட்டேன்.

“சரி ரவி அண்ணா ரொம்ப பீல் பண்ணாதே. நான் தப்பா ஏதும் கேட்டிருந்தா சாரி” என்றான் முனீர்.

இரு வருடங்களுக்கு பிறகு

ரவி தன் அக்காவின் திருமணத்திற்காக வேண்டி விடுமுறையில் ஊர் செல்ல கிளம்புவதற்கு முன் அறை நண்பர்கள் எல்லோருக்கும் ட்ரீட் வைப்பதற்க்காக சவர்மா என்கிற சாண்ட்விட்ச்-ஸும் ஆளுக்கு ஒரு பெப்ஸியும் ஆர்டர் செய்தான்.

சாண்ட்விட்ச்-யை ஆளுக்கு ஒன்று கொடுத்தான்.

முனீருக்கு கொடுத்த சாண்ட்விட்ச்-யில் பாதியை புட்டு ரவிக்கு கொடுத்தான் ,ரவி அண்ணா இத்தனை வருசத்துல நீ ஒண்ணு கூட சாப்பிட்டதில்லை. இது டேஸ்ட்ல ரொம்ப நல்லா இருக்கும் கொஞ்சமாவது சாப்பிடு என்று சொல்லி ஒரு பாதியை அவன் வாயில் வைத்தான்.

தூள் தூளாக நறுக்கபட்ட சிக்கன் பீசு, வெண்ணை, மயோனிஸ், பொரித்த உருளை கிழங்கு, அத்தோடு காய்கறி சாலட் உள்ளே வைத்து தேவாமிர்தமாக அந்த சாண்ட்விட்ச் இருந்தது. நல்லவேளை இத்தனை ஆண்டுகளாய் இந்த கருமத்தை சாப்பிடவில்லை. ஒரு வேளை சாப்பிட்டு இருந்தால் டேஸ்ட்டுக்கு அடிமையாகி காசை கரியாக்கி இருப்போம். அக்கா கல்யாணத்துக்கும் தேவையான பணத்தை சேமித்து இருக்க முடியாது என மனசுக்குள்ள நினைத்தான் ரவி..

இறுதியாய் தன் அறை நண்பர்களிடத்தில் சொல்லி விட்டு ஊர் திரும்பினான் ரவி.

பானு அக்காவின் கல்யாண வேலைகள் தடபுடலாக நடந்து கொண்டிருந்தது. எந்த குறையும் இல்லாமல் அறுசுவை உணவு போட்டு தாம் தூமென பெரிய இடத்து கல்யாணம் போல ஒரு வழியாக சிறப்பாக தன் அக்காவின் திருமணத்தை நடத்தி முடித்தான் ரவி.

ஒரு வாரங்களுக்கு பிறகு...

டே ரவி, நம்ம ஊர்ல புதுசா ஒரு அரேபியன் ரெஸ்டாரெண்ட் திறந்து இருக்காங்கடா... கிரில் சிக்கன், சார்கோல்

சிக்கன், சவர்மான்னு புதுசா புதுசா டிஷ் வந்து இருக்காம்டா. நீ திரும்ப ஊருக்கு போறதுக்கு முன்னாடி உன் மச்சானையும், என்னையும் கூட்டிட்டு அந்த ரெஸ்டாரெண்டுக்கு போடா என்று சொன்னாள்.

தன் அக்கா முதன் முதலாக தன்னிடம் கேட்டு கொண்டதால் தன் மச்சானையும், அக்காவையும் அழைத்து கொண்டு அந்த அரேபியன் ரெஸ்டாரெண்டுக்கு போனான். அக்கா கிரில் சிக்கன் என்றாள். மச்சான் சார்கோல் சிக்கன் என்றான். இவனோ தனக்கு பிடித்த சவர்மா என்ற அந்த சாண்ட்விட்ச்-யை ஆர்டர் செய்தான்.

இவர்கள் கேட்ட உணவு பொருட்கள் எல்லாம் அவர்கள் உட்கார்ந்திருந்த டேபிளை அழகு படுத்தியது. வெளியே ஒரு பாட்டி பசிக்குது என்று சொல்லி கையேந்தி கொண்டிருந்தாள்.

எல்லோரும் ஒரு ரூபாய், ரெண்டு ரூபாய் என்று பிச்சை போட்டனர். ஏனோ அவள் பசிக்கு யாரும் உணவளிக்கவில்லை. இதையெல்லாம் கண்ணாடி வழியே பார்த்து கொண்டிருந்த ரவி டேபிளில் வைக்க பட்டிருந்த அந்த சவர்மா என்னும் சாண்ட்விட்ச்யை எடுத்து கொண்டு போய் அந்த பாட்டியிடம் கொடுத்தான்.

அந்த பாட்டி இருகரம் கூப்பி நன்றி தெரிவித்து விட்டு சென்றது. போகும் தருவாயில் அந்த பாட்டியின் கையில் ஒரு ஐந்நூறு ரூபாய் தாளை வைத்தான் ரவி.

அவன் திரும்பி வரும் தருவாயில் அவன் சற்றும் எதிர்பாரத சமயத்தில் நிலவழகி கன்னத்தில் முத்தமிட்டு ஐ லவ் யூ என்று சொன்னாள்.

இவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. நீ ரெண்டு வருசத்துக்கு முன்னாடி உன் டைரியில என் மேல உள்ள காதலை எழுதி வச்சதை உங்க அக்கா படிச்சிட்டு என்கிட்டே சொன்னாங்க, நாங்க இப்பவேணா ரொம்ப ஏழையா இருக்கலாம்மா, ஆனா நிச்சயம் என் தம்பி ஒரு அஞ்சு வருசத்துக்குள்ள பெரிய ஆளா ஆயிடுவான். என் கல்யாணம் முடிஞ்சதுக்கு அப்புறம் அவன் சம்பாதிப்பது எல்லாமே உனக்கு தான்னு சொன்னாங்க. நானும் அப்போது முதுநிலை பட்ட படிப்பு படிச்சதாலே கல்யாணத்துல பெருசா விருப்பம் இல்லை. அதனாலே இதுவரைக்கும் கல்யாணம் பண்ணிக்கலை. நீ காதலிக்கிறவனை விட உன்னை காதலிக்கிறவனை கல்யாணம் பண்ணிக்கிட்டா வாழ்க்கை நல்லா இருக்கும்னு சொல்வாங்க. அதுல எல்லாம் எனக்கு பெருசா நம்பிக்கை இல்லை. நிலையில்லாத பணம், ஸ்டேட்டஸ் மேலயும் எனக்கு உடன்பாடு இல்லை. உங்க அக்கா சொன்ன ஒரு வார்த்தைக்காக தான் ஏனோ தானோன்னு இங்கே வந்தேன். பசியால தவிக்குற அந்த பாட்டி கஷ்டப்படுறதையே நீ விரும்பலை.நான் கஷ்டப்படுறதையா நீ விரும்புவ ?

உன்னை மாதிரி தங்கமான மனசு உள்ளவனை காசு, பணத்துக்காக வேண்டாம்னு சொன்னா என்னை மாதிரி பைத்தியக்காரி யாருமில்லடா என்று சொல்லி இரு கன்னம் மாறி, மாறி அவனை முத்தமிட்டு கட்டியணைத்தாள் நிலவழகி.

■

விதைகளுக்குள்
மறைந்து கொள்கிறது
விருட்சத்திற்கான கருப்பொருள்
மரங்கள்

பூனைகளின் காலடி சத்தம்
பயத்தில் பதறுகிறது
எலிகளின் உள்மனது
உயிர்பயம்

**ஷீலா டுடி**

பாரியன்பன் நாகராஜன் - கவிதைகள்

என் நித்திரையில்
நான் இல்லாத
உன் கனவு.

ஒரு வணக்கம்
ஆரம்பிக்கிறது
முடித்தும் வைக்கிறது.

தலைசாய
கொடுத்த மடியில்
கனக்கிறது ஒற்றைச் சருகு.

உன்னோடு பேச
நிறைய இருக்கிறது
என்னிடம் அளவில்லா காதல்.

சிறார்களிடம் எளிதாய்
அகப்பட்டன; பிராது கொடுக்கத்
தெரியாத தட்டான்பூச்சிகள்.

இன்னுமந்த பாலத்திற்கடியில்
ஓடிக்கொண்டிருக்கிறது.
தன்பெயர் மறந்த வறண்ட நதி!

ஆயிரம் பூக்களிருந்தாலும்
காதலைச் சொல்ல போதும்
ஒரு பூ.

என்னை
ஈன்ற பூமித்தாய்க்கு
என் பசுந்தழைகளை
உரமாய்க் கேட்கிறார்கள்
கொடுக்கிறேன்.
மொட்டையாய் நின்றாலும்
எனக்கு மகிழ்ச்சி.
இப்படிக்கு,
மரம்.

நீயும் நானும்
ஒரே சாலையில்தான்
பயணித்திருந்தோம்.
தருணங்கள் மாறியிருந்ததால்
சந்தித்துக் கொள்ளவேயில்லை
இருவரும்.

வயது வரம்பின்றி
கால்களைத் தழுவுகிறது
அலைகள்; உள்குத்து இல்லை.

அவள்
ஒப்பனை முடிந்து
நிலைக் கண்ணாடியில்
முழுதாய் பார்த்தபோது
அவளின் காதோர
ஒற்றை ரோஜாவும் அழகை
சரிசெய்து கொண்டது.

எடுப்பதிலிருக்கும்
உரிமை; கொடுப்பதிலும்
இருக்க வேண்டும்.

சிறிதேனும் கனவை மிச்சம்
வைத்து வாழப் பழகு
ருசி படும் வாழ்க்கை.

அவளைப் போலவே படுக்கையில்
புரண்டு படுக்கிறது கூந்தல்
பூக்களும்.

ஓடி வந்தது காற்று
மூச்சிரைக்கிறது
மரங்கள்.

பட்டாம்பூச்சியைத் தொலைத்த
அன்றுதான் அவளை
முதன் முதலாய்ப் பார்த்தேன்.

சிறகுகள் பிடுங்க
கூண்டுக்குள் சிறைப் பட்டப்
பறவைகள் மட்டும் என்னுடன்.

குழந்தையின்
சித்திரக் கன்னங்களில்
முத்தங்கள் பதிப்பது சுகம்.

வாழத்தான்
வனங்களை அழித்தாய்.
போதும் போதும்
இனியும் அழித்தால்
இருக்காது புவியில்
உயிரினம்.

கூட்டலும் குறைச்சலும்
உடன் இருக்கும் வரை
தெரிவதில்லை.

**- பாரியன்பன் நாகராஜன்**
குடியாத்தம் - 632602

# வலிக்கும் தனிமை



மயிலிறகின் மயக்க வருடல்கள் மந்திரமாகிறதோ,
மனச்சோலையில் மன்மத அம்புகள் விளையாடுகிறதோ,
பசுமை ததும்பும் பன்னீர்க் கனவுகள் பார்வையில் மறைகிறதோ,
தென்றலும் கோபமாய் தீயோடு பேச்சுவார்த்தையோ.

வயதின் விளைச்சலில் வாலிப மகரந்தங்கள்...
நினைவுகளை நீட்டி கனவுகளுக்கு கட்டளையிட,
முகமறிந்த முனங்கலுக்குள் முழுமதியின் பதின்ம பந்தயங்கள்,
நிழலாடும் மனஅலைக்குள் மௌனமாக ரகசியங்கள்.

இரவுகளின் மௌனத்தைக் கலைத்திட்ட ரகசியப்பூக்களின் ரதஊர்வலம்..
மொழிபெயர்க்க முடியாத பதவுரையாய் பொருள் நிறைந்த அதிகாரங்கள்..
இதயத்து வழித்தடத்தில் இளைய பூக்களாய் இறைந்து கிடக்கும் நடப்புகள்
விழுதான வேர்களெல்லாம் விமர்சனப் பார்வைக்குள் கைதிகளாய்.

ஏணிகள் மீண்டும் மூங்கிலாக.. ஏறி படுத்தால் நால்வருக்கு பாரமாக.
விதிவழியின் வலியிங்கு விண்ணளவு உயர்ந்து நிற்க
மொழியில்லா வார்த்தைகளின் மௌன ஊர்வலத்தில்
தனிமை கருப்புத் துணியுடன் இரங்கற் பாவாய்.

**பரணி சுப சேகர்**

# வேதாளம் பதில்கள்

ஆசிரியர்கள் பெரும்பாலும் கவிஞர்களாக இருக்கின்றார்களே ? எப்படி?

உமர் பாரூக், திட்டச்சேரி

அவர்களிடத்தில்தானே எதிர்த்துக் கேள்வி கேட்காத மாணவர்கள் உண்டு. அதனால்தான்!

...

கவிதை கதை கட்டுரை இவற்றில் எது எழுதுவது கடினம்?

காங்கேயன், விழுப்புரம்

எல்லோமே கடினம்தான் எழுதத்தெரியாதவர்களுக்கு. எல்லோமே எளிமைதான் எழுதத்தெரிந்தவர்களுக்கு.

...

முகநூல் குழுமங்களின் நிறுவனர்களுக்கே கவிதை எழுதத் தெரியவில்லையாமே ?

வாஞ்சிநாதன், கும்பகோணம்

அவர்களுக்கு ஏன் கவிதை எழுதத் தெரிய வேண்டும்? ஒரு ஐந்தாறு அடிமைகள் சிக்கிக் கொண்டால் போதும். குழுமத்தை நடத்திவிடலாம்.

...

சிலர் விருது தருகிறேன் என்று உள்பெட்டியில் பணம்கேட்கிறார்களே ? அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

செந்தமிழ்ச்செல்வி, சென்னை

நான் என்ன நினைப்பது? அது அவர்கள் தொழில். பிழைப்பு ஓடவேண்டுமே!

...

வேதாளம் திரைப்படத்தில் நடித்துள்ளதா?

காவிரியான், காட்பாடி

ஏன் இல்லை. விக்ரமாதித்தனில் நடித்துள்ளதே!

...

தங்கம் விலை ஏறிக்கொண்டே போகிறதே!?

கலையரசி, மயிலாடுதுறை

மதிப்பு அதிகம் உள்ளவர்களின் ஊதியம் ஏறுவது போலத்தான் . எப்போது இறங்கி இருக்கிறது?

...

இலங்கையின் தற்போதைய நிலவரம் பற்றி

பச்சநாதன், மலேசியா

மீண்டும் அகதிகள் அதிகரிக்கிறார்கள்

...

இப்போது கொரானா குறைந்துள்ளது போலத் தெரிகிறதே!

கருணாகரன், பெங்களூரு

ஆம் குறைக்கப்பட்டுள்ளது நண்பரே!

...

வெளியிடும் நூல்கள் எல்லாம் வாசிக்கப்படுகிறதா?

நிஷாப்பிரியன், பாலக்காடு

ஆம் உறுதியாக..எழுதியவர் அச்சுக் கோர்ப்பவர் பதிப்பகத்தார் இவர்களெல்லாம் வாசித்தபிறகுதானே நூலே வெளியிடப்படுகிறது

...

வேதாளம் தேர்தலில் நிற்குமா? வெற்றி வாய்ப்பு எப்படி?

வடிவேலு, சென்னை

100 விழுக்காடு வெற்றிதான் ஒரே ஒரு நிபந்தனை வேறுயாரும் தேர்தலில் நிற்கக் கூடாது

...

**வேதாளம் பதில்கள்**

**தொடரும்.**
**கேள்விகளை கேட்கலாம்.**

பெண் எழுத்தாளர் அறிமுகம் :

# சிவகாம சுந்தரி



திண்டுக்கல் மாவட்டம் வத்தல க்குண்டு நகரில் பிறந்து தற்போது 30 ஆண்டுகளாகச் சென்னையில் வசிக்கும் சிவகாமசுந்தரி அவர்கள் சிறுவயதிலிருந்தே இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவர். பாடசாலையில் ஒன்பதாம் வகுப்பிலிருந்தே கவிதையும் கதையும் எழுதி வருகிறார். இவர் படித்தது MSc BEd PGDCA. 26 வருடங்களாக இயற்பியல் ஆசிரியையாகச் சென்னையில் பணி புரிந்து வருகிறார். இவரது கணவர் நாகமணி சென்னையில் தனியார் நிறுவன மேலாளராக உள்ளார். இவர் இரு பிள்ளை களின் தாயாவார்.

தனது கலைத்துறைப் பயணம் பற்றி குறிப்பிடுகையில் சென்னை வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளதாகவும், சிறுவர் நிகழ்ச்சிகள் மற்றும் மகளிர் நிகழ்ச்சிகள் என நிறைய நடத்தியுள்ளதாகவும், வானொலி யில் ராஜ்டிவியின் அகடவிகடம் மற்றும் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியில் பங்கேற் றுள்ள தாகவும் பகிர்ந்து கொண்டார்.

இவரின் சிறுகதை மற்றும் கவிதைகள் மகளிர் மாத இதழ்களில் "பார்கவி" எனும் பெயரில் இடம்பெற்றுள்ளன. பார்கவி என்பது இவரது மகளின் பெயர். மேலும் "நிலாவில் ஒரு ஹைக்கூ" மற்றும் "ஒரு பட்டாம் பூச்சியும் சிலஹைக்கூக்களும்" குழுமங்களில் நடாத்தப் படும் போட்டிகளில் முறையே இவர் ஹைக் கூக்களும் மொழி பெயர்ப்புகளும் சான்றிதழ்கள் பெற்றுள்ளன. இன்னும் நிறையக் கற்க விரும்பும் மாணவியாக தான் இருப்பதாகக் கூறுகிறார்.

கல்லூரி நாளிலேயே பள்ளத்தாக்கு இலக்கியப் பேரவை நடாத்திய கவிதைப் போட்டிகளிலும், கல்லூரியின் கவிதைப் போட்டிகளிலும்சான்றிதழ்கள்பெற்றுள்ளார்.

மேலும் ஹைக்கூ உலகம், ஹைக்கூ 2020, மலர்கள் தீட்டிய வரைவுகள், இமயம் தொடும் இயைபுகள், கரைசேரும் காகிதக் கப்பல்கள் போன்ற கவிதைத் தொகுப்பு நூல்களில் இவர் கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

இவர் கவிதைபற்றிக் குறிப்பிடுகை யில் சனங்களின் மனங்களில் நிற்பதே கவிதை. கவிதைகள் நடப்பியலை நகைச் சுவையுடன் சொல்வதாக இருக்க வேண்டும் எனக் கூறுகிறார்.

கவிதாயினி இலக்கியத்துறையில் பல சவால் களை ஆரம்ப காலங்களில் சந்தித்துள்ளதாகக் கூறினார். குடும்ப வாழ்க்கை யுடன் எழுது வதையும் சமன் செய்ய ஆரம்பத்தில் சிரமப்பட்டு இப் போது பழகி விட்டது. எழுத்துக்கள் மூலம் சமுதாயத்தில் நிறைய மாற்றங்கள் நிகழ வேண்டும்.

அதற்கு ராமாயண அணிலாக இந்த எளியவளின் பங்களிப்பும் இருக்கும். குறிப்பாக பெண்ணியம் சார்ந்த கருத்துக்கள் இங்கு தவறாகவே இன்றுவரைப் புரிந்து கொள்ளப் படுகின்றன. முடிந்தவரை தெளிவைத் தர முயல்வேன் எனவும் அடித்தட்டு மக்கள் படும் அல்லல்களை தன் கவிதைகளால் அம்பலப் படுத்த முயல்வேன் எனவும் தனது எழுத்துக்கள் மூலம் சமூக அவலங்களை வெளிக்கொண்டு வருகிறேன் எனவும் கேட்கப்பட்ட கேள்வி களுக்கு தனது பதில்களை சிறப்பாக வழங்கினார்.

தகவல் சேகரிப்பு :
**மஜினா உமறு லெவ்வை**
மாவடிப்பள்ளி, இலங்கை

# நம்பினேன் உன்னை...

இன்று எந்த உறவை எடுத்துக்
கொண்டாலும் அவற்றுக்கிடையில்
ஆணிவேராக அமைத்திருப்பது
நம்பிக்கை எனும்
ஒற்றை வார்த்தை தான்.
அதனால் தான் ஒருவரையோ ஒரு
விடயத்தையோ நம்பிய பின் தான்,
நாம் அதனை ஏற்றுக் கொள்கிறோம்.
அதில் நமது முழுக்
கவனத்தையும் செலுத்துகிறோம்.
அப்படியான நம்பிக்கை
சிதைந்திடாதிருப்பதில் நாம்
ஒவ்வொருவரும் மிகக் கவனமாக
இருக்க வேண்டும்.

மனிதனுக்கு இறைவன் மீதும்
பெற்றோருக்கு தன் பிள்ளைகள் மீதும்
பிள்ளைகளுக்கு தன்
உடன் பிறப்புகள் மீதும்
ஆசிரியருக்கு மாணவர்கள் மீதும்
கணவனுக்கு மனைவி மீதும்
மனைவிக்கு கணவன் மீதென்றும்
இன்று நம்பிக்கை பல விதமாகப்
பார்க்கப் படுகிறது.

இவர்களுக்கிடையிலான நம்பிக்கை
எனும் பாலம் ஏதோ ஒரு விடயத்தில்
சிதைக்கப் பட்டாலோ அல்லது
உடைக்கப் பட்டாலோ அந்த
உறவுகளின் நிலை அவ்வளவு தான்..

“உன்னைப் போய் நம்பினேனே!”
“உன்னால் தான் நான்
தேவையில்லாத நம்பிக்கை வைத்து
ஏமாந்து போனேன்...”
“அன்று அதிகமாக நம்பியதால் தான்
இன்று நான் அதிகமாக அழுகிறேன்.”

இவ்வாறு சில குற்றச்சாட்டுகள்
மனது சஞ்சலப் படும் போது இந்த
நம்பிக்கைக்கு
எதிராக கூறப்பட்டாலும்,
உண்மையான இன்னொரு பக்கமும்
இதற்கு இருக்கத் தான் செய்கிறது.

அது என்ன?!!

நம்பிக்கை தான் நம்மை
வாழ வைக்கிறது.
நம்பிக்கை தான் நம்மை
நாயகர்களாக்குகிறது.
நம்பிக்கை தான் நம்மை
சாதிக்க வைக்கிறது.
நம்பிக்கை தான் நம் வாழ்க்கைப்
பாதையை செப்பனிடுகிறது.
அந்த வகையில் நம்பிக்கையை முழு
மனதுடன் ஒருவர் மீதோ அல்லது
ஒன்றின் மீதோ வைக்க எம்மை நாமே
பழக்கிக் கொள்ள வேண்டும்.
ஏனெனில்,
நம்பிக்கை இன்றேல்
வாழ்க்கை இல்லை
நம்பிக்கை இன்றேல் வசந்தம் இல்லை
நம்பிக்கை வராத வரை மனது
துருப்பிடித்த இரும்பாகிறது.
நம்பிக்கை வராத வரை இதழ்கள்
மெய் பேச மறுக்கின்றது
நம்பிக்கையை தொலைத்தவர்களின்
வாழ்க்கை நரகமாகிப் போகிறது..

எனவே நம்பிக்கை வைப்போம்
நட்புக்களை தொடர்வோம்..

**ஷப்ரா இல்முத்தீன்**
அட்டாளைச்சேனை



# நீ நீயாக...

நீயும் நானும் என்றாய்,
புரிந்து கொள்
நீ நானாக  முடியாது
நான் நீயாகவும் முடியாது
நம் இருவருக்கும் இடையில் நிறைய
முள் வேலிகள்  இருக்கின்றன
தடைகளை  தாண்டுதல்  தகாது
தகாததை  தொடரவும் கூடாது
அதனால்,  நீ நீயாகவும்,
நான் நானாகவும்  இருக்கலாம்!

**அ...**

# புயலாய் மாறடி பெண்ணே!

கண்ணெனப் பேச்சில் சொல்லும்
கல்மனச் சமூகம் உன்னை!
பெண்ணென இழிவாய்க் கூறி
பெருமைகள் சிதைக்கச் செய்யும்!
மண்ணதில் சமமாய் எண்ண
மறுத்திடும் மறவா உண்மை!
விண்ணிலும் கால்கள் பட்டு
வீறுடன் நடப்பாய் பெண்ணே!

உயர்வினை இகழ்வார் தம்மை
உதறியே தள்ளிச் செல்வாய்!
செயலதில் திறனைக் காட்டு!
சீறிடும் அலையாய்ப் பாய்வாய்!
கயவரை எதிர்த்தே நின்று
காட்டியே கொடுத்து வீழ்த்து!
புயலென மாறிப் பெண்ணே
பொறுப்பினை ஏற்று வெல்வாய்!

தற்கொலை தீர்வே அன்று!
தன்னிலை உணர்வாய் வென்று!
கற்றது பலனை ஈயும்!
கருத்துடன் நினைவில் கொள்வாய்!
வெற்றியும் உன்னைச் சேரும்!
வியத்தகு சிகரம் ஏற்றும்!
பெற்றிடும் புகழும் பேரும்
பீடுற உயர்த்தும் பாரில்!

**- முனைவர் ஓசூர் மணிமேகலை**



# மரத்தில் முளைத்தக் காளான்





அன்புச்செல்வி சுப்புராஜூ

பச்சை பசேல்னு மரங்களும், பூக்களும் நிறைந்து இருக்கிற பச்சை வனத்தில் ஒரு ஓரமா காய்ந்து போன மரம் ஒன்று இருந்தது. கிளைகளில் இருந்து அதோட இலைகள் எல்லாம் உதிர்ந்து, சின்னச்சின்ன குச்சிகளோட பார்க்கவே பாவமா இருந்தது அந்த மரம்.

ஒருநாள் அங்கிருந்த மரங்கள் எல்லாம் கலகலப்பா பேசிக்கிட்டு இருந்தாங்க.

அப்ப ஒரு மரம் « நாம எல்லாம் பார்க்க நிறைய இலைகள், வண்ணப் பூக்கள், பறவைக் கூடுகள் என எவ்வளவு அழகா இருக்கோம். இந்தக் காய்ந்த மரம் நம்ம பக்கத்துல இருக்கிறது நல்லாவே இல்லை» என்றது.

அதைக் கேட்ட மற்ற மரங்கள் ‘‘ஆமாம்... ஆமாம்’’ என்றவாறு கிளைகளை அசைத்துச் சிரித்தன. «நானும் சின்ன வயசுல உங்களைப் போலத்தான் இருந்தேன், இப்பதான் இப்படி ஆகிட்டேன்» என்றது காய்ந்த மரம்.

அடுத்த நாள் அந்தப் பக்கமாக சில புதிய பறவைகள் பறந்து வந்து பச்சை மரங்களில் கூடு கட்ட இடம் பார்த்தன. ‘‘பறவைகளே, பறவைகளே, எங்கிட்டயும் கிளைகள் இருக்கு, யாராவது இங்கே வந்து கூடு கட்டுங்களேன்’’ காய்ந்த மரம் கூப்பிட்டதும் ‘‘உங்களின் கிளைகளில் கூடு கட்டுவது சிரமம் அம்மா, காய்ந்து போய் இலைகளே இல்லாமல் ஒடிந்து விழுவது போல இருக்கீங்க, பாதுகாப்பு குறைவா இருக்கு, அதான்மா’’ சொன்ன

படங்கள் வரைந்தவர் : மஞ்சு ஸ்வேதா



பறவைகள் மற்ற மரங்களில் கூடு கட்டுவதைப் பார்த்து அமைதியாக நின்றது.

பிறகொரு நாள் நிறைய விலங்குகள் அந்தப் பக்கமாக நடந்து வந்து கொண்டிருந்தன. வெயில் அதிகமாக இருந்ததால் பசுமையான மரங்களின் கீழே ஓய்வாக உட்கார்ந்து பல கதைகளை கலகலப்பாக பேசிக் கொண்டும், மேய்ந்த உணவுகளை அசை போட்டுக் கொண்டும் இருந்தன.

இதைக் கண்டு மகிழ்ந்த காய்ந்த மரம் ''விலங்குகளே, விலங்குகளே... எங்கிட்டயும் வாங்களேன், வந்து உட்கார்ந்து இளைப்பாறிச் செல்லுங்கள்'' என்று அழைத்தது.

''போங்கண்ணா, உங்களுக்கு கீழே நிழலே இல்லை, நாங்கள் எப்படி தங்குவது?'' கேட்ட விலங்குகளிடம் «நீங்க சொல்றதும் சரிதான்» என்று அமைதியானது மரம்.

போறாங்களே, யாருக்குமே உதவாது இப்படி தனியா இருக்கேனே» னு தனக்குள்ளேயே பேசிய காய்ந்த மரத்தைப் பார்த்து ''அதுக்கென்ன பண்றது, உங்கிட்ட பலமில்ல, அதான் நீ தனியா இருக்க'' னு கேலி பேசியது பக்கத்து மரம்.

அன்று இரவு நல்ல மழை. இடியும், மின்னலுமாக பெரிய மழைச் சோன்னு பெய்தது. அடுத்த நாள் காலையில் சூரியன் உதித்ததும் பார்த்தால் ஆங்காங்கே நிறையக் காளான்கள் முளைத்து இருந்தன.

காய்ந்த மரத்தின் வேரை ஒட்டியும், மரத்தின் மீதும் நிறையக் காளான்கள் முளைத்து இருந்ததைப் பார்த்து ''அடடா, வாங்க சொந்தங்களே.. எனக்குள் இருக்கும் ஈரத்தை உணர்ந்து முளைச்ச உங்களுக்கு எனது அன்பு...'' என்றது. காளான்கள் சிரித்தபடியே குடை பிடிக்க மகிழ்ச்சியாகச் சிரித்தது மரம்.





# கூலுவின் கேள்வி

அ. தமிழ்இனியன்

2 ஆம் வகுப்பு
திருப்பூர்.

ஒரு அழகான கிராமத்தில வானத்தில நிறைய மேகங்கள் கூட்டமாய் இருந்ததுனால நல்ல மழை வந்துச்சு. அப்ப அந்த கூட்டத்தில் கூலுனு ஒரு குட்டி மேகமும் அவங்க அம்மா மேகமும் இருந்தாங்க.

கூலு, அம்மாகிட்ட கேட்டுச்சு “நம்மெல்லாம் கூட்டமாக இருந்தா ஏம்மா மழை வருது” அப்படின்னு. அம்மா சொல்லுச்சு “அது எனக்கு தெரியலையே! ஆனா, என்னனு தெரிஞ்சு கிட்டு சொல்றேன்” அப்படின்னு ஒரு புத்தகத்தை எடுத்து படிச்சுட்டு சொல்லுச்சாம்.

கூலு குட்டி , “நாம் எங்கிருந்து வந்தோம் என்று உனக்குத் தெரியுமா? சொல்றேன் கேளு நம்ம முதல்ல பூமியில தண்ணியா இருந்தோம் வெயில் அடிச்சு தண்ணீர் ஆவியாகி வானத்துக்கு வந்து மேகமாக மாறிட்டோம். அப்பறம் நாமெல்லாம் கூட்டமாக சேர்ந்தா மழை வரும். இப்ப கூட மழை வருது இல்ல அந்த மாதிரி தான்'' அப்படின்னு அம்மா மேகம் சொல்லுச்சு.

அதைக் கேட்டுட்டு அந்த கூலு குட்டி மேகம் “ஆஹா! நாம் இப்படித்தான் உருவாகிறோமா? அப்படின்னு மகிழ்ச்சியாக கேட்டுச்சு''. அப்புறம் அம்மா, இதை என் நண்பர்கள் கிட்ட சொல்லிட்டு வரேன் அப்படின்னு அவங்க நண்பர்கள் கிட்ட சொல்ல போயிருச்சாம் குட்டி மேகம் கூலு.





# மரமும் கடலும்


**லட்சுமி செந்தில்**
செங்கல்பட்டு


சின்னமனூர் என்கிற கிராமத்துல குமரன் என்பவர் வாழ்ந்து வந்தாராம். அவர் ஒரு வியாபாரி.

அவரோட மிகப் பெரிய கனவு என்ன தெரியுமா? எல்லாரும் வீடு கட்டுற மாதிரி நாம கட்டாம புது மாதிரி ஒரு மரத்தால் ஆன வீடு கட்ட நினைச்சாரு.

ஆனால் அவரு ஒரு கஞ்சன். வீடு கட்ட மரம் வாங்க பணத்தை ஏன் செலவழிக்கணும்?னு யோசிச்சுகிட்டே இருந்தாரு.

அவரு ஒரு நாள் கடற்கரை பக்கம் போனாரு. அப்படி போகும் பொழுது அங்கு தூரத்தில் இருந்த மரங்களை பார்த்ததும் ஒரு யோசனை வந்தது.

இந்த மரத்தை வெட்டி நாம் வீடு கட்டினால் என்ன என்று நினைச்சிக்கிட்டே கடலில் கால்களை நனைச்சிட்டுப் போனாரு.

அவரு நினைச்சது கடலுக்கு தெரிஞ்சிருச்சு. உடனே கடல் தன் அலைகள் மூலம் தன் மர நண்பனை அழைச்சிச்சு! நண்பா! உனக்கு ஆபத்து... என்று சத்தம் போட்டது.. "என்னாச்சு கடல் நண்பா? எப்பொழுதும் நீ சந்தோசமா இருப்பியே என்ன ஆச்சு உனக்கு?" மரம் கேட்டது.

நீ குளிர்ந்த காற்றை விசுவதால் தான் நிறைய பேர் வெயிலில் இருந்து அவங்களைப் பாதுகாத்துக்க இங்க



வாராங்க! அப்புறம் குழந்தைகளா மாறி என்னோட விளையாட எல்லாரும் வாராங்க! அது எனக்கு ரொம்ப சந்தோசமா இருந்துச்சு.

ஆனா... இன்னைக்கி ஒரு மனுஷன் என் மர நண்பனான உன்னை வெட்டும் நோக்கில வந்துட்டான். அவனை ஒரு கை பார்க்கணும் நண்பா...

சரி, நா உனக்கு ஒரு யோசனை சொல்லுறேன். அதுமாதிரி நீ பண்ணினால் நான் என்னையும் காப்பாத்திக்குவேன். அந்த மனுசனையும் ஒரு கை பார்த்து விடலாம்னு மரம் சொல்லிச்சு. மறுநாள் காலையில் குமரன் மரம் வெட்டத் தேவையானப் பொருள்களை எல்லாம் எடுத்துக் கொண்டு மரத்தின் பக்கம் போனார். மரத்தின் அடிப்பாகத்தில் அதனை அறுக்க ஆரம்பித்தார்.


அவ்வளவு நேரம் அமைதியாக இருந்த கடல் கொந்தளிக்க ஆரம்பிச்சிடுச்சு. குமரன் ரொம்பவும் சத்தமா கேட்குதுனு திரும்பிப் பார்த்தா... கடல் ஆக்கோரசத்தோட அவனை நோக்கி ஓடி வந்துட்டு இருந்துச்சு.

அதைப் பார்த்ததும் குமரன் நாம் உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடி மறைந்து விட்டார். மரத்தைக் காப்பாத்தின மகிழ்ச்சியோட கடல் கலகலனு சிரித்தது. மரம் தலையாட்டி மகிழ்ந்தது. ■



# பிஷிகாவும் பிஷியாராவும்





ஒரு அழகான கிராமத்துல, ஒரு சின்ன காடு, அந்த காட்ட ஒட்டுனாப்புல ஒரு சின்ன வீடு. அந்த வீட்டுல "பிஷிகா" ன்னு ஒரு சின்ன பொண்ணு அவங்க அம்மா அப்பா கூட இருந்தா, அவளுக்கு பிறந்தநாள் வரப்போகுதுன்னு, அவளுக்கு பிறந்தநாள் பரிசா என்ன தரலாம்னு பிஷிகாவோட அம்மா, அப்பா யோசிச்சாங்க, பிஷிகாவுக்கு தண்ணில விளையாடுறது ரொம்ப பிடிக்கும், மீன்களும் பிடிக்கும், அதனால அவளுக்கு ஒரு மீன் தொட்டி வாங்கித்தரலாம்னு முடிவு பண்ணாங்க.

பிஷிகாவுக்கு மீன் தொட்டி ஒன்னு வாங்கி குடுத்தாங்க, அதுல ஆரஞ்சு கலர்ல ஒரு மீன் இருந்துச்சு. அந்த மீன் தொட்டிய பிஷிகா பிறந்தநாளைக்கு பரிசா கொடுத்ததும், பிஷிகா துள்ளி குதிச்சா, அவங்க அப்பா அம்மாவ கட்டி பிடிச்சிகிட்டா, "இந்த பரிசு எனக்கு ரொம்ப புடிச்சிருக்கும்மா, ரொம்ப நன்றி" ன்னு சொன்னா. பிஷிகா அப்பா அம்மாவும் கட்டிஅணைச்சு முத்தம் கொடுத்தாங்க.

பிஷிகா அந்த மீனுக்கு "பிஷியாரா"

ன்னு பேர் வச்சா, பிஷியாரா வந்த பிறகு, பிஷிகா ரொம்ப சந்தோசமா இருந்தா, தூங்கும் போதும், விளையாடும் போதும் எல்லா நேரமும் பிஷியரா கூடவே இருந்தா. ஒரு நாள் பிஷிகாவுக்கு வெளிய போய் நண்பர்களோட விளையாடணும்னு ஆசைப் பட்டா , ஆனா அவளுக்கு பிஷியராவ விட்டுட்டு போக மனசு இல்ல. அதனால பிஷியராவையும் கூட்டிட்டு போக முடிவு பண்ணினா. அவ அம்மாகிட்ட சொல்லிட்டு பிஷிகா வெளிய கிளம்புனா, போகும் போது அவ அம்மா “வெயில் ரொம்ப அதிகமா இருக்குமா, தண்ணி எடுத்துட்டு போ மா”ன்னு சொன்னாங்க, ஆனா அவ வெளிய போற குஷில்ல, அம்மா சொன்னத காதுல வாங்காம, “போயிட்டு வரேன் மா” ன்னு சொல்லிட்டு ஓடி போய்ட்டா.

வெயில்ல ரொம்ப நேரம் பிஷிகா விளையாண்டா, ரொம்ப களைப்பா போய்ட்டா, தண்ணி தாகம் எடுத்துச்சு, பிஷியராவ பாத்தா, அதுவும் தொட்டில தண்ணி குறைச்சு போய் ரொம்ப வாடி போய்ட்டு, அவ நண்பர்கள் வீடுலாம் ரொம்ப தூரமா இருந்துச்சு, ஓடி போய் தண்ணி வாங்கி பிஷியரா தொட்டில ஊத்திட்டு, அவளும் குடிச்சா. தாகம் தீர்ந்ததும் பிஷியாராவ தூக்கிக்கிட்டு அவள் வீட்டுக்கு போனா.

வீட்டுக்கு போனதும், பிஷிகா அம்மா கிட்ட நடந்ததெல்லாம் சொன்னா, சொல்லிட்டு அம்மா இனிமே நா வெளிய போகும் போது தண்ணி எடுத்துட்டு போவமா, அதுமட்டும் இல்ல, நீ என்ன சொல்றன்னு காதுல வாங்கணும் மா, பிஷியராவையும் வெளிய கூட்டிட்டு போறது பாதுகாப்பானது இல்ல மா, நா சொல்றதுயெல்லாம் சரிதானே அம்மா ன்னு கேட்டா. உடனே பிஷிக்காவ கட்டி பிடிச்சு ரொம்ப சரி தங்கம்னு அவ அம்மா சொன்னாங்க.



பூங்குழலி அருள்பாலன்
(வயது ஏழு) திருவாரூர் - காட்டூர்.

# பாடிப்பாடி

நண்பர்களுடன் உணவை
பகிர்ந்து உண்டோம்
நிறைந்தது வயிறு
பெருகியது மகிழ்ச்சி


நாள்தோறும் திருக்குறள்
மனப்பாடம் செய்கிறேன்
வாசலிலுள்ள கரும்பலகையில்
எழுத வேண்டும்

வானத்தில் வரிசையாய்
பறக்கும் பறவைகள்
கவனம் சிதறாமல்
உற்றுப் பார்த்தேன்

தோழிகளுடன் பாடியபடி
சொட்டாங்கல் விளையாடினேன்
கைகளுக்கும், கண்களுக்கும்
நல்ல பயிற்சி

புது வருடத்தின்
நாள்காட்டியைப் பிரித்தேன்
எனது பிறந்தநாள் வரும்
கிழமையைக் குறித்தேன்

சு.பிரவந்திகா
சென்னை






# முயலால் முன்னேற்றம்

புவனாபாபு
நாகை

**வே**லன் ரொம்ப பாவம்தான், அவனோட அப்பா கந்தசாமி வேலை யில்லாம ரொம்ப கஷ்டப்பட்டார், அவரோட தொழில் விறகு வெட்டி விக்கிறது, பக்கத்துல உள்ள காட்டுக்கு போய் விறகு வெட்டி அதை சந்தையில வித்து, கிடைக்கிற காசுல அன்றாடம் பொழுது போனுச்சு..

இப்ப மழை காலங்கறதால விறகு வெட்டவும் போக முடியல, கஷ்ட ஜீவனமா இருந்துச்சு.

வேலன் ரொம்ப சமர்த்து பையன்,, அப்பா, நிலைமையை தெரிஞ்சுகிட்டு, எதையும் கேட்டு தொல்லை பண்ண மாட்டான், 6ம் வகுப்பு படிச்சான், அவன் பள்ளிக்கு போயிருந்த நேரத்துல,

“ஏங்க, இப்படியே வேலையில்லாம இருந்தா நம்ம எப்படிங்க வாழ்றது”

“பார்ப்போம் தேவி, கடவுள் ஏதாவது ஒரு வழியை காட்டுவார், நம்பிக்கை யாய் இரு” அப்படின்னு அவங்க பேசிக்கிட்டு இருக்கும்போதே,

கந்தசாமி, கந்தசாமி .. ன்னு வாசல்ல குரல்.

“வாங்கய்யா, வாங்க வணக்கம் அய்யா,, என்ன விஷயம் அய்யா” அடுத்த தெருவில் இருக்கும் ஆசிரியர் குரு,

“ம்ம்ம்.. கந்தா, நம் பண்ணை வீட்டுக் கொல்லையில, நிறைய புதரா மண்டி கிடக்கு

சுத்தம் பண்ண வரீயா" ன்னு கேட்டார்,

''நீங்க போங்க, அய்யா நா... கடப்பாரை, மண்வெட்டிலாம் எடுத்துட்டு வந்துடுறேன்''ன்னு கந்தசாமி சொல்ல, அவர் சரின்னு கிளம்பினார்.

''தேவி, இன்னைய பொழுதுக்கு வேலை வந்துட்டு, நா போயிட்டு பணத்தோட வரேன். வேலனுக்கு நல்ல குழம்பா வைச்சு சோறு சமைச்சு போடு''ன்னு சொல்ல... சரின்னு தலையாட்டினாள் தேவி.

வேலைக்குபோன கந்தன், புல்ல, எல்லாம் மண்வெட்டியால வெட்டி, ஒரு ஓரமா போட்டுட்டு இருந்தார். அடுத்து ஒரு பெரிய புதரா இருந்த இடத்த தோண்டி, சமப்படுத்த ஆரம்பிக்கும்போது, விருட்டுன்னு ஒரு முயல் பாய்ஞ்சு ஓடுச்சு.

முயலை பார்த்த கந்தனோ, ம்ம்ம்.. முயல் ஓடுது, பரவால்ல பாம்பு இருக்கோ என்னம்மோன்னு நினைச்சுகிட்டே, வேலையை பார்த்தார்.

சாயங்கால பொழுதுக்குள்ள வேலையை சுத்தமா முடிச்சுட்டார். சரின்னு குரு வாத்தியார் வீட்டுக்கு போனார்..

''அய்யா, வேலையை முடிச்சுட்டேன்'' ன்னு சொல்லவும், ''சரி கந்தா, இந்தா இதை வைச்சுக்க''ன்னு சொல்லி தாராளமாவே பணம் கொடுத்தார், குரு வாத்தியார்.

சரிங்க, ஐயா வரேன்னு சொல்லிட்டு வீட்டுக்கு புறப்பட்டார். கொஞ்ச தூரம் நடந்து போகும்போது ஏதோ ஒரு சத்தம் கேட்ட மாதிரி இருக்கவும் திரும்பி பார்த்தார்.

புதருலேந்து ஓடுன முயல் மெது மெதுவா, இவர் பின்னாடியே வந்துட்டு இருந்துச்சு, அதை யோசனையா பார்த்த கந்தன் பேசாம நடந்தார்...




வீட்டுக்கு வந்துட்டார்? முயலும் பின்னாடியே வந்துடுச்சு.

''தேவி... தேவி... இந்தா குரு வாத்தியார் நிறைய பணம் கொடுத்துருக்கார்,கடையிலபோய்என்னவேணுமோ வாங்கிட்டு வா" ன்னு சொன்னார்,

சரின்னு தேவியும் கடைக்கு போய்ட்டுவந்து சமைக்கவும் ஆரம்பித்தாள்.

"அப்பா, அப்பா''ன்னு ஓடி வந்தான் வேலன். "அப்பா நீங்க எனக்காக முயல் கொண்டு வந்திங்களா, அழகா இருக்குப்பா''ன்னு கேட்கவும், ''இல்ல வேலா... நான்கொண்டு வரல, வேலை செய்ற இடத்துலேந்து இருந்துச்சு. பின்னாடியே வந்துட்டு போல"ன்னு சொன்னார் கந்தன்.

அப்பபடியாபா... நாமளே வளர்க்கலாம் ன்னு சொன்னான்,வேலன். அப்பா சரின்னு சொல்லவும், அவங்ககூடவே வளர்ந்தது அந்த முயல்.



முயலுக்காக, தன் வீட்டு கொல்லையை கொத்தி, சுத்தம்பண்ணி, காய்கறியை பயிரிட ஆரம்பிச்சாங்க.கூடிய சீக்கிரம் விளைச்சல தந்து, முயலோட பசியை மட்டுமில்லாம, அவங்க வறுமையையும், போக்கிடுச்சு அந்த காய்கறி தோட்டம்,

கந்தன் தன் மனைவி தேவிகிட்ட, "இத்தனைநாள் இது தெரியாம போச்சே... இருக்குற இடம் சின்னதா இருந்தாலும் அதுல காய்கறியை பயிரிட்டதாலே, நல்லா வியாபாரமும் ஆகுது. நமக்கு நல்ல லாபமும் வருது. சத்தான வீட்டு காய்கறியும் கிடைக்குதுல்ல" ன்னு சொன்னார் ..

அப்பறம் என்ன வேலனும் முயலும், அவங்க குடும்பமும் மகிழ்ச்சியா இருந்தாங்க.

# தாயின் அன்பு

அது ஒரு அழகான சிற்றூர். அந்த சிற்றூரில் கணேசன் என்று ஒரு சிறுவன் இருந்தான். அவன் மிகவும் நன்றாக படிப்பான். அதற்குக் காரணம் அவனது தாய் பார்வதி.

கணேசனின் தந்தை ஈஸ்வரன் விவசாயத்தில் ஈடுபட்டு வந்தார். விளைச்சல் நன்றாக கிடைக்காத காரணத்தினால் அவர் அயல் நாட்டிற்கு வேலை பார்க்க சென்றார்.

நாட்கள் கடந்தன, அவன் தன் நண்பர்களுடன் சேர்ந்ததால் அவன் படிப்பில் கவனம் குறைந்தது. அவன் இவ்வாறு செய்வதை அவன் தாய் கவனித்தாள். ஒரு நாள், அவள் தன் மகனிடம் "இவ்வாறு செய்வதால் உன் படிப்பு வீணாகிவிடும்" என்று கூறினாள். அவன் தன் தாய் சொல்வதை புரிந்து கொள்ளாமல் அவளை எதிர்த்து பேசினான். இருவருக்கும் வாக்கு வாதம் நடந்தது. இறுதியில் கணேசன் கோபத்தில் உணவு பெட்டியை எடுக்காமல் பள்ளிக்கு சென்றான். அவன் தாய் மிகவும் வருந்தினாள்.

அன்று அவன் பள்ளியில் அவன் ஆசிரியர் தாயின் அன்பை பற்றி பாடம் எடுத்தார். "தாயில்லாமல் நாமில்லை. இந்த உலகில் நாம் பிறக்க காரணம் நமது தாய் தான்" என்று கூறினார்.

தன் மகனுக்கு உணவு பெட்டியை கொடுப்பதற்காக அவன் நண்பனான முல்லாவை அழைத்தாள். அவனிடம் "இந்த உணவு பெட்டியை கணேசன் இடம் கொடு" என்று கூறினாள். அந்த ஆசிரியர் பாடம் எடுத்துக் கொண்டிருந்த நேரத்தில் முல்லா வகுப்பறைக்கு வந்தான். அவன் கணேசன் அருகில் வந்து "இந்தப் பெட்டியை உன் தாய் உன்னிடம் கொடுக்க சொன்னார்" என்று கூறினான். அப்போது அவன் தன் தாயின் அன்பை புரிந்து கொண்டான். பள்ளி முடிந்தவுடன் வீட்டிற்கு விரைவாக சென்றான். தன் தாயை கட்டி அணைத்து விட்டு மன்னிப்பு கேட்டான்.

சரவணாஅழகர்சாமி






# சிட்டுக்குருவி

சிட்டுக்குருவி, சிட்டுக்குருவி
உன்னை பார்க்கவே...
காத்துக்கிடந்தேன், காத்துக்கிடந்தேன்
நாளும் பொழுதுமாய்!!!
சிட்டுக்குருவி, சிட்டுக்குருவி,
நீயும் உண்ணவே...
போட்டு இறைத்தேன்,
போட்டு இறைத்தேன் தானியங்களை!!!
சிட்டுக்குருவி, சிட்டுக்குருவி
நீயும் பருகவே...
வீட்டின் மாடியில், வீட்டின் மாடியில்
தண்ணீர் வைத்தேனே!!!
சிட்டுக்குருவி, சிட்டுக்குருவி
நீயும் வளர்கவே...
காத்திட வந்தோம், காத்திட வந்தோம்
என்றும் நாங்களே!!!
சிட்டுக்குருவி, சிட்டுக்குருவி
நீயும் வாழ்கவே
வாழ்த்திட வந்தோம்,
வாழ்த்திட வந்தோம்
என்றும் நாங்களே!!!

**ஜெ. ப்ரணவ்,**
மூன்றாம் வகுப்பு,
கேந்திரிய வித்யாலயா பள்ளி,
கோவை.






# பள்ளிக்கூடம்

பள்ளிக்கூடம் தான்
எனக்கு ரொம்ப பிடிக்கும்
பள்ளிக்கூடம் தான்
எனக்கு ரொம்ப பிடிக்கும்
பள்ளிக்குப் போகும் போது
நிறைய வகையான
கடைகள் பார்ப்பேன்
வீடுகள் பார்ப்பேன்
பள்ளிக்கூடத்திலே நிறைய
நண்பர்கள் கிடைப்பாங்க
அவங்க கூட நான் விளையாடுவேன்
அங்கே போய்ட்டு
நான் மகிழ்ச்சியா படிப்பேன்
ஆசிரியர் சொல்றத
நான் நல்லா கவனிப்பேன்
நான் அங்கே
அம்மா கொடுத்து
விடும் உணவை ஜாலியா
சாப்பிடுவேன்
எனக்கு ரொம்ப பிடிக்கும்
பள்ளிக்கூடம் னா
எனக்கு ரொம்ப பிடிக்கும்
பள்ளிக்கூடம் னா!!!

**ஜெ. சி. நேகா**
வயது: 6
வகுப்பு: 1
கிரீன்வுட் சர்வதேச பள்ளி,
கத்தார்



# குட்டி யானை

ஒரு நாள் ராமுவும் அவனோட தம்பி சோமுவும் வீட்ல விளையாடிட்டு இருந்தாங்க. அப்போ அவங்களோட அம்மா இருவரையும் கூப்பிட்டு மாடிக்கு போய் காய வைத்த துணிகளை எடுத்துகிட்டு வர சொன்னாங்க.

துணி எடுக்க போன பசங்க நிறைய நேரம் ஆகியும் வீட்டுக்கு வரலியேன்னு அம்மா மாடிக்கு போய் பார்த்தா, மாடியில் பசங்க துணி எடுக்காம விளையாடிட்டு இருந்தாங்க! அம்மா ராமு சோமுவிடம், "ஏன் இப்படி பண்றீங்க பசங்களா? சாப்பாடு சாப்பிடனும்ல! உடனே வீட்டுக்கு வாங்க போலாம்ன்னு" சொன்னாங்க.

அதுக்கு பசங்க அம்மாவிடம், "இன்னும் கொஞ்ச நேரம் விளையாடிட்டு வருகிறோம் அம்மா! ஆ!! ஒரு யோசனை. சாப்பாடு மாடியிலியே ஊட்டுங்க அம்மா. நாங்க விளையாடிகிட்டே சாப்பிடு கிறோம்ன்னு" சொன்னாங்க. அம்மாவும் அதேபோல் சாப்பாடு ஊட்டிவிட பசங்க மகிழ்ச்சியாக விளையாடினாங்க!


அடுத்த நாள் ராமுவும் சோமுவும் பக்கத்து காட்டுக்கு போனாங்க. அங்கே அம்மா யானை,அப்பா யானை அப்புறம் ஒரு குட்டி யானை தண்ணீர் குடிக்க குளத்துக்கு போய்ட்டு இருந்ததை பார்த்து சோமு ராமுவிடம், "குட்டி யானை அழகா இருக்குல! இப்படி குடும்பமா போறது பார்த்தா மகிழ்ச்சியா இருக்கு ராமு. நம்ம இங்க ஒரு செடி வைக்கலாமா? குட்டி யானை தினமும் வந்து சாப்பிடுவாங்கலன்னு" சொன்னாங்க.

அதைக் கேட்டுவிட்டு ராமு சோமு விடம் நல்ல யோசனைன்னு சொன்னாங்க. உடனே அங்கே ஒரு செடி வச்சு தினமும் தண்ணீர் ஊத்தி வந்தாங்க.

கொஞ்ச நாளில் அந்த செடி, காய் கனிகளுடன் பெரிய மரமா ஆயிடுச்சு. குட்டி யானை அந்த மரத்தோட இலை காய் பழங்களை சாப்பிட்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தது. அதைப் பார்த்த பசங்களும் மகிழ்ச்சியுடன் விளையாட போனாங்க.



ஜெ. சி. நேகா,
கத்தார்



# நூல் மதிப்புரை

தொகுப்பாசிரியர் :
அன்புச்செல்வி சுப்புராஜூ
வகை : சிறுவர் கதைகள்
பக்கங்கள் : 76
விலை : 100 ரூபாய் (இந்தியா)
நூல் பதிப்பாளர் :
நண்பர்கள் பதிப்பகம்

தொடர்புகளுக்கு : +91 8925335858




அன்புக்கே இலக்கணமாய் கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜூ அவர்கள் ''குட்டி மேகங்கள் தூவிய தூறல்கள்" புத்தகத்தினை தொகுத்து இளம் தலைமுறை எழுத்தாளர்களுக்கு ஒரு வழித்தடம் அமைத்து கொடுத்திருக்கிறார். தன்முனைக் கவிதை, ஹைக்கூ, புதுக்கவிதை, இன்னும் பல வகை கவிதைகளின் நாயகி கவிஞர் அன்புச்செல்வி அவர்கள், சிறுவர் இலக்கியத்திற்கு கிடைத்திருக்கும் மிகப் பெரிய வரம், மழலைப் பாடல் எழுதுவது, மழலைச் சார்ந்த கவிதைகள், குழந்தைகளுக்கு தன்முனைப் பயிற்சி, குழந்தைகளை கதை எழுத வைத்து,பு த்தகமாக கொண்டு வந்தது என குழந்தைகளுக்காக செயல்படுவது மிகச் சிறப்பானது..

நாளைய சமுதாயத்தினை உருவாக் கிடும் இளம் படைப்பாளிகள் எழுத்துகள் மூலம் எதையும் செயலாற்றும் சக்தியினை பெறுவர்..

கடந்த $1^1/^2$ வருடங்கள், இணைய வழியில் பல குழந்தைகளுடன் பழகியதில், ஒவ்வொரு குழந்தையும் திறமையுள்ள குழந்தைதான்..,எந்த துறையில் ஆர்வமாக இருக்கிறார் என கண்டறிந்து அதற்கு ஏற்றார்போல் ஊக்கமளித்தாலே போதும்.

பன்முகத் திறமை கொண்ட குழந்தைகளின் கதைகளை பார்க்கலாம் வாருங்கள்.

எவ்வளவு பணம் நம்மிடம் இருக் கிறது என்பதைவிட, அவசர, ஆபத்து காலத்தில் உதவும் பணம் வாழ்வில் மிக முக்கியமானதாகும். தன்னிடம் உள்ள பணத்தால் நண்பர்களுக்கு நன்றாக செலவு செய்யும் முகில், அவசர தேவைக்கு 1 ரூபாய் இல்லாமல் திண்டாடுகிறான். ஏழையானாலும் படிப்பில் ஜொலிக்கும் நிமலன், முகில்க்கு செய்யும் உதவியே., "உதவிய காசுகள்" .

கடின உழைப்பாளிகள் எப்போதும் சோர்ந்து போக மாட்டார்கள், தன் நேர்மைத் தன்மையை செய்யும் செயலில் காட்டும்போது அதற்கான பலன் நிச்சய மாய் கிடைத்திடும், இராமுவிற்கும் அதற்கான பலன் கிடைக்கிறது. மேலும் சோம்பலாய் இருந்திட்டால் வரும் தீமை களையும் உணர்த்துகிறது. ''ராமுவின் நல்ல குணம்''.

மழையே இல்லாமல் வறண்டு போன பூமியை பார்த்து வேதனைப் படும் தாத்தா, ஆறுதல் சொல்லி தன் நண்பர்களுடன் சேர்ந்து

மரக்கன்றுகளை நட்டு வைக்கிறாள் பேத்தி நிலா, அவளது நம்பிக்கை ஜெயிக்கிறது.. மழையும் வருகிறது. இவ்வாறாக மரம் நடுதலை பற்றி சொல்லுகிறது "மழையில் நனைவோம் வாருங்கள்".

நாம் பல்வேறு காரணங்களினால் கிராம வாழ்க்கையை விட்டு நகரத்தில் இருக்கிறோம்..ஆனாலும்,வருடத்தில் ஒருமுறையாவது சொந்த பந்தங்களுடன் கூடி கிராமத்து சூழலில் விடுமுறையை கழித்தால், நன்றாக இருக்கும் என்பதனை , இளம்தலைமுறையான சுரேஷ் எவ்வாறாக கிராமத்து வாழ்வை ரசித்தான் என்பதை சொல்லும் ''கிராமத்தில் திருவிழா''

ஏழ்மையான சூழலில் இருந்தாலும் விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் இருந் தால் எதையும் சாதித்திட முடியும், சோமு தன் முயற்சியால் தேசிய அளவில் பரிசு வாங்கி, நமக்கும் ஊக்கத்தை கொடுக்கும் வகையில் அமைந்த "ஓட்டப்பந்தயம்"

குழந்தைகளின் கற்பனை சக்திக்கு எல்லையே இல்லை. செடியில் புத்தகம் பூக்குமா, ஆம் புத்தகச் செடி வளர்த்து புத்தகமாக வருகிறது, பூங்குழலியும் அவ்வாறாக கிடைக்கும் புத்தகங்களிலிருந்து கதை படித்து கதை சொல்லியாகவும் ஆகிறாள் அதுமட்டுமா தன் நண்பர்களுக்கும் புத்தகச் செடியின் விதையை பரிசளிக்கிறாள் என வித்தியாசமான கதை "பூங்குழலியும் புத்தகச்செடியும்''

ஒருவர் தன் வாழ்நாளில் அடுத்தவர் செய்யும் உதவியை எவரும் மறந்துவிட மாட்டார்கள். ஒரு மனிதர் வாழ்வின் மிகப்பெரிய இடத்தை அடைய வெகுதூரம் செல்கிறார் .அங்கே விலங்குகள் கூட உதவி செய்வதைப் பார்த்து வியந்து போகிறார் நாமும் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று எண்ணி வாழ்கிறார் என்பதே ''வாழ்வின் பயணம்''.

காட்டுக்குள் இரு போட்டிகள் நடத்திய கரடி, ஆமை,நத்தை இருவரையும் அவர்களது திறமையை காட்டிட வாய்ப்பு கொடுத்து இருவரையுமே வெற்றியாளர்களாக கௌரவப் படுத்துகிறது கரடி,யார் சிறந்தவர் என்பதை நட்பின் மூலம் உணர்த்துகிறது "யார் சிறந்தவர்"

மலைப்பூ கிராமத்துல சுக்கி பாப்பா ரொம்ப சந்தோஷமா இருந்தா. அங்க வர நிறைய பறவைகளை அவ ரசிச்சிட்டு இருந்தா, ஒரு குருவியும் அம்மா குருவியும் பார்த்து ரொம்ப சந்தோஷ பட்டாள், அதற்கு உதவி செய்து வந்த இன்னொரு குருவியும் பார்த்தா, அப்போ துப்பாக்கியால் குண்டு பட போகும் குருவியை எப்படி இன்னொரு குருவி காப்பாற்றுகிறது. அதற்கு பிறகு என்ன நடந்ததுன்னு சொல்றதுதான் ''தியாகம்''

ஒரு அம்மா வண்டும் பாப்பா வண்டும் இருந்தாங்க, எனக்கு ரொம்ப பசிக்கிறது என்று சொன்ன பாப்பா வண்டுக்கு, கீரை கொண்டுவர அம்மா வண்டு போகிறது, கீரை நல்லதுன்னு வண்டு கூட தெரிந்து வைத்திருக்கிறது, அங்க வர்ற எலி என்ன பண்ணுச்சு, அவங்க ரெண்டு பேரும் கீரையை சாப்பிட்டாங்களான்னு சொல்லும் "பாப்பா வண்டும் குறும்புக்கார எலியும்".

வயலூர் கிராமத்துல ஒரு முரட்டு காளை மாடு இருக்கிறது, அந்த காளை மாடு எல்லாரையும் ரொம்ப பயமுறுத்தும், ஆனா அது ரொம்ப சந்தோஷமா இருக்கும். இப்படியே அந்த மாடு வரது யாருக்குமே பிடிக்காது. ஒரு நாள் தீபாவளி அன்னைக்கு பட்டாசு வெடிக்கு பயந்து ஒருநாள் முரட்டு மாடு வரல, என்று சந்தோஷப் பட்டாங்க, இப்படி அன்பான மாடுன்னு சொல்ல வைக்கும் ''முரட்டு மாடு''.

மழை நல்லா பெய்யும் ஒரு நாளில் ஸ்நிகிதா வீட்டுக்கு ஒரு சிட்டுக்குருவி வருது, சிட்டுக்குருவி என்ன கேட்கிறது, என்ன சாப்பிட கொடுத்தாங்க, அதை பார்த்த ஸ்நிகிதா எவ்வளவு சந்தோஷமா இருந்தாங்கிறதுதான் ''சிட்டுக்குருவியும்

ஸ்நிதா குடும்பமும்''.

மரத்திலிருந்த பறவை தன் குஞ்சுகளோடு சந்தோஷமாக இருந்தது. பழங்கள்மற்றும் கொட்டைகள்ன்னு சாப்பிட கொடுத்துச்சு, ஆனா திடீர்ன்னு கொஞ்சம்உடம்புசரியில்லாமபோயிடுச்சு, காரணம் என்னன்னு பார்த்தா அந்த தோட்டத்துக்கு பூச்சிக்கொல்லி மருந்து ரொம்ப அடிச்சிட்டுஇருந்தார், ஒருமனிதர். அது தான் தன்னோட குஞ்சுகளுக்கு நல்லதுதான் இல்லன்னு புரிஞ்சுக்கிட்டு வேற இடம் நோக்கி போயிடுச்சு குருவி. பறவைகள் இடத்தை விட்டு போயிருச்சு ஆனால் அந்த பழங்களை சாப்பிடும் மனிதனின் நிலை என்ன என்று கேள்வி கேட்கும் ''பூச்சிக்கொல்லியா? உயிர்க்கொல்லியா?''.

சாலா வீட்டில் பிறந்தநாள் நடக்குது ஆனால் ரூபன் வீட்டுக்கு சொல்ல மறந்துட்டாங்க. ஆனாலும் ரூபாவும் அவங்க அம்மாவும் சாலாவோட பிறந்த நாளுக்கு போறாங்க, அன்பு இருந்தால் எதுவுமே செய்ய முடியும் அப்படின்னு சொல்லுது ''அன்பின் பரிசு''

ஒரு மலைக் காட்டில் மழையை வரல, முயல் முகிலன் ஏன் மழையே பெய்யுறது இல்லை அப்படின்னு குட்டி மேகத்தைப் பார்த்து கேட்கவும், உங்க காட்டுல மழை பெய்ய எனக்கும் ஆசைதான், ஆனால் மரமே இல்லையே அப்படின்னு சொன்னுச்சு, அடுத்த நாளே எல்லா விலங்களிடமும் பேசி முயல் முகிலன் நம்ம காட்டுல எல்லா இடத்திலேயும் குழிதோண்டி, விதை விதைக்கலாம் அப்படின்னு சொன்னது, அதே மாதிரி செஞ்சாங்க, இப்படியாக சில வருஷம் கழிச்சு,காடும் முழுவதும் மரம் ஓரளவு வளர்ந்து, நல்ல மழை பெய்தது,எல்லாரும் சேர்ந்து, குட்டி மேகத்துக்கு நன்றி சொல்வதுதான். ''குட்டி மேகம் சொன்ன யோசனை''.

இவ்வாறாக அனைத்து கதை களும் மிகச் சிறப்பாக உள்ளது..குழந்தைகளின் சிந்திக்கும் சக்தியும், தன்னைச் சுற்றி நடக்கும் விடயங்களை உற்று நோக்கி கதைகளை எழுதியுள்ள விதமும் பாராட்டுக்குரியது. தாங்கள் எழுதிய கதைக்கு அவர்களே வரைந்துள்ள குழந்தைகளின் ஓவியங்களும் அருமை..வாழ்த்துகள் குட்டி மேகங்களே..

புவனாபாபு
நாகை.



# கடைசி பயணம்



– கு. லோக பிரபா

மூன்றாம் ஆண்டு
சமூகவியல் துறை. வி.இ.டி கலை
மற்றும் அறிவியல் கல்லூரி. ஈரோடு.

அது ஒரு இனிய நள்ளிரவு பொழுது. காற்று மெதுவாக வீச ஆரம்பித்தது அதோடு ஊரின் ஆரவாரமும் அடங்கியது சென்னைக்கு செல்லும் கடைசி ரயில் பெட்டியில் மூன்று நண்பர்கள் சோமு, ராமு மற்றும் வரதன் ஆகியோர் பயணம் செய்தனர்.

மூவரும் பலவகையிலும் ஒன்றினைந்தவர்களாயினும் பல வேறுபாடுகள் நிறைந்தவர்கள். சோமு மிகுந்த கடவுள் நம்பிக்கை உடையவன் அவன் பேசும் ஒவ்வொரு விசயமும் கடவுளின் அருள் வாக்கு என எண்ணுவான். ஆனால் ராமுவோ அதற்கு மாறாக அனைத்தும் அறிவியல் மூலமாக நடக்கின்றது என மாற்றுக் கருத்துக் கொண்டவன். வரதனோ இரண்டு பேரின் கருத்திற்கு நடுநிலையாக அறிவியல் சார்ந்த கடவுள் நம்பிக்கையே விரும்புவான்.

மூவரும் அந்த ரயில் பயணத்தின் போது பல முரண்பாடான கருத்துக்களை பேசிக்கொண்டுசென்றுகொண்டிருந்தனர். ஒரு கட்டத்தில் ராமு மற்றும் சோமு இடையே சிறு சண்டைகளும் கருத்து வேறுபாடுகளும் ஏற்பட்டது. அப்போது சோமு கடவுளே அனைத்தையும் ஆள்பவன் எனக் கூற அந்த கருத்தை ராமு எதிர்க்கிறான். வரதனோ இரண்டு பேருக்கும் சாதகமாக பதிலளிக்கிறான். பின்பு இருவருக்கும் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. ராமு அதற்கு கடவுள் நம்பிக்கையை எதிர்காலத்தையும் கணிக்க யாராலும் முடியாது எனக் கூற சோமு அதற்கு எதிராக கடவுளின் அருளால் ஞான திருஷ்டியால் ஜோதிடர்களால் கணிக்க முடியும் அதன் பின்பே அறிவியல் தோன்றியது எனக் கூறினான். ராமு அந்த பதிலை முற்றிலும் எதிர்த்தான்.

திடீரென ரயிலில் கடவுளால் கணிக்க முடியும் அவன் அருளால் என்னால் கணிக்க முடியும் என ஒரு குரலின் ஒலி எழும்பியது. அந்தக் குரலின் சொந்தக்காரர் ஒரு வயதான 60 வயது முதியவராவார். பெரிய தாடியுடன் கூடிய சுருங்கிய முகத்தை உடையவர் .ஒரு சிறு பையை கையில் எடுத்துக்கொண்டு அந்த மூன்று நண்பர்களை நோக்கி விவாதம் புரிய ஆவலுடன் வந்துகொண்டிருந்தார்.

இதனை கண்டு அதிர்ச்சியில் உறைந்த அந்த மூன்று நண்பர்கள் ரயில் பெட்டியில் நம்மை சுற்றி யாருமே இல்லையே இவர் எங்கிருந்து வந்திருப்பார் என யோசிக்க ஆரம்பித்தனர். அந்த முதியவர் ஒருவரின் வருங்கால வாழ்க் கையை அவரால் ஓவியமாக வரைய முடியும் எனக் கூறினார். அதற்கு ராமு அது எப்படி சாத்தியம்? என கேட்டான். சோமுவோ அந்த முதியவரிடம் நீங்கள் ஜோதிடரா? என்று கேட்டான். அதற்கு அந்த வயதானவர் நான் ஜோதிடன் அல்ல ஆனால் என்னால் கண் மூடி ஒருவரின் வருங்காலத்தை ஓவியமாக வரைய முடியும் என கூறினார்.

இதை சோதிக்க விரும்பி ராமு

தனது வருங்காலத்தை வரையுமாறு கேட்டான். பின்பு அவர் பையிலிருந்து ஒரு புத்தகத்தையும் பேனாவையும் எடுத்தார். ராமுவிடம் அந்த முதியவர் அந்த புத்தகத்தில் வருங்காலத்தைக் கணிக்கும் ஓவியத்தின் நேரம் நாள் மாதத்தைத் குறிப்பிட சொன்னார் அதை தொடர்ந்து அவன் 25. 8. 2010 நேரம் காலை 7:00 மணி என எழுத அவர் அதனை கண்மூடி வரைந்து காண்பித்தார். பின்பு அதை எப்படி நம்புவது அது ராமுவின் படம் என்று கேட்டனர் அதற்கு ராமு என் தாத்தா அந்த படத்தில் உள்ளது போல் இருப்பார் எனக்கூற அதை மற்ற நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை அதை எப்போது உண்மையென காட்டுமாறு அந்த முதிய வரிடம் கேட்டனர்.

பின்பு சோமு தன் வருங்கால தேதியை கூற அவர் அந்த ஓவியத்தை வரையவில்லை ஏன் என கேட்க அவனுக்கு அந்த தேதியான அவனின் 60 வயதில் அவன் இறந்து விடுவான் அப்போது எப்படி என்னால் இறந்து போனவரை வரைய முடியும் என கேட்க ராமுவோ சோமுவின் இரண்டு ஆண்டிற்கு முன்பு அதாவது இறப்பதற்கு முன்பு எவ்வாறு இருந்தான் என ஓவியமாக வரைந்து காட்டுமாறு கேட்டான்.

அதற்கு அவர் என்னால் ஒருவரின் எதிர்காலத்தை ஒருமுறையே கணித்து வரைய முடியும் என கூறினார். அதனை நம்ப முடியாமல் வரதன் தனது வருங்காலம் 15 நிமிடத்தில் அதாவது 11 மணி நள்ளிரவில் இன்று எவ்வாறு இருப்பேன் என சாமர்த்தியமாக கேள்வி கேட்க அந்த முதியவர் அதை வரையவில்லை எல்லோருக்கும் ஒரே ஆச்சிரியம். அப் போது வரதன் 15 நிமிடத்தில் இருந்து விடுவானா? என கேட்டனர். அதற்கு அவர் ஆம் என தன் தலையை அசைத்தார். பின்பு நண்பர்கள் வியப்பு நிறைந்த ஆச்சரியத்துடன் முதியவரை பார்த்தனர் அவர் ரயில் பெட்டியில் இருந்து கீழே இறங்கும் இடத்திற்கு நடந்து சென்றார்.

படபடவென நெஞ்சு அடித்தது கடும் கோபத்துடன் வரதன் அந்த முதியவரை அடிக்க சென்றான். ரயில் பெட்டியானது அந்த குகை பாலத்தில் நுழைந்தவுடன் இருட்டானது பின்பு வெளிச்சம் வந்தவுடன் தான் தெரிந்தது வரதன் கால் தவறி ரயிலிலிருந்து பாலத்தின் அடியில் விழுந்து உயிரிழந்தான் என.

அது போக அந்த முதியவரை அந்த ரயில் பெட்டியில் காணவில்லை, இது பெரிய சூழ்ச்சியாகவும் குழப்பமாகவும் இருவருக்கும் தோன்றியது.

திக்திக் நிமிடங்கள் நண்பர்கள் இருவரும் இருவரின் முகத்தை மாற்றி மாற்றி பார்க்க ஒளி விளக்கு விட்டு விட்டு எரிந்தது. தங்களது இறுதி தேதி என்றோ என அவர்களின் கண்ணில் அந்த மரணத்தின் வலியும்பயமும்தெரிந்ததுஅதைத்தொடர்ந்து சோமுவோ என் வாழ்நாள் 60 வயதிற்கு முன்பே முடிந்து விடுமா என்ற கேள்வியுடன் அவன் மனதில் குழப்பமும் தோன்றியது விடை தெரியாமல் இரண்டு நண்பர்களும் குழப்பத்தில் ஆழ்ந்து துக்கத்துடன் தங்களின் பயணத்தை மனக் கலக்கத்துடன் தொடர்ந்தனர்.

நீதி

- விதி வலியது
- ஒருவரின் ஆயுட் காலம் தெரிந்தால் வாழும் நாள் நரகமாகிவிடும்.



தன்முனைக்கவிதைகள்

# காதலிசம்



1.
நீயும் நாயும்
தீயோடு இணையலாம்
நீர் ஊற்றி அணைக்க
அனல் சிறு கானலாய்

2.
புத்தக மயில்களுக்கு
நீயும் நானும் பக்கங்கள்
மழைகாலம் தேடி
தோகையை விரிக்கும் காதல்

3.
மனம் முழுதும்
நிறைந்தவள் நீ
விழி நிரம்பி வழிகிறது
காதல் ஊற்றின் நிறைவால்

4.
அம்மாவின் சாயலில் ஒன்று
அப்பாவின் சாயலில் ஒன்று
அந்த ரோசாவை கிள்ளி
தொடக்கம் செய்தோம் காதலில்

5.
தூய்மையான காதலில்
நீ வெண்ணிலா
தூரத்தில் நிற்பதால்
நான் கார்மேகம்

6.
நீ புன்னகைத்தலில்
பூமியெங்கும் பூ வாசம்
புகை நிரம்பிய வனத்தில்
இன்றும் பூக்களின் சுவாசம்

7.
அவளும் நானும்
வண்டோடு பூவானோம்
புல்லுக்கும் பனிக்கும்
மலர்கிறது பனிக் காதல்

8.
தினம் ஒரு ஆறுதலில்
கழிகிறது புது காதல்
உணர்வுகளுக்கு செவி
வைத்தது தவறாகிற்று

9.
பூ வண்ணம்
துளி மாறியதும்
நினைவில் உதிக்கிறது
உன் முகம்

10.
உருப்படியாக ஒரு
உன்னத புன்னகை
சிரித்த நொடிகளில்
பறித்த மலரவளாய்



**கார்கவி சேகா**

---



## நினைவுகள் அலாதியானது ...

என் ஒவ்வொரு பயணத்தின் போதும்
என்னோடு  தொடரும்
உன் நினைவுகள்
என்றும் அலாதியானது ..
அதில் ஓர் நதியென
 பயணக்கிறேன் நான்
படகும் நீயே
துடுப்பும் நீயே ...!!!

**ச. இராஜ்குமார்**
திருப்பத்தூர் மாவட்டம்

# அந்தப் புன்னகையில் ஆதிரா

**கயல்விழி**
நாகை

**கா**லத்தின் நெடுஞ்சாலையில் எத்தனையோ ஓட்டங்கள், எத்தனையோ பயணங்கள், முகம் அறியாத பல முகங்கள், அனைத்தும் கடந்து செல்கிறது கானல் நீராய்... கடந்து செல்லும் பாதையில் இவளும் பயணிக்கிறாள்.

அவள் தான் ஆதிரா. வயதான பெற்றோர், தான் அடையாத உயரத்தை தம்பி, தங்கை அடைய வேண்டும் என்ற எண்ணம், வலிகளோடு நிறைந்த பாத சுவடுகள் அவள் செல்லும் வழி எல்லாம் நிறைந்து கிடக்கிறது.

கோலமிட்ட வாசல் முதல் கூட்டம் நிறைந்த பேருந்து நிலையம் வரை ஓயாமல் நடை போடுகின்றன பாதங்கள்.

அவள் கடக்கும் பாதையில் ஒரு ஒற்றை மாடி கட்டிடம். தன்னைத் தானே தாங்கி கொண்டு, தனிமையில் நித்தம் ஏந்தி கொண்டு, வேரூன்றி நிற்கிறது, அந்த ஒற்றை மாடி கட்டிடம். கூரை வீடு எப்போது மாடி வீடாக மாறும் என்று தன் தம்பி, தங்கையின் கேள்விக்கு தினமும் கடந்து போகும் அந்த கட்டிடம் ஆதிராவின் பார்வையில் நீந்தி கொண்டே செல்லும். கட்டிடத்தை மட்டும் கவனித்த உள்ளம் அங்கு உள்ள மயில் ஜன்னல் கம்பிகளுக்கு பின்னால் இருக்கும் அந்த வசீகர தோற்றத்தையும் கவனித்தது.

40 முதல் 45 வயது பெண்மணி. காலத்தின் பாதையில் எப்போதும் ஓயாது ஓடிய கால்களை காலம் பார்த்து, காலமே பொறாமை கொண்டு, ஓடியது போதும் ஓய்வெடு என்று சொல்லும் அளவிற்கு மாறியது அவள் கால்கள். இன்னல்களை கடந்து செல்லும் மனம், வாதத்தையும் கடந்து சென்றது.

சக்கர நாற்காலியில் வாழ்க்கை தொடங்கியது இலட்சமிக்கு. கணவனை இழந்த கண்ணீர் மங்கை, குழந்தை இல்லா நங்கை. நான்கு சுவற்றில் அடைபட்டு கிடக்கும் அவளுக்கு தனிமையில் இருந்து விடுபட கிடைத்தது அவளுக்கு எழுத்துக்கள். பல பேரை கடந்து செல்லும் மனம், ஆதிராவையும் கவனித்து செல்கிறது.

வாடிய பூ போல அவள் முகம், இரத்தத்தை வியர்வையாய் உறிஞ்சும் வேலை, ஓயாது ஓடி வலுவிழந்த கால்கள்., இன்னும் ஓடியே ஆக வேண்டும் என்ற எண்ணம். கடந்து செல்லும் ஒரே சாலையில், இருவரும் பார்வையில் மிதந்து செல்கின்றனர்.



ஒருநாள் பார்வை, மறுநாள் கவனிப்பு. இப்படியே மாதங்கள் ஓட, சற்று புன்முறுவலும் வலம் வருகிறது இருவர் பார்வையிலும். தனிமையில் நித்தம் ஏங்கி தவளும் இலட்சுமிக்கு, ஆதிராவின் சிறு புன்முறுவல் தாளாத இன்பம். நாளாக நாளாக புன்முறுவல் நீண்டு கொண்டே செல்கிறது. எழுத்துகளோடு உறவாடிய இலட்சுமிக்கு, ஆதிராவின் புன்முறுவலும் சில கனம் உறவாடிச் சென்றது.

கணப்பொழுது இன்பம் காலத்திற்கு பொறுக்கவில்லை போலும். தொலைந்தது ஆதிராவின் புன்முறுவல். பிள்ளையை தொலைத்த அன்னை உள்ளம் போல தேடியது இலட்சுமியின் மனம். எவ்வளவு தேடியும் காணவில்லை.வீட்டை மட்டும் வட்டமடித்த நாற்காலி, காலை வேளையில் தன் தெருவையும் வட்டமடிக்கும் போது, அவள் நடை போடும் சாலையின் சுவற்றில் எதார்த்தமாய் தென்பட்டது கண்ணீர் அஞ்சலி காகிதம்.

யாரென்று உற்று நோக்கினால் தொலைத்த உள்ளம். கடலென பொங்கியது கண்ணீர், இறுகியது மனம். பார்த்தது ஏனோ சில நாள், ஆனால் பல நாள் பழகிய பார்வை, கணப்பொழுதில் கண்கள் மட்டும் பேசிய மொழி, காலம் முழுவதும் துணையாய் இருப்பேன் என சொல்லும் நம்பிக்கை விழிகள் இமை மறித்தன.

"சாலைகள் நீண்டன...
அவள் பாதம் பட்ட இடங்கள்
பலர் பாதம் தொட்டது...
சன்னல் அவ்வப்போது திறந்தது...
இருந்தாலும் பதட்டம் மீளவில்லை...
கண்ணீர் குறையவில்லை...
இன்றும் புன்னகை
சிந்திக் கொண்டே இருக்கிறாள்...
கால்நடைகள் உண்ணாத...
சுவற்றின் மேல் கிழிந்த காகிதமாய்...
அந்தப் புன்னகையில் ஆதிரா..."

## இனிக்கும் வாழ்வெதுவோ?

மரணத்தை தோளில்
சுமந்துக் கொண்டே
நம்பிக்கையோடு கடக்கிறோம்
வாழ்வை!

நேற்றைய நிலையினை
நெஞ்சம் மறந்தே
மனிதனில் பார்க்கிறோம்
ஏற்றத்தாழ்வை!

தொடங்கிய போது
இருந்திட்ட உள்ளம்
தொடரும் போது
இருப்பது இல்லை!

வஞ்சம் துரோகம்
தோன்றிய பின்பு
அகத்தில் அன்பு
நிலைப்பது இல்லை!

மனிதனை கொன்று
மனிதனை வென்று
என்ன சாதித்தோம்
மண்ணில் கூறு!

உனது பயணம்
முடிந்ததன் பின்னே
உலகின் இயக்கம்
நிற்குமா பாரு!

ஒருநாள் வாழும்
பூக்களும் கூட
புன்னகை சிந்தி மடிகிறது!

கொட்டும் ஈக்களும்
உலகுக்கு மருந்தாய்
தேனை வழங்கி மகிழ்கிறது!

காக்கை குருவி
கிடைப்பதை உண்டு
எப்படி வாழ்ந்திட முடிகிறது!

மனிதனின் மனம் மட்டும்
இரக்கத்தை காட்ட
இணக்கமாய் வாழ மறுக்கிறது!

உள்ளத்தில் அன்பும்
செயலில் தெம்பும்
இருந்தால் வாழ்க்கை இனிக்கிறது!

**- லீ. லியாகத்அலி**

முனைவர் ஓசூர் மணிமேகலை

# உணர்வுகளின் புரிதலே வெற்றி!

தொலைக்காட்சியில் செய்தி ஓடிக்கொண்டிருந்தது. வழக்கம்போல் அன்றாட நிகழ்வாகப் போய்விட்டது பாலியல் வன்முறைச் செய்திகள். கூடத்தில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த பாட்டி, 'தெரியாமலா அந்தக் காலத்துல சொன்னாங்க.. பொம்பளப் பிள்ளையைப் பொத்தி வளக்கணும்.. ஆம்பளப் பிள்ளைய அடிச்சு வளக்கணும்னு.. நாங்கள்லாம் அப்படித்தான் வளர்த்தோம்.' என்று தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டே புலம்பினாள்.

'அம்மா சொல்வது சரிதான். இன்று தோளுக்கு மேல் வளர்ந்து நிற்கும் தன் மகனையும் மகளையும் எண்ணிப் பார்த்து கொண்டே கணிணியில் தன் பணியைத் தொடர்ந்தான் பாட்டியின் மகன் ராம்.

தன் பெண் கல்லுரிக்குச் சென்று தினமும் பத்திரமாக வரவேண்டும். ஐ.டியில் பணிபுரியும் தன் மகன் எந்தத் தப்புத் தண்டாவிலும் மாட்டிக் கொள்ளக் கூடாது என்று மனதிற்குள் எண்ணியபடியே சமையலறையில் இரவு உணவைத் தயாரித்துக் கொண்டிருந்தாள் பாட்டியின் மருமகள் அகிலா.

'பாட்டி.. பொம்பளைப் பிள்ளையை ஏன் பொத்தி வளக்கணும். நாங்களும் பசங்களுக்குச் சமமா இருக்கோம். அவங்கள விட சாதிக்க முடியும்னு நிரூபிச்சுட்டு இருக்கோம்' என்று பேத்தி ஆதிரா கேட்கவும் 'அதானே.. ஆம்பளப் புள்ளய மட்டும் ஏன் அடிச்சு வளக்கணும்... சமம்மா இருக்கும் போது...' என்று கிண்டலடித்தான் கவின் .

'இல்லப்பா.. இப்ப இருக்குற காலக் கொடுமைய என்ன சொல்றது.. எங்க பாத்தாலும் மோசமான செய்தி.. பொம்பளப் புள்ளைகளுக்குப் பாதுகாப்பில்லையே.. அதனாலதான் சொன்னேன்' என்ற பாட்டியை இடைமறித்து 'இல்ல பாட்டி..ஒரு சில இடங்கள்ல நடக்குது. உண்மைதான். ஆனா எல்லா இளைஞர்களும் அப்படியில்ல. எத்தனை இளைஞர்கள் சமுதாய அக்கறையோட இருக்காங்க.. சாதிக்கிறாங்கன்னு தெரியுமா உங்களுக்கு...' என்றாள் ஆதிரா.

'ஆமாம் பாட்டி.. இன்னிக்கு இருக்குற அறிவியல் வளர்ச்சியில, தானும் ஒரு விஞ்ஞானி ஆகணும், பொருளாதார நிபுணராகணும், விளையாட்டுத் துறையில உலக சாதனை பண்ணனும்.. இப்படி பல துறைகளில சாதிச்சுக் காட்டணும்னு எத்தனை இளைஞர்கள் கடுமையா உழைக்கிறாங்க தெரியுமா..' என்றான் கவின் .

தன் பிள்ளைகள் பேசுவதைப் பெருமையுடன் கேட்டுக் கொண்டே கூடத்திற்கு வந்தனர் ராமும் அகிலாவும்.

'ஆமாம்மா.. இந்த உழைப்பிற்குக் காரணம் ஒழுக்கம்தான். ஒழுக்கம் இல்லேன்னா இத்தனை உயரத்துக்கு அவங்களால வர முடியாது' என்றான் ராம்.

'ஆனா இந்த ஒழுக்கக்கேடான செயல்களைச் செய்றதுக்குக் காரணம் அவங்களுக்குச் சரியான வழிகாட்டல் இல்லேங்க..அதான்..' என்ற மனைவியைப் பார்த்து 'சரியாச் சொன்ன.. எல்லாக் காலத்துலயும் வழிகாட்ட தலைவர்கள் , பெரியவங்க , ஆன்றோர்கள் இருக்கத்தான் செய்றாங்க... இருந்தும்... சின்னப் பசங்க... ஸ்கூல் பசங்க போலீஸ் ஆபீசரக் குத்திக் கொன்னத நெனச்சாலே மனசு பகீர்னு எரியுது...' வேதனைப்பட்டார் ராம்.

'ஆமாம்ப்பா.. நம்ம மட்டும் நல்லா இருக்கணும்னு நெனக்காம மத்தவங்களையும் நல்வழிப்படுத்தணும்ப்பா... தான் உண்டு தன் வேலை உண்டுன்னு இருக்காம வெளிய மத்தவங்களோட சமுதாய நலனைப் பத்திப் பேசுங்க.. பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லுங்க.. தன் வீடு, தன் குடும்பம், டி.வி, போன், வசதின்னு வெளிஉலகத்துல என்ன நடக்குதுன்னு அக்கறையில்லாம இருந்ததாலதான் இப்படி இந்தச் சமூகம் மாறிப் போயிடுச்சு.. நம்மள யாரும் கவனிக்கலன்னு திசை மாறிப் போயிட்டாங்க....' கவலையோடு

'கரெக்ட் பாட்டி.. பெரியவங்க மட்டுமில்ல நாங்களும்எங்கபொறுப்பைஉணரணும்.யூட்யூப், குறும்படம், வாட்ஸ்அப், போன்ற மீடியா மூலம் நல்ல விஷயங்களை மோட்டிவேட் பண்றோம் பாட்டி.ஒருஇயக்கமாகவே இதைநடத்துனாதான் கெட்ட வழியில் போகும் இளைஞர்களை மாற்றி நல்ல எண்ணங்களை உருவாக்க முடியும்... 'உணர்ச்சிவசமாக மகன் பேசுவதைக் கேட்ட அகிலா' ஆமாம்ப்பா.. பேச்சோட இல்லாம இதைநீங்க செயல்படுத்தணும்.. ஒழுக்கம்தான் உயர் வைத் தரும்னு இந்தக் காலப் பிள்ளைங்க உணரணும்' என்றாள் அகிலா.

'இனிமேல் கல்லூரியில நடக்குற மேடை நிகழ்ச்சிகள், கருத்தரங்கம் எல்லாத் துலயும் நான் கலந்து நல்ல விஷயங்கள எடுத்துச் சொல்லப் போறேம்மா... ' என்றாள் ஆதிரா.

'அது மட்டும் போதாதுப்பா... இப்பல்லாம் புத்தகம் வாசிக்கிற பழக்கமே இல்ல. நாங்கள்லாம் நெறயப் படிக்காட்டாலும் நெறயப் புத்தகங்களை வாசிச்சோம். அந்த வாசிப்புப் பழக்கம் இல்லாதது கூட இந்த ஒழுக்கமற்ற செயலுக்குக் காரணமா இருக்கலாம்...' என்று ஆதங்கப்பட்டாள் பாட்டி.

மறுநாள் அலுவலகப் பணி முடிந்தவுடன் கவினும் அப்பா ராமும் பல சமூக அமைப்புகளில் தொண்டாற்ற தங்கள் பெயரைப் பதிவு செய்து பணியைத் துவக்கினர்.

ஆதிரா கல்லூரி முதல்வரிடம் அனுமதி பெற்று, மாணவர் சங்கத்தின் மூலம் பல பள்ளிகள் கல்லூரிகளுக்கும், பொது மக்களைச் சந்திக்கவும் திட்டமிட்டாள்.

அகிலா குடியிருப்பு நலச் சங்கத்தின் மூலம் கடமையாற்றவும், பாட்டி ஆலோசனைகள் அளித்து வழிகாட்டவும் முடிவெடுத்தனர்.

மாற்றம் நம்மிடம் தொடங்க வேண்டும் என்பது அவர்களின் குறிக்கோளானது. ஒழுக்கத்தில் இளைஞர்களின் பங்கை உணரச் செய்த பாட்டிக்கு அனைவரும் நன்றி கூறினர். உணர்வுகளின் புரிதலே வெற்றியானது. ■

முகக் கவசங்கள்
முகத்தை மறைக்கிறது
பள்ளித் திறப்பால்
புன்னகை ததும்புகிறது

**தா. உமா**

# சாதிகள் இல்லையடி பாப்பா




## அ.நிஷா

வேதியல்துறை சுப்ரமண்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி


அன்றொருகாலம் இந்தியாவில் வாழ்ந்த மனிதர்கள் வெள்ளையனின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு சாதி என்னும் சங்கிலியில் தன் கைகளையும், கால்களையும் தானே பூட்டிக்கொண்டனர். தான் பூட்டிக்கொண்டது மட்டுமல்லாமல் தன் அருகே வாழும் சக மனிதர்களையும் சாதி என்னும் சங்கிலி தன்னைச் சுற்றிக் கொண்டால்தான் முன்னேற முடியுமென்று நம்ப வைத்தனர்.

சாதியைத் தூக்கி திரியும் மானுட சமூகமே தூக்கி எறி உன் சாதியை. சாதியை வைத்து எதையும் உன்னால் சாதிக்க முடியாது. மானிடா நீங்கள் பல தெய்வங்களை வணங்குகிறீர்கள் அந்த தெய்வங்களுக்குள் ஏதேனும் பகைமை உள்ளதா? அப்படி பகைமை இருந்திருந்தால் இந்த உலகம் சம நிலையில் இருந்திருக்காது. நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கும் தெய்வங்களுக்குள் பகைமை ஏதும் இல்லை. அப்படி இருக்கும் போது மனிதர்களுக்குள் ஏன் இந்த வேற்றுமை?

என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் என்ற உண்மைக் கூற்று இறந்தகாலம் ஆயிற்று. இப்பொழுது இங்குள்ள வளம் என்னவெனில் இளைஞர்கள் கூட்டமும், கல்வியுமே. இவற்றை வைத்து நம் நாட்டை எப்படி முன்னேற்ற முடியும் என்பதையே நாம்சிந்திக்க வேண்டும்.

ஒரு தொற்று நோய் நம்நாட்டிற்குள் வந்தால் கூட அதிலிருந்து நம் நாட்டை மீட்பதற்கான மருந்துகள் நம் நாட்டில் இல்லை, ஒரு குழந்தை ஆழ்துளை கிணற்றில் விழுந்தால் விழுந்த குழந்தையைக்காப்பாற்றும் அறிவியல் கண்டு பிடிப்புகள் நம்மிடம் இல்லை.

ஆனால் இவற்றை எப்படி மாற்றுவது என்று நாம் சிந்திக்காமல் நம் சாதி பெருமையைப்பற்றியே பேசிக் கொண்டுள்ளோம். நம் நாட்டில் கல்வி என்னும் ஏணி உள்ள போது அதில் ஏறி நாம் முன்னேறிச் செல்லலாமே! அதை விடுத்து சக மனிதனை துன்பறுத்தி அவனை குனிய வைத்து அவன் மேல் ஏறிச்செல்வது எந்த விதத்தில் நியாயம்? மனிதாபிமானம் என்பது சுனாமியின் போதோ அல்லது பூகம்பத்தின் போதோ உதிப்பதல்ல. அது நம் உதிரத்தில் ஊறிப்போனது.

ரோமானிய நாட்டில் ரோமனாக இரு என்று ஒரு பழமொழி உள்ளது. உடைத்தெறி அந்த பழமொழியை. ரோமில் ரோமனாக வாழ்வதற்கு இது ஒன்றும் ரோமானியப் பேரரசு கிடையாது.

இது சுதந்திர பாரதம். மனிதனாக மாறு! மனிதத்தை பாடு! சாதிகள் இல்லையடி பாப்பா! சாதிக் கொடுமைகளுக்கு போடுவோம் தாழ்ப்பாள்.

# ஒபூர் காக்கா

## புத்தளம் – ஸாலிஹ் அலீம்

அவசரமாக வந்த ஓடரை செய்துக் கொடுப்பதற்காக தேவையான பொருட்களை வாங்கி வருவதற்காக வேகமாக துவிச்சக்கர வண்டியை மிதித்துக் கொண்டு டவுனுக்குச் சென்றேன். அதே வேகத்தில் அவைகளை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்துக் கொண்டிருந்தப்போது இடையில் சந்தித்தார் ஒபூர் காக்கா

அவர் என்னுடைய பழைய நண்பர் எனது முன்பிருந்த வீட்டுக்கிட்டேயிருந்த பலசரக்கு கடையொன்றில் அவர் வேலை பார்த்தப்போது அறிமுகமானவர் அக்கடை நஷ்டத்தில் இயங்கத் தொடங்கியதும் அதனை இழுத்து மூடியபோது தன்னுடைய மிதிவண்டியில் பெட்டியொன்றினை கட்டிக் கொண்டு மீன் வியாபாரம் செய்தார். அந்த வியாபாரம் முடிந்து ஓய்வு கிடைக்கும் போது என்னுடைய வீட்டுக்கு வந்து நல்லது கெட்டதுகளை பற்றி என்னுடன் பரிமாறிக் கொள்வார். தேர்தல் நேரங்களில் வாக்களிப்பதற்கு கூட எதற்கு யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்றும் என்னிடம் கேட்டுதான் முடிவெடுப்பார்.

அவர் திருமணம் முடித்து பத் தாண்டுகள் கடந்தும் பிள்ளை பாக்கியம் கிடைக்கவில்லை. இதனால் மிகவும் கவலை யுடன் அது பற்றி பேசுவார். அவருடைய தாய்க்கு அவர்மட்டும்தான் பிள்ளை யென்பதால் அவரின் மேல் அத்தாய் அளவுக் கடந்த அன்பு வைத்திருந்தார். அவரும் அப்படித்தான் அவளில் உயிரையே வைத்திருந்தார்.

சிறு சிறு கூலிவேலைகளை பார்த்துக் கிடைக்கும் வருமானத்தினையும் அந்தத்தாய் மகனுக்குத்தான் செலவு செய்வாள் அவரும் அவளை குளிக்கவைப்பதும் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு தேவையான இடங்களுக்கு கூட்டிச் செல்வதுவென்று மிகவும் பாசத்துடன்தான் இருவருமிருந்தனர்.

அப்படி அவர்கள் இருப்பது அவரு டைய மனைவிக்கு சற்றும் பிடிக்க வில்லை. இதனால் மாமி மருமகள் சண்டைக்கு அங்கு பஞ்சமேயிருக்கவில்லை. பலத் தடவை அவர்கள் சண்டையில் நான் நடுவராக இருக்க வேண்டியும் வந்திருக் கின்றது. அவர்கள் என்னுடைய சொல்லை ஓரளவுக்கு கேட்பார்கள் நமது நட்பு மிகவும் இறுக்கமாக வளர்ந்துக் கொண்டு வந்தது.

அவர் கொஞ்சம் பயந்த சுபாவ முடையவர் இதனால் என்ன பிரச்சினை என்றாலும் என்னிடம்தான் சொல்வார் நானும் அவரின் மனநிலையை புரிந்துக் கொண்டு அதற்கு ஏற்றமாதிரி ஆறுதல் சொல்வேன். அதனால் என்னை அவருக்கு நிறையப்பிடிக்கும்.

ஒருநாள் என்னைத்தேடி எனது வீட்டுக்கு வந்தவர்

'நாங்கள் ஒரு பிள்ளையை தத்தெடுத்து வளர்ப்பது என்று முடிவெடுத்திருக்கிறோம்.' என்றார். அதனைக் கேட்ட நானும் அதற்கு 'ஆமாமம் அது நல்ல விஷயம்தானே' என்று உற்சாகப் படுத்திவிட்டேன். அவரும் அவ்வாறு ஒரு ஆண் குழந்தையை தத்தெடுத்து வளர்க்கத் தொடங்கினார். நானும் திருமணம் முடித்து சற்று தொலைவில் சென்றதனால் நாம் அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பம் குறைந்துவிட்டது.

கொஞ்சம் நீண்ட நாளைக்கப்புறம் இப்பதான் மீண்டும் சந்திக்கிறேன்.

'என்ன ஒபூர் காக்கா சுகமா இருக்கீங்களா...?' என்றேன் அதற்கவர்

'அது என்னத்தை கேட்கிறீங்க.... வளர்த்த மகன் உம்மாவுக்கு வாயில அடித்து போட்டான் இரத்தம் வந்தது' என்று அவர் சொல்ல

'என்ன சொல்றீங்க உம்மாவுக்கு அடித்து போட்டானா என்ன பழக்கமிது பிறகு உங்களுக்கும் அடிப்பான் அப்போது நீங்க என்ன செய்வீங்க...' எனறு நான் சொல்ல

'உம்மாவுக்கு கொடுத்தேன் பேச்சு அவன் சின்ன பிள்ளைதானே ஏதாவது செய்தால் கண்டபடி உம்மா அவனை திட்டுறாள் அது நல்லதில்லைதானே அவன் சின்னப்பிள்ளைத்தானே' என்று வளர்ப்பு மகனுக்கு பக்கமாய் கதைக்கவும் எனக்கு மிகவும் கவலையாகயிருந்தது அந்தக் கவலையுடனே

'என்ன ஒபூர் காக்கா இப்படி சொல்றீங்க இண்டைக்கு உங்க உம்மா வுக்கு அடிக்கிறவன் நாளைக்கு உங்களுக்கும் அடிப்பான் அதனாலே அப்படி அடிக்க வேனாமுனு நல்ல புத்தியை சொல்லி கொடுங்க இல்லைனா பிறகு உங்களுக்குதான் கஷ்;டம்' என்றேன் சற்று கவலையுடன்.

நான் எவ்வளவுதான் அவருக்கு எடுத்துச் சொன்னப்போதும் அவரின் நியாயமில்லாத நியாயங்களிலிருந்து ஒரு வீதம் கூட அவர் பின்வாங்கவில்லை. எனவே இனி சொல்லி வேலையில்லை என்பதாலும் அவசரமாய் நான் வீடு போய் சேரவேண்டும் என்பதற்காகவும் அவரிடமிருந்து விடைபெற்று சென்று விட்டேன்.

சில ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன கடக்கரை ஓரமாய் ஒரு வேலையாக போன நான் அவ்விடத்திலே இருக்கும் ஒபூர் காக்காவின் வீடு நினைவுக்கு வர 'சரி இவ்வளவு தூம் வந்து விட்டோம் ஒருக்காய் அவரைப் போய் பார்த்துவிட்டு வருவோமுனு நினைத்துக் கொண்டு அவரின் வீட்டுக்குப் போனே;.

அப்போது என்னை வரவேற்றவர்

'உங்கட வாயில சீனியத்தான் அள்ளிப் போடனும் நீங்கள் சொன்னதைப் போலவே இப்போது எங்களுக்கும் அடிக்கிறான். என்ன செய்வதென்றே தெரியவில்லை' என்று ஒபூர் காக்கா கவலைப்பட

அவரின் முதுகில் தட்டிவிட்டப்படி இருக்கையில் அமர்ந்துக் கொண்டேன். ■

எதையும் தாங்கும்
மனப்பக்குவம் இல்லை
ஆசைகள் ஒவ்வொன்றும்
நிராகரிக்கப் படும்போது

கிடைத்த பொருளுக்கு
மனதில் மதிப்பில்லை
அதனை இழக்கும்போது
அந்த பொருளை தேடுகிறது

தீராத கோப
குமுறல்கள் அகத்திலே
அதனால் விளைகிறது
தேவையற்ற வலிகள்

**பவித்ரா**

# மேலோர்

1
சுட்டாலும் வெண்மைதரும் சங்காய் எந்தச்
சூழலிலும் மேன்மக்கள் கேட்டைத் தாரார்
இட்டாலும் ஏற்காது வாழ்வார் மேலோர்
எதுவந்த போதும்கை நீட்டார் யார்க்கும்
கிட்டாத அரும்பொருளே வந்தால் கூட
கீழ்ச்செயலில் ஈடுபட மாட்டார் போற்றும்
எட்டாத நற்குணத்தால் சிறப்பார் பாரில்
எந்நாளும் உயரத்தில் இருப்பார் மேலோர்
2
புறங்கூறி எந்நாளும் திரியார் வாழ்வில்
பூப்போன்ற நல்லெண்ணம் கொண்டே வாழ்வார்
அறங்கூறும் நல்வழியில் செல்வார் செல்வம்
அடியோடு போனாலும் குணத்தில் மாறார்
நிறம்மாறா நன்னிறத்தால் சிறப்பார் சாயம்
நிற்காது போனாலும் எண்ணம் மாறார்
திறமையினால் முன்னேறி வெல்வார் பாரில்
திறனோங்கிச் செல்வோரைப் போற்றச் செய்வார்!
3
பாலோடு நெய்கலந்தாற் போல அன்பில்
பண்புடைமை கலந்தொழுகி வாழ்வார் சேலை
நூலோடு இணைகின்ற கற்பைப் போல
நுண்ணறிவால் சிறந்தொழுகிச் செல்வார் மேலோர்
காலோடும் பாதையிலே செல்லார் மின்னும்
கண்ணோடும் பாதையிலும் நில்லார் வெல்லும்
கோலோடு பூமியிலே நின்று போற்றும்
கொள்கையிலே நல்லொழுக்கம் பேணி வாழ்வார்!
4
பிறன்பொருளைக் கைக்கொள்ள மாட்டார் வெட்டிப்
பெருமையெலாம் தன்வாயால் பேசார் பாரில்
பிறன்மனையை ஒருநாளும் நோக்கார் பேசும்
பேச்சினிலும் வெம்மையினைக் கலவார் நாளும்
பிறர்நலத்தில் அக்கறையைக் கொள்வார் உள்ளம்
பேதலித்துக் கொடுஞ்செயலில் இறங்கார் நன்றாய்ப்
பிறர்வாழ இன்னுயிரும் ஈவார் மேலோர்
பிழையேதும் செய்யாது பெருமை சேர்ப்பார்
5
பிறப்பாலே வருவதன்று மேன்மை மேலோர்
பேணுகின்ற நற்செயலால் வருமாம் மேன்மை
நிறத்தாலே வருவதன்று மேன்மை மேலோர்
நெஞ்சுறுதி நேர்மையினால் வருமாம் மேன்மை
மறத்தாலே வருவதன்று மேன்மை மேலோர்
மன்னிக்கும் நற்குணத்தால் வருமாம் மேன்மை
இறப்பாலே வருவதன்று மேன்மை மேலோர்
இறவாது வாழ்வதனால் வருமே மேன்மை!




**இராம வேல்முருகன்**
வலங்கைமான்



# அன்பே வந்து விடு!

அன்பே!
நீ - இல்லாத
இந்த இரவு
இருண்டுதான் கிடக்கும்
என் பகலின் நிலவு,
என் இரவின் சூரியன்
நீயாதலால்...

உன் காதலில்
கட்டுண்டு
உன் பாசத்தில்
சிக்குண்டு
உன் மோகமயக்கத்தில்
உயிர் காய்ந்து
உணர்விழந்தேன்...

அன்பே!
நீ வராமல் போன
பகலின் பாதியும்
வெறிச்சோடிக் கிடக்கிறது...

எனக்கு மட்டும்
இறக்கைகள் இருந்தால்
காததூரம் எல்லாம்
கணத்தில் கடந்துன்னைத்
தரிசித்திருப்பேன்...
என் காதலைக்
கொட்டியிருப்பேன்...

தூர நெளிந்து செல்லும்
இந்த ஒற்றையடிப்பாதையில்
எத்தனை நாள்
தனிமையில் நான் தவம் கிடப்பது?
எப்போது நாம் கைகோர்த்து நடப்பது?

பரந்து விரியும்
வானமளவு அன்புடன்
ஆறாய்ப் பிரவாகமெடுக்கும்
காதலுடன்
காத்திருக்கிறேன்...
உன் வரவுக்காய்!

இறுக்கமான
இந்தத்தனிமை
எனக்குத்தந்த
காயங்கள்... எத்தனை?
சோகங்கள்... எத்தனை?

வற்றாத ஊற்றாகி
வழிகின்றன - உனக்கான
என் கவிதைகள்...
காதலுடன்!

ஆதலால்
அன்பே! வந்து விடு
இதயம் தந்து விடு!

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஏப்ரல் 2022



## இனிய
## தமிழ் புத்தாண்டு
## வாழ்த்துக்கள்

இந்த ஆண்டு
இனிய ஆண்டாக
அமையட்டும்!

■ அமின் மொஹமெட் ■ முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி ■ சஃபி மொஹமெட் ■ ஹிப்ஸீர் ரஹ்மான் ■ கவிஞர் பாலமுனை பாறூக் ■ கவிஞர் நெல்லை உலகம்மாள் ■ பாவலர்மணி இராம வேல்முருகன் ■ பாவலர் தென்றல் கவி ■ வெண்பா வேந்தர் ஏடி வரதராசன் ■ கவிஞர் பொன்மணிதாசன் ■ கவிஞர் அ. முத்துசாமி ■ கவிஞர் ஈழபாரதி ■ பாட்டரசர் கி. பாரதிதாசன் ■ கவிதாயினி சக்தி ஜோதி ■